Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு


# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2278)

முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 17 செவ்வாய்க்கிழமை (30.04.2013) பக்கங்கள் 20 ஓசை - 212













# காணி சுவீகரிப்பிற்கு எதிராக வலி. வடக்கில் ஆர்ப்பாட்டம்




வலி. வ்டக்கில் படையினரின் தேவைக்கென மேற்கொள்ளப் படும் காணி சுவீகரிப்பிற்கு எதி ராக நேற்றைய தினம் தெல் லிப்பழை பிரதேச செயலகத் திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 7.30 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணிவரை இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நேற்றைய தினம் ஆர்ப்பாட்டம் நடந்த வேளை சுன்னாகம் மதவடியிலிருந்து ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற பிர தேச செயலகம் வரையான பிர தேசத்தின் பாதுகாப்பு பொலி ஸாரால் பலப்படுத்தப்பட்டிருந்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர் கள் மு.ப. 11.00 மணியளவில் பொலிஸ் காவலையும் மீறி பிர தேச செயலகத்திற்குள் நுழைய முற்பட்டனர். எனினும் பிரதேச செயலக வளாகத்திலிருந்த கல கமடக்கும் பொலிஸார் வாசலில் வைத்து அவர்களை தடுத்து நிறுத்தினர்.

இதனையடுத்து தமது காணி களுக்கு செல்லவேண்டுமென காங்கேசன்துறை வீதி வழியாக உயர் பாதுகாப்பு வலயத்தை நோக்கிச் சென்றவர்களை தெல் லிப்பழை பொலிஸ் நிலையத் திற்கு அருகில் வைத்து கலக மடக்கும் பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

மீளவும் பிரதேச செயலகத்தி னுள் நுழைவதற்கு மக்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

## அரசுக்கு எதிராக கடும் தீர்மானம்

### முஸ்லிம் காங்கிரஸ்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக எதிர்வரும் மே மாதம் 7 ஆம் திகதி கடுமையான தீர்மான த்தை மேற்கொள்ளவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

கட்சியின் தேசிய அமைப் பாளர் சபீக் ரஜாப்டீன் இத னைத் தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் நாடாளு மன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெறும் கட்சியின் உயர் பீடக் கூட்டத்தில் இந்தத் தீர் மானம் எடுக்கப்படவுள்ளதாக ரஜாப்டீன் குறிப்பிட்டார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## போராட்ட முறைகளில் மாற்றங்கள் அவசியம்

### - கூறுகிறார் சுமந்திரன் -



(தெல்லிப்பழை)

நாம் சமாதானமான சூழ் நிலையில் போகவேண்டிய சூழ் நிலையில் உள்ளோம். எனவே போராடுகின்ற முறைமைகளில் மாற்றங்கள் தேவையென தமி ழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந் திரன் தெரிவித்தார்.

நேற்றுக் காலை தெல்லிப் பழை பிரதேச செயலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையி லேயே அவர் இதனைத் தெரி வித்தார்.

அவர் அங்கு மேலும் தெரி விக்கையில்,

நாம் சமாதானமான சூழ் நிலையில் போகவேண்டிய நிலை யில் உள்ளோம். இன்றைக்கு நாங்கள் போராடுகின்ற முறை மைகளில் மாற்றங்கள் தேவை.

19 ஆம் பக்கம் பார்க்க

## ரணிலுடனான சந்திப்பில் எவ்வித பயனும் இல்லை

### மன்னார் பிரஜைகள் குழு அதிருப்தி

(மன்னார்)

எதிர்க்கட்சித் தலைவர் ரணி லுடனான சந்திப்பு மன்னார் மக்களுக்கு எந்தவிதமான பிர யோசனத்தையும் ஏற்படுத்தவில் லையென மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை ஈ.செபமாலை தெரிவித்துள்ளார்.

மன்னார் ஆயரின் முன்பாக மன்னார் பிரஜைகள் குழுவைச் சேர்ந்தவர்கள் நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து அவ ரிடம் மன்னார் மாவட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து முறையிட்டனர்.

பிரஜைகள் குழுவின் ஏற்பாட் டின் பேரில் மன்னாரில் காணா மற் போனவர்களின் உறவினர் களும் தமது குறைகளை அவரிடம் முன்வைத்தனர்.

அது குறித்து பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இ.செபமாலை தெரிவிக்கையில், தாம் காணிகள் பிரச்சினைகள்

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையில் கொமன்வெல்த்; அதிர்ச்சியடையும் ஐ.நா. நிபுணர்

(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் கொமன்வெல்த் மாநாடு நடைபெறுமென அறி விக்கப்பட்டிருப்பது தமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள தாக ஐ.நா. நிபுணர் யஸ்மின் சூகா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போரின் இறு திக்கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, விசாரிக்க ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூன் நியமித்த நிபு ணர்களில் ஒருவரான தென்னா பிரிக்காவைச் சேர்ந்த யஸ்மின் சூகா, இலங்கை தனது சொந்த மக்களுக்கு எதிரான மீறல்களை

19 ஆம் பக்கம் பார்க்க

## ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மே தினக் கூட்டம் கிளிநொச்சியில்

### அனைவரையும் அணிதிரள அழைப்பு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி கூட்டுறவுக் கல்லூரி மண்டபத்தில் 2013 மே தினக் கூட்டத்தை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி நடாத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

தொழிலாளர் உரிமைகளையும் தமிழ்பேசும் மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளையும் தேசிய நல்லிணக்கத்தையும் வலியுறுத்தி இந்த மேதினக் கூட்டம் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் தொழிலாளர் அமைப்புக்களும், பொது அமைப்புக்களும் சமூக நேயச் செயற்பாட்டாளர்களும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ள னர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## மக்களின் வாழ்க்கைச் சுமையை குறைக்கக் கோருகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

மின்கட்டண உயர்வு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைத்து நாட்டு மக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைக்க அரசாங்கம் நடவ டிக்கை எடுக்க வேண்டுமே தவிர கண்துடைப்புச் செய்து மக்களை ஏமாற்ற வேண்டாமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சா ளருமான கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று ராஜகிரியவில் இடம்பெற்ற போது அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆணை வழங்கிய மக்க ளுக்கு இன்று அரசாங்கம் துரோ கம் இழைக்கின்றது. மக்களைப் பற்றிச் சிந்திக்காமல் தனது எண் ணப்படி அனைத்து திட்டங்களை யும் அரசாங்கம் நிறைவேற்று கின்றது.

இந்த சிந்தனை அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 8 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் மக் களின் நலனில் எவ்வித அக்க றையும் காட்டவில்லை. அரச நிறு வனங்களில் ஊழல் மோசடிகள்

19 ஆம் பக்கம் பார்க்க

உள்ளே...
உயர் தரத்துக்கான புள்ளியியல்



# விவசாயிகளின் வாரிசுகளுக்கு விசேட புலமைப்பரிசில் திட்டம்

## மேலும் விஸ்தரிக்க முடிவு



யாழ்.மாவட்ட விவசாயத் துறைசார்ந்து உழைத்து வரும் விவசாயிகளின் பிள்ளைகளுக்கு கமநல சேவைகள் அபிவிருத் தித் திணைக்களத்தின் மூலம் வரு டந்தோறும் வழங்கப்பட்டுவரும் புலமைப்பரிசில் திட்டத்தினை எதிர்காலத்தில் மேலும் விரிவாக் கம் செய்வதற்கு ஈழமக்கள் ஜன நாயகக் • கட்சியின் செயலாளர் நாயகமும், பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரு மான் டக்ளஸ் தேவானந்தா நட வடிக்கை எடுத்துள்ளார்.

இதன்பிரகாரம் தனது கட்சி நிதியிலிருந்து அடுத்த வருடம் முதல் 10 இலட்சம் ரூபாவினை இதற்கென ஒதுக்குவதாக அமைச் சர் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட கமநல சேவை கள் அபிவிருத்தித் திணைக்க ளம் ஏற்பாடு செய்திருந்த விவ சாயத்துறைசார்ந்த உறுப்பினர் களுக்கிடையிலான புதுவருட தின பாரம்பரிய கலை மற்றும் விளையாட்டுப் போட்டிகளும் மேற்படி புலமைப்பரிசில் வழங் கும் நிகழ்வும் நேற்றைய தினம் புத்தூரில் அமைந்துள்ள உரக் களஞ்சியத் தொகுதி வளாகத்தில் நடைபெற்றது.

கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் பற்றிக்டிறஞ்சன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியா கக் கலந்துகொண்டார்.

விவசாயத்துறை சார்ந்த குடும்ப மாணாக்கர்கள் தெரிவு செய்யப்பட்ட நிலையில் கடந்த 2008 ஆம் வருடம் முதல் இப்புல மைப பரிசில்களை மேற்படி திணைக்களத்தின் வாயிலாகப் பெற்று வருகின்றனர். இதன் பிர காரம் இவ்வருடமும் 24 மாண வர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

புலமைப் பரிசில்களைப் பெறும் மாணாக்கர்களின் எண் ணிக்கையை அதிகரிக்கும் முக மாகவும் இத்திட்டத்தை எதிர்கா லத்தில் மேலும் விரிவாக்கம் செய் யும் முகமாகவும் கட்சி நிதியி லிருந்து வருடாந்தம் 10 இலட் சம் ரூபாவை ஒதுக்கித் தருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன்போது தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில் வேஸ்திரி அலன்ரின் (உதயன்), முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் தவராசா, ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), வலி. கிழக்கு பிரதேசசபை உறுப்பினர் லிங்கேஸ் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# இரணைமடு குடிநீர் விநியோகம்; கிளி. விவசாயிகளுக்கு அறிவுரை

(கிளிநொச்சி)

இரணைமடு குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கான நீர்ப்பாசன செயற்றிட்டம் தொடர்பான விவ சாயிகளுக்கு விழிப்புணர்வூட்டும் கருத்தரங்குகள் கிளிநொச்சி மண்டபத்தில் நடைபெற்றுவரு கின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை நடை பெற்ற இக்கருத்தரங்கு நேற்று திங்கட்கிழமை காலையும், மாலை யும் நடைபெற்றது. இதேவேளை எதிர்வரும் 3 ஆம் திகதி வெள் ளிக்கிழமை இராமநாதபுரத்தில் நடைபெறவுள்ளது. கிளிநொச்சி, உருத்திரபுரம், இராமநாதபுரம் ஆகிய பிரதேசங்களிலுள்ள கம நலசேவை நிலையங்களில் நடைபெறும் இக் கருத்தரங்கில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 23 கமக்கார அமைப்புக்க ளைச் சேர்ந்த விவசாயிகள் 8 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றது.

இதன்படி எதிர்வரும் 3 ஆம் திகதி இராமநாதபுரத்தில் இக் கருத்தரங்கு நடைபெறவுள்ள துடன் இக்கருத்தரங்கில் நீர்வழ ங்கல் மற்றும், சுகாதாரம், இர ணைமடு அணையை மேம்படுத் தல் போன்ற விடயங்கள் பற்றி விவசாயிகளுக்கு விளக்கமளிக் கப்படுகின்றன.

மாகாண விவசாயத் திணைக் களமும், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையும் இணைந்து இக்கருத்தரங்கை முன்னெடுத்து வருகின்றன.

மேலும் இக்கருத்தரங்கில் சமூக மயப்படும் கிராமிய நீர் வழங்கல் திட்டத்தினூடான செயற பாடுகள் தொடர்பாகவும் விவசா யிகளுக்கு விழிப்புணர்வு ஏற் படுத்தப்பட்டு வருகின்றன.(28)

# பாடசாலைத் தோட்டம் ஊக்குவிக்க திட்டம்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் கிளிநொச்சி கல்வி வலயத்தில் பாடசாலைக ளில் தோட்டம் அமைப்பதற்கா கத் தெரிவுசெய்யப்பட்ட 5 பாட சாலைகளுக்கு விவசாய உப கரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி கிளிநொச்சி ஆனந் தபுரம் கலைமகள் வித்தியால யம், கண்டாவளை மகாவித்தியா லயம், தர்ம்புரம் மகாவித்தியால யம், பிரமந்தனாறு மகாவித்தியா லயம் ஆகிய 5 பாடசாலைகளு க்கே விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதில் மண் வெட்டி, நீர் பாய்ச்சும் உபகரணம் உள்ளிட்ட 2 இலட்சம் ரூபா பெறு மதியான உபகரணங்கள் 5 பாட சாலைகளுக்கும் வழங்கப்பட் டன. (28)

# மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு காரைநகர் பிரதேச சபையில் காரசாரம்

காரைநகர் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று திங் கட்கிழமை காலை 10.00 மணி க்கு காரைநகர் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பல்வேறு பிரச சினைகள் குறித்து விரிவாகவும் காரசாரமாகவும் ஆராயப்பட்டது. இக்கூட்டம் ஆரம்பமானதன் பின் னர் சபை எதிர்க்கட்சித் தலைவர் கண்ணன் (றஜனி) காரைநகர் பிர தேசத்திலுள்ள மீன் சந்தை, மற் றும் கடைகள் சுகாதார சீர்கேட்டு டன் இயங்கி வருவதாகவும் இத னால் மக்கள் பல்வேறு பிரச்சி னைகளுக்கு முகங்கொடுக்க நேரி டுவதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.


அத்துடன் சந்தை மற்றும் கடைகளுக்கான வரிகள் ஒழுங் கான முறையில் சபையால் அற விடப்படுகின்ற போது சுகாதார நடவடிக்கைகள் குறித்து கவனம் செலு த்தப்படாமல் இருப்பதாக அவர் தனது கருத்தை முன்வை த்தார். மேலும் பலதடவை பொதுச சுகாதாரபரிசோதகரிடம் தெரிவித் துள்ளதாகவும் இது தொடர்பாக சபையில் கலந்துரையாடுவதற் காக அவரை அழைத்திருப்பதா கவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரி வித்தார்.

இதற்குப் பொதுச்சுகாதார பரிசோதகர் இப்பிரதேசத்திலு ள்ள உணவு கையாளும் நிலை யங்களில் சுகாதார நடவடிக்கை கள் குறித்து பரிசோதனை நடத் தச் சென்றால் தவிசாளரின் தலை யீட்டால் நடவடிக்கை மேற்கொள ளப்படாமல் போவதாகத் தெரி வித்தார்.

இதற்கு தவிசாளர் கோப மடைந்ததுடன் ஹெப்பிட்டிப் பொலவில் உள்ள உணவு கையா ளும் நிலையங்கள் எவ்வளவு சுகாதார சீர்கேட்டுடன் இயங்கு கின்றன. அவை விற்பனை நடவ டிக்கைகளில் ஈடுபடவில்லை எனத் தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவர் காரைநகர் பற்றிக் கதை த்தால் ஹெப்பிற்றிக் கொலவை பற்றி கதைக்கிறீர்கள் எனக் கூற இருவருக்குமிடையிலும் வாய்த் தர்க்கம் ஏற்பட்ட நிலையில் போப மடைந்த தவிசாளர் கதிரையை விட்டு எழுந்து எதிர்க்கட்சித் தலை வருக்கு அடிக்க கை ஓங்கியதா கவும் பின்னர் அவர் தனது அறை கருள் சென்றுவிட்டதாகவும் கூட் டம் அத்துடன் நிறைவு பெற்றதா கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் இவ்வாறு கார சாரமான விவாதம் நடை பெற்ற போதும் ஏனைய ஆளும் கட்சி உறுப்பினர்கள் எதுவும் கதைக் காது மௌனம் சாதித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பொது இடங்களில் புகைத்தல் அதிகரிப்பு கேட்பார் யாரும் இல்லையா?




(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பொது இடங்களில் புகைப்பிடிக் கும் நடவடிக்கைகள் இடம்பெ ற்று வருவதால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரி விக்கின்றனர்.

பொது இடங்களில் புகை பிடிக்கத் தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில் இங்கு கடைகளிலும் சந்தைகளிலும் மற்றும் பொது மக்கள் அதிகம் கூடும் பகுதிக ளிலும் இவ்வாறு சிலர் புகை பிடிப்பதால் ஏனையவர்கள் குறிப் பாக பாடசாலை மாணவர்கள் பல் வேறு கஷ்டங்களை எதிர்கொள் வதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ்வாறு பொது இடங்க ளில் புகைபிடிக்கும் நபர்கள் குறித்து சட்ட நடவடிக்கையினை உரிய அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரி க்கை விடுக்கின்றனர்.



வட்டு. மேற்கு மாதர்கிராம அபிவிருத்திச் சங்கம் நடாத்திய மகளிர்தின விழாவின் போது இந்தியன் வங்கியின் முகாமையாளர் மற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மங்கள விளக்கு ஏற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களையும் காணலாம்.

# சமூக அங்கீகாரத்தின் ஊடாக இளையோரை நல்வழிப்படுத்தலாம்

- கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன்

(யாழ்ப்பாணம்)

இளையோருக்குச் சமூக அங்கீகாரத்தை வழங்குவதன் மூலம் அவர்களை நல்வழிப் படுத்தலாம். இன்று எங்கள் சமூகத்தில் வாழும் பெரியவர்கள் இளையவர்களுக்குப் போதிய அங்கீகாரத்தை வழங்குவதில்லை. அவர்கள் நெறி தவறிச் செல்வதாகக் குற்றஞ் சாட்டுவதிலேயே பலரும் குறியாக இருக்கின்றனர் எனத் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் தெரிவித்தார்.

மிருதங்கப் பேராசான் கலா பூஷணம் க.ப. சின்னராசாவின் மாணவனும் இணுவில் இளந் தொண்டர் சபை மாணவனும் பொறியியலாளருமாகிய கலா வித்தகர் ச.பிரணவனின் மிருதங்க அரங்கேற்ற நிகழ்வு கடந்த சனிக்கிழமை இணுவில் சிவகாமி அம்பாள் திருமண மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்,


இளைஞர்களின் திறமைகளை இனங்கண்டு அவர்களை அங்கீகரிக்கும் மனோபாவத்தைப் பெரியவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். அந்த அங்கீகாரத்தைப் பெறுவதற்கு வசதியாக இளையவர்களும் தங்களுக்குக் கைவரக்கூடிய திறனொன்றை வளர்த்துக்கொள்ள வேண்டும். இந்த வகையில் கலைத்திறன் ஒன்றில் தேர்ச்சி பெற்றிருப்பது வாய்ப்பானதாகும்.

இன்று எங்கள் பிள்ளைகள் கலைத்திறனை வளர்த்துக் கொள்வதற்குப் போட்டித் தன்மை வாய்ந்த பாடசாலைக் கல்வி முறைமையே தடையாக இருக்கின்றது. கல்வியில் காணப்படுகின்ற போட்டித் தன்மையின் செல்வாக்கால் தனியார் கல்வி நிறுவனக் கல்விக்காக அதிக நேரத்தைச் செலவிட வேண்டிய நிலையில் மாணவர்கள் உள்ளனர்.

கலைத்திறன் கற்கைகளால் தங்கள் பாடசாலைக் கல்வியில் பின்னடைவு ஏற்பட்டுவிடுமோ எனவும் பலர் அஞ்சுகின்றனர். இதற்குப் பரிகாரமாக இணுவில் கிராமத்தவர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை நாம் முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும்.

இணுவில் இளந்தொண்டர் சபையினர் கல்வி நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் தமது கலைத்திறன் கற்கைகளை நடாத்தி வருகின்றனர். ஒவ்வொரு மாணவனும் தனக்கு வசதியான நேரத்தில் ஆசிரியரை அணுகிக் கலைக்கற்கையை மேற்கொள்ள ஆவன மேற்கொண்டுள்ளனர். இதனாலேயே இளந் தொண்டர்சபை தற்போது ஒன்பதாவது அரங்கேற்றத்தை நடத்த முடிந்திருக்கிறது.

பொறியியலாளராக விளங்கும் இன்றைய அரங்கேற்ற நாயகன் தனது பொறியியல் கற்கைகளுக்கு அப்பால் கலைத்திறன் மீது அதீத நாட்டங் கொண்டுள்ளார். கலைகள் கவலையைப் போக்கி மனதிற்கு இன்பம் அளிக்கும் சக்தி வாய்ந்தவை. கலைகளை அனுபவிப்பதே ஒரு தனியின்பமாகும் என்றார். (10)





கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 57 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு கைதடிக் கிராம இளைஞர்கள் இரத்ததானம் செய்வதனைக் காணலாம். (21)

## குடிநீர் நிறுத்தம் மக்கள் அசௌகரியம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதான வீதியூடாக மேற்கொள்ளப்படும் நீர் விநியோகம் இரண்டு நாட்களாக இடைநிறுத்தப்பட்டுள்ளதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

யாழ்.நீர்ப்பாசனத் திணைக் களத்தினால் யாழ்ப்பாணத்திலிருந்து பிரதான வீதியூடாக காழும்புத்துறை நோக்கிச் செல்லும் பிரதேசங்களுக்கு நேற்று முன்தினம் மாலையில் இருந்து நேற்று அதிகாலை வரை நீர் விநியோகம் நடைபெறாததால் மக்கள் குடிநீரைப் பெறமுடியாத நிலை காணப்பட்டது.

இந்நீர் விநியோகம் மூலம் குடிநீர் பெறும் மக்கள் இவ்விரண்டு வேளையும் நீர் வராமையால் பெரும் சிரமத்தின் மத்தியில் பொதுக்கிணறுகளில் தமது தேவைகளுக்காக குடிநீரைப் பெறவேண்டிய நிலை ஏற்பட்டதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். (21)

## சைவச் சிறுவர்களின் ஓவிய, புத்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கலாசாலை வீதியிலுள்ள சைவச்சிறுவர் இல்ல சிறுவர்களின் ஓவிய, புத்தகக் கண்காட்சி இடம்பெற்று வருகிறது.

நேற்று முன்தினம் மாலை 5 மணியவில் இக்கண்காட்சி ஆரம்பமாகியது. வித்தியா விருத்திச்சங்கத் தலைவர் சோ. பத்மநாதன் இக்கண்காட் சியை ஆரம்பித்துவைத்தார். நேற்று முன்தினம் ஆரம்பமான இக் கண்காட்சி நேற்று மாலை 5.00 மணிவரை இடம்பெற்றது.

## தென்மராட்சி வலயமட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே வலய மட்டத்தில் நடத்தப்படும் தமிழ்த்தினப்போட்டி முடிவுகள் வலயக்கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

இலக்கணப் போட்டி

பிரிவு II

த.கஜந்தினி (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), ப.சர்வோதினி (யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலம்), சு.சஜீபன் (யா/வரணி மகா வித்தியாலயம்).

நாடக ஆக்கம்

பிரிவு I

ஆ.கிருஷாந்தினி (யா/உசன் இராமநாதன் மத்திய மகா வித்தியாலயம்), வ.வினோஜா (யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), வி.நிஷாந்தினி (யா/மிருசுவில் அ.த.க.பாடசாலை).

குறுநாடக ஆக்கம்

பிரிவு II

அ.கார்த்திகா (யா/வரணி மகா வித்தியாலம்), து.துஷானா (யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்) ச. ஆர்த்திகா (யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயாக் கல்லூரி).

திறனாய்வுப் போட்டி

ஞா.கார்த்திகா (யா/வரணி மகா வத்தியாலயம்), ர.அனுசாளினி (யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்),

சிறுகதை ஆக்கம்

பிரிவு I

சி.சரண்யா (யா/மட்டுவில் சந்திர மௌலீசா வித்தியாலயம்), த.அபிராமி (யா/நாவற்குழி மகா வித்தியாலயம்), க.கஸ்மி (யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி).

பிரிவு II

பா.ஜெனித்தா (யா/மட்டுவில் சந்திரபுரம் ஸகந்தவரோதயா மகா வித்தியாலயம்), கு.சிந்தூரியா (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கு.வாசுகி (யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலம்).

பிரிவு III

பி.பிரேமிஷா (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஸ்ரீ. நிரேகா (யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்), ஸ்.லீன் (யா/நாவற்குழி மகா வித்தியாலயம்). (முற்றும்) (11)

## எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தால் தமிழியல் விருதுக்கு விண்ணப்பம்

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தினால் வருடம்தோறும் நடத்தப்படும் தமிழியல் விருது வழங்கலின் 2013 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கலுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் ஆண்டுதோறும் ஈழத்திலும், வெளிநாடுகளிலும் வாழ்கின்ற ஈழத்து தமிழ்ப் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வண்ணம் தமிழியல் விருது வழங்கி வருகிறது.


அந்த வகையில், இலக்கிய மேம்பாட்டுக்கு உரமாய் உழைத்த மிகச்சிறந்த மூத்த படைப்பாளி ஒருவருக்கு எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய ஸ்தாபகர் ஓ.கே.பாக்கியநாதன் உயர் தமிழியல் விருது வழங்கிக் கௌரவிக்கப்படும்


தமிழ் இலக்கிய மேம்பாட்டிற்கு உரமாய் உழைத்த மூத்த படைப்பாளிகள் 10 பேருக்கு வவுனியூர் ஸ்ரீ ராமகிருஷ்ணா கமலநாயகி தமிழியல் விருதுடன் தலா 15,000 ரூபா பணப் பரிசிலும் வழங்கிக் கௌரவிக்கப்படும்.

2012 ஆம் ஆண்டுக்கான தமிழியல் விருதுக்கான நூல்களை தேர்வு செய்ய படைப்பாளிகளிடமிருந்து நூல்கள், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தால் எதிர்பார்க்கப்படுகின்றது.

நாவல், சிறுகதை, கவிதை, குழந்தை இலக்கியம், சிறுவர் நாடகம், அறிவியல், வரலாறு, பழந்தமிழ் இலக்கியம், மொழிபெயர்ப்பு, தொழில்நுட்பம் என பல்துறை சார்ந்த நூல்களையும், தேர்வுக்காக அனுப்பிவைக்கலாம்.

2012 ஜனவரி 1 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 இற்கு இடைப்பட்ட காலத்தில் பிரசுரிக்கப்பட்ட நூல்களில் 3 பிரதிகளை டாக்டர் கே.குணநாதன் மேலாளர், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், 64 கதிர்காமர் வீதி அமிர்தகழி மட்டக்களப்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (10)





காத்தான்குடி கதீப்மார் இமாம் குழுவினர் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு இன நல்லுறவையும், சாந்தி, சமாதானத்தையும் நிலைநாட்டும் நோக்கோடு யாழ். ஒஸ்மானியாக் கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்டபோது மாணவர்களுக்கு நல்லொழுக்கத்தைப் போதிப்பதையும், பாடசாலை அதிபரிடம், நூல்த் தொகுதியை வழங்குவதையும் காணலாம். (105)

உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அதுபோல மனதுக்குப் பயிற்சி புத்தக வாசிப்பு!

- சிக்மண்ட் ஃப்ராய்ட்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## ஒவ்வொரு உயிரும் தான் கண்ட ஒளியில்...

பாடப்புத்தகங்களும் படிப்பும் சடங்காக மாறிவிட்ட அல்லது மாற்றிக்கொண்டுவிட்ட சூழலில் வாழ்கிறோம். கல்வி என்பது வேலை கிடைப்பதற்கான ஒரு சடங்காக கருதப்பட்டுக் கொண்டிருக்கிறது. கல்வி வெறும் வாழ்க்கை வசதிக்கான கடவுச்சீட்டல்ல, பிரபஞ்ச அதிசயங்களை உணர்ந்து கொள்ள அதன் மர்மங்களில் பிரயாணிக்க ஒரு துடுப்பு என்பதனை மாணவர்களை உணரச் செய்யவேண்டும். அதற்கு கல்வி இன்று கொண்டுள்ள நிலைப்பாட்டினையே மாற்றியமைக்க வேண்டும்.

பாடசாலைக்கு வெளியே விரிந்து கிடக்கும் வாழ்வு பற்றி எதுவும் உணர்த்தும் திறனில்லாக் கல்வியைக் கரைத்துக் குடித்துவிட்டு வெளியேறும் நம் இளைஞர்கள், நமக்கு வெளியேயுள்ள சமூகங்கள் பற்றியோ உலகங்கள் பற்றியோ பார்வையின்றி ஒற்றைப் போக்குச் சிந்தனைகளுடன் சுருங்கிவிடுகிறார்கள். பாடசாலைகள், பல்கலைகளிலிருந்து தொழிலுக்குத் தேவையான பட்டங்களை மட்டும் பெறுபவர்களாகிறார்கள்.

இவர்களில் பலர் அறிவியல் படிப்பு, கல்வித்தகைமை என்பதெல்லாம் முழுக்க முழுக்க தங்களை மற்றவர்களிடமிருந்து உயர்த்திக் காட்டவும் பீற்றிக் கொள்ளவுமான ஓர் அடையாளம் மட்டுமே என்று கருதுகிறார்கள். எனவே அறிவியல் மனப்பான்மையோ சமூக மனப்பான்மையோ வளராமல் ஆவேசம் – வெறுப்பு – வன்முறை மனப்பான்மைகளையே வளர்த்தவர்களாக உள்ளார்கள்.

சமூகத்தில் மற்றவர்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதோ, பன்மைத்துவ இணைவு வாழ்வுக்கு நாம் நம்மை மாற்றிக்கொள்ள வேண்டியது பற்றியோ நாம் பொருட்படுத்தாதவர்களாக இருக்கிறோம். வளர்ந்த மேற்குலக நாடுகள் பல்லின பல்கலாசார வாழ்வுக்காகவும், பல வேறுபட்ட மக்களின் கூட்டிணைவின் அழகுக்காகவும் வருடாவருடம் பல தேசங்களைச் சார்ந்த பல கலாசாரங்களைச் சார்ந்த மக்களுக்கு தங்களது நாட்டில் குடியுரிமையை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

நாமோ அடுத்தவரைச் சகித்து, அவர்களைப் புரிந்துகொண்டு இணக்கம் கண்டு வாழ்வதற்கான மனப்பழக்கத்தை நமக்குள் ஏற்படுத்திக்கொள்ள இன்னமும் முயல்கிறவர்களாக இல்லை. வெறுப்பையும் பகையையும் வளர்த்து எதிரெதிர் நிலைகளில் சிந்தித்து வாழ்வை நரகமாக்கிக் கொள்ளும் வீம்பையே பெருமையாக நினைக்கிறோம். பிரபல கன்னட எழுத்தாளரான சிவராம காரந்த 'அழிந்த பிறகு' நாவலில் ஓரிடத்தில் சொல்கிறார்:

"என் நம்பிக்கை எனக்கு, உங்களுடையது உங்களுக்கு. நீங்கள் சொல்வதே உண்மையாக இருக்கலாம். நான் சொல்வதே உண்மையாகவும் இருக்கலாம். அல்லது இருவருமே தவறாகவும் இருக்கலாம். அல்லது நம்முடைய எண்ணப்போக்கில் உண்மையும் பொய்யும் கலந்தும் இருக்கலாம்... எப்படியிருந்தாலும், உங்கள் வாழ்க்கை, உங்கள் சிந்தனை நமது மக்களுக்கு கிடைக்க வேண்டும். அதற்காகவே நீங்கள் எழுத வேண்டும். நாம் எவ்வளவுதான் அறிஞர்களாக இருந்தாலும், ஒவ்வொரு உயிரும் தான் கண்ட ஒளியில் நடந்து செல்வதே நியாயம். நம் அனைவரின் ஒருங்கிணைந்த வாழ்வுக்கு நாம் செலுத்த வேண்டிய கடன் அது. இதுவே உறுதி, அதுவே உறுதி என்று மற்றொருவரின் கழுத்தை நெரித்து, பேச்சைக் கட்டுப்படுத்துவது சமுதாயத்தையே அழிப்பதாகும்..."

ஜனநாயகத்தின் இந்த முக்கிய பண்பை நம் கல்வி நமக்குத் தரவில்லை என்றே தோன்றுகிறது. அதனால்தான் 'படித்தவர்களை'யும் 'அறிவாளிகளை'யும் கொண்டதாக நம்பிய நம் சமூகம் தனது அழிவைத் தடுக்கவோ, அழிவிலிருந்து மீளும் வழிகளைக் காணவோ, அடுத்த சமூகங்களுக்கு இணையாக நகரவோ முடியாமல் அல்லாடுகிறது.

கற்கை என்பது நாம் சமூகத்தை, உலகத்தை, இன்றைய உலக யதார்த்தத்தைப் புரிந்தவர்களாக விரிவடைவதற்கே உதவ வேண்டும்.

- ஆசிரியர்

# ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கக்கோரி பாடசாலைக் கூரை மீதேறி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பொத்துவில் பாக்கியாவத்தை அல்கலாம் முஸ்லிம் வித்தியாலயத்தின் ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்குமாறு கோரி பாடசாலை மாணவர் ஒருவரின் தந்தையொருவர் பாடசாலையின் இரண்டுமாடி கட்டடத்தின் கூரை மீது ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

நேற்றுக்காலை ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தை அடுத்து அப்பிரதேசத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளதுடன் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பாடசாலையில் ஆசிரியர் மற்றும் வளப்பற்றாக் குறைகளை தீர்க்குமாறு கடந்த புதன்கிழமை பெற்றோர், மாணவர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றினை செய்தனர்.

இருப்பினும் நேற்று இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என்று அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளரின் வாக்குறுதியை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டனர்.

இந்நிலையில் நேற்றுக் காலை 7 மணியளவில் பாடசாலை மாணவர் ஒருவரின் தந்தை பாடசாலையின் இரண்டு மாடி கட்டடத்தின் கூரை மீது ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்.

# சீனாவிலிருந்து இறக்குமதியாகும் சோயா புண்ணாக்குக்குத் தடை

(கொழும்பு)

சீனாவிலிருந்து சோயா புண்ணாக்கு இறக்குமதி செய்வதற்குத் தடை விதிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. உலகளாவிய ரீதியில் வியாபித்துவரும் பறவைக் காய்ச்சல் வைரஸ் இலங்கைக்குள் பிரவேசிப்பதை தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் குமார டி சில்வா தெரிவித்துள்ளார்.

பறவைக் காய்ச்சல் வைரஸ் பரவியுள்ள சீனா உள்ளிட்ட நாடுகளில் இருந்து கால்நடை உற்பத்திகள் உள்ளிட்ட பொருட்கள் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். பறவைக் காய்ச்சல் வைரஸ் புண்ணாக்குடன் கலந்திருப்பதற்கான வாய்ப்புள்ளதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அதன் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

சோயா புண்ணாக்கு கோழிகளுக்கான தீனியாக பயன்படுத்தப்படுவதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அதிவேக வீதியில் இருவர் பலி

(கொழும்பு)

தெற்கு அதிவேக வீதியின் பின்னதுவ பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கொட்டாவையிலிருந்து காலி நோக்கி பயணித்த வான் ஒன்று நேற்று அதிகாலை விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வாகனம் வீதியை விட்டு விலகி பத்கேம வதுர வீதியில் குடைசாய்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# டெங்கு ஒழிப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதி உரியவகையில் பயன்படுத்தப்படவில்லை

(கொழும்பு)

கடந்த வருடம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி முழுவதும் குறித்த தேவைக்காக உரிய வகையில் பயன்படுத்தப்படவில்லை என குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. அரசினால் கடந்த வருடம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக 300 மில்லியன் ரூபா நிதி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. எனினும் கடந்த ஆண்டு டெங்கு ஒழிப்பிற்காக 27 மில்லியன் ரூபா மட்டுமே செலவிடப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. இந்நிலையில் கடந்த வருடம் 44,000 பேர் டெங்கு நோய்த் தாக்கத்திற்கு உட்பட்டிருந்த அதேவேளை 225 பேர் டெங்கு நோய்க்கு பலியாகினர்.

இவ்வாறு அதிகளவான டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்தமைக்கு, டெங்கு ஒழிப்பிற்காக ஒதுக்கப்பட்ட நிதியை உரிய வகையில் பயன்படுத்தாமையே காரணம் என சுகாதார தொ[illegible] சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 10,000 டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

அதேவேளை 15 பேர் டெங்குக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளனர். டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் எவரும் இதுவரை குறித்த வேலைத்திட்டம் தொடர்பான அறிக்கைகள் எதனையும் அரசிடம் முன்வைக்கவில்லை எனத் தெரியவந்துள்ளது.

# கிளிநொச்சி அறிவியல் நகரில் விவசாய பீடம் ஆகஸ்டில் ஆரம்பம்

**பேராசிரியர் எஸ்.மிகுந்தன்**

(கிளிநொச்சி)

யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் ஒரு பகுதி கல்வி நடவடிக்கையை ஆகஸ்ட் மாதத்தில் கிளிநொச்சியில் ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக பேராசிரியர் எஸ்.மிகுந்தன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாக இயங்கிவருகின்ற விவசாயபீடத்தை கிளிநொச்சி முறிகண்டி அறிவியல் நகரில் அமைந்துள்ள கட்டடத்தில் ஆரம்பிப்பதற்குரிய திருத்த வேலைகள் நடைபெற்று வருகிறது.

எனினும் மாணவர்கள் விடுதிக்குரிய வேலைகள் நிறைவு பெறவில்லை இதேவேளை பொறியியல் பீடத்தை இவ்வருடம் ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி இவ்வருடம் பொறியில் பீடத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட ஐம்பது மாணவர்களை முதற்கட்டமாக கிளிநொச்சி பொறியியல் பீடத்தில் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை, இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் கட்டட வேலைகள நடைபெற்றுவருவதுடன், இதற்கு இந்திய அரசாங்கம் 300 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

மேலும் கிளிநொச்சி விவசாயம் மற்றும் பொறியியல் பீடம் அமையும் பகுதியை நகர அபிவிருத்தித் திட்டமாக மாற்றுவதற்கு ஆயிரத்து ஐந்நூறு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் பேராசிரியர் எஸ்.மிகுந்தன் மேலும் தெரிவித்தார்.

# 3 பிள்ளைகளின் தந்தை சடலமாக கோப்பாயில் மீட்பு

தூக்குப்போட்டு இறந்ததாகத் தெரிவிக்கப்படும் மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவரது சடலம் நேற்றுப்பிற்பகல் கோப்பாய் பொலிஸாரினால் யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரும்பிராயைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் சிவரூபன் (வயது - 40) என்ற குடும்பஸ்த்தரே இவ்வாறு இறந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. நேற்றுக்காலை 7.30 மணியளவில் உரும்பிராய்ப்பகுதியில் உள்ள அவரது வீட்டில் இவ்வாறு தூக்குப்போட்டு இறந்த நிலையில் சடலத்தை கோப்பாய் பொலிஸார் மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்ததாகவும் மேலும் தெரியவருகின்றது.

(பா)

# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்

**37**


**வே.அர்ச்சுணன்**

விடுதலைப் புலிகள் இயக்கம், குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் பாடசாலை அதிபராக இருந்த சமயம் அவர் மீது தொடர்ச்சியாக அவதானம் செலுத்தி வந்தபோதிலும் இவர் கிளிநொச்சி மகாவித்தியாலயம், கிளிநொச்சியில் அதன் சொந்த இடத்தில் இயங்கிய காலப்பகுதியில் புலிகள் இயக்கத்திற்கு அளித்துவந்த பெரியளவிலான ஆதரவு மற்றும் புலிகளின் முக்கிய தளபதிகள், போராளிகள் போன்றோர் இவர் அதிபராக இருந்த குறித்த பாடசாலையில் கல்வி கற்றமையால் தளபதிகள், போராளிகள் மத்தியில் அவருக்கு செல்வாக்கு இருந்து வந்தது. அதுவும் குறிப்பாக, பிரபாகரனின் பிள்ளைகள் இப்பாடசாலையில் கல்வி கற்றமை காரணமாக கூடுதலான செல்வாக்குடன் குறித்த அதிபர் இருந்து வந்த போதிலும் பின்னய நாட்களில் இவரின் செயற்பாடுகள் தொடர்பில் புலிகள் அதிருப்தி அடைந்த நிலையில் இவரைக் கண்காணிக்க வேண்டிய தேவை உருவாகியது.

புலிகள் இயக்கம் தற்போது செல்கின்ற பாதை சரியாக இல்லையே என்று கூறி விமர்சனம் செய்துவந்த இந்த நாடாளுமன்ற உறுப்பினர், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து தப்பி ஓடுவதற்கு முடிவெடுத்து ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தார். அதாவது படையினர் விசுவமடுவைக் கைப்பற்றி தொடர்ந்து முன்னேற முயற்சிகளை மேற்கொண்ட சமயத்தில் இவர் உடனடியாகவே தனது குடும்பத்துடன் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு சென்றடைந்தார்.

இந்த இடத்தில் இன்னுமொரு விடயத்தைக் குறிப்பிடுவது பொருத்தமானது என நினைக்கிறேன். அதாவது படையினர் தமிழர்களின் நிலப்பரப்பில் ஒரு சிறிய அளவையேனும் கைப்பற்ற இடமளிக்கமாட்டோம் எனவும், வன்னயில் ஆக்கிரமிப்பு எண்ணத்துடன் அகலக் கால் வைக்கும் படையினருக்கு வன்னியிலேயே புதைகுழி அமைப்போம் என்றெல்லாம் முழக்கமிட்ட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து தற்போது புதிய கட்சியின் செயலாளராகக் கடமையாற்றும் இன்னொரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தனது சகோதரனை அவசர அவசரமாக வன்னிப் பகுதியில் இருந்து படைக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு பக்குவமாக மீட்டெடுத்த அதேவேளை பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவுடன் இரகசியப் பேச்சு நடத்தி தனது சகோதரனின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் தேடிக்கொண்டார். இந்த நாடாளுமன்ற உறுப்பினர்தான் ஒரு தடவை 30ஆயிரம் சிங்களப் படையினரின் சடலங்களை சவப் பெட்டிகளில் பொதிசெய்து தென் இலங்கைக்கு அனுப்பி வைப்போம் என வீரவசனம் பேசி பல்கலைக்கழக மாணவர்களையும், பொதுமக்களையும் உசுப்பேத்தியிருந்தார். இவர்தான் பொங்குதமிழ் நிகழ்வின் கதாநாயகனாகவும் வலம் வந்தார்.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்பிலும் கடைசி நாட்களில் புலிகள் இயக்கம் கடுப்புடனேயே இருந்து வந்தது. அதாவது ஏனைய பிள்ளைகள், ஏனைய தமிழ் உறவுகள் போராடி மடிந்தாலும் தனது சகோதரன், தனது குடும்பத்தினர் எவருமே பாதிக்கப்படக்கூடாது என்பது தொடர்பில் இவர் உறுதியாக இருந்து ஏனையவர்களை பலிக்கடாவாக்க வேண்டுமென்ற சிந்தனையில் செயற்பட்டமை, தமிழ் மக்களிடையே இவர்மீது கடுமையான கோபத்தை ஏற்படுத்தி இருந்தது. இதன் வெளிப்பாடாக இறுதியாக இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இவர் போட்டியிட்ட போதிலும் மக்கள் இவரை நிராகரித்து வீட்டிற்கு பக்குவமாக அனுப்பி வைத்தனர்.



அதைவிட புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இருந்தும் இவர் ஓரம் கட்டப்பட்டார். இவ்வாறு கூட்டமைப்பில் இருந்து ஓரம் கட்டப்பட்டதன் பின்னரே இவர் புதிய கட்சி ஒன்றை தொடங்கி தமிழர்களை காக்கும் காவலர்கள் தாங்கள் மட்டும்தான் என்று அதே பழைய உசுப்பேத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறார்.

இவ்வாறு புலிகளை நேசிப்பவர்கள் போன்று நடித்து பின்னய நாட்களில் புலிகளை விட்டுவிலகி இருந்த இவர்கள் இன்று மீண்டும் தாங்களே புலிகளின் விசுவாசிகள் என்று கூறி வலம் வரத்தொடங்கி இருப்பதை மக்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக கிளிநொச்சியை மையமாக வைத்து அரசியல் நடத்தும் கூட்டமைப்பின் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அதிபருமானவர், கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் தான் தான் என தன்னைத் தானே புகழ்ந்தவாறு பிரசாரப்பணியில் ஈடுபட்டு வருகின்றமையைச் சொல்லலாம். இது கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கின்ற ஏனைய கட்சியினருக்கு ஒரு சங்கடமான சூழலை தோற்றுவித்துள்ளதுடன் குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்பில் கடுமையான கோபத்திலும் உள்ளனர். அதுவும் குறிப்பாக இவருக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்புக்கொடுத்த சுரேஸ் தற்போது இவர் தொடர்பில் கடுமையான அதிருப்தியுடனேயே இருந்து வருகிறார்.

இவ்வாறு இவர்களுடைய குத்து வெட்டுக்கள் ஒருபுறம் இருக்க, இன்னொரு விடயத்தையும் இங்குதொட்டுச் சொல்வது பொருத்தமானதாக இருக்கும். அதாவது வன்னிப் பகுதியில் போர்க்கால அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்பட்டதை அடுத்து வன்னிப்பகுதியில் கட்டாய ஆட்சேர்ப்பு மையங்கள் பல இடங்களிலும் நிறுவப்பட்டு வந்தன. இந்தக் காலப்பகுதியில் வீட்டுக்கு ஒருவர் கட்டாயம் போராட்டத்தில் போராளியாக இணைந்திருக்க வேண்டும் என்ற சட்டம் அமுல்படுத்தப்பட்டு வந்தது. இந்தச் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துவதில் வயது வந்த மூத்த போராளிகள் பலரும் முனைப்புக்காட்டி வந்தனர். குறிப்பாக கட்டாய ஆட்சேர்ப்பின் அவசியம் தொடர்பில் விடுதலைப் புலிகளின் கவிஞர்களில் ஒருவரான புதுவை இரத்தினதுரை, மூத்த உறுப்பினர் என்று புலிகளால் அழைக்கப்பட்டு வந்த ஈரோஸ் இயக்கத்தின் முன்னாள் தலைவர் வே.பாலகுமாரன் போன்றோர் கூடுதலான முனைப்புடனும் உத்வேகத்துடனும் கட்டாய ஆட்சேர்ப்பில் ஈடுபட்டு வந்ததுடன் இந்தக் கட்டாய ஆட்சேர்ப்பை நியாயப்படுத்தி பிரசார பணிகளையும் முன்னெடுத்து வந்தனர்.

இந்தச் சூழ்நிலையில் போர் உச்சக்கட்டத்தை அடைந்து கிளிநொச்சி நகரத்தை விட்டு புலிகள் பின்வாங்கி விசுவமடுவில் நிலைகொண்டிருந்த பொழுது பின்னர் விசுவமடுவையும் படையினர் கைப்பற்றியதைத் தொடர்ந்து புலிகள் மீண்டும் கடுமையான தீவிரமான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கினர். அதாவது போராடக்கூடிய வலுவுடைய அனைவரும் போராட வேண்டும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து கட்டாய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேலும் தீவிரம் அடையத் தொடங்கியது.

இந்த நேரத்தில்தான் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களான புதுவை இரத்தினதுரை, பாலகுமாரன் போன்றவர்களின் பிள்ளைகளும் போராட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். இவ்வாறு புலிகளால் போராட்டத்தில் இவர்களது பிள்ளைகள் இணைத்துக் கொள்ளப்பட்டதை அடுத்து இவர்கள் நேரடியாகவே புதிய போராளிகளை இணைக்கும் பணியில் ஈடுபட்ட போராளிகளுடன் முரண்படத் தொடங்கினர். இவர்களுக்கிடையிலான முரண்பாடு பெரும் பிரச்சினையாக உருவெடுக்கத் தொடங்கியதை அடுத்து இந்த விடயம் தலைவர் பிரபாகரன் வரைக்கும் சென்றது. குறிப்பாக தங்களது ஆட்சேர்ப்பு நடவடிக்கைக்கு புதுவை இரத்தினதுரையும், பாலகுமாரனும் பெரும் இடையூறாக இருப்பதாக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருந்த போராளிகள் முறைப்பாடு தெரிவித்தனர். இம்முறைப்பாட்டை அடுத்து இவ்விடயம் தொடர்பில் நேரடியாக இருவருடனும் கதைக்க வேண்டுமென பிரபாகரன் சூசை ஊடாக குறித்த இருவருக்கும் தகவல் அனுப்பி வைக்கிறார். அதாவது பிரபாகரனால் குறிப்பிடப்பட்ட திகதியில் குறித்த இருவரையும் வந்து சந்திக்குமாறே அந்தத் தகவல் அனுப்பப்பட்டது. இதன் பின்னர். குறித்த இருவரும் பிரபாகரனைச் சந்தித்தனரா? அந்தச் சந்திப்பில் என்ன நடந்தது? அதை தமிழ் ஊடகங்கள் அறிந்து கொண்டனவா? அந்த சந்திப்புகளின் தொடர்ச்சியாக புலிகள் அழிவுப்பாதைக்குச் சென்றனரா? அல்லது பலம் அடைந்தனரா? என்பதைத் தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)



**படையினர் தமிழர்களின் நிலப்பரப்பில் ஒரு சிறிய அளவையேனும்.கைப்பற்ற இடமளிக்க மாட்டோம் எனவும், வன்னயில் ஆக்கிரமிப்பு எண்ணத்துடன் அகலக் கால் வைக்கும் படையினருக்கு வன்னியிலேயே புதைகுழி அமைப்போம் என்றெல்லாம் முழக்கமிட்ட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து தற்போது புதிய கட்சியின் செயலாளராகக் கடமையாற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தனது சகோதரனை அவசர அவசரமாக வன்னிப் பகுதியில் இருந்து படைக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு பக்குவமாக மீட்டெடுத்த அதேவேளை பாதுகாப்பு செயலாளர் கோத்தாபயவுடன் இரகசியப் பேச்சு நடத்தி தனது சகோதரனின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் தேடிக்கொண்டார். இந்த நாடாளுமன்ற உறுப்பினர்தான், 30ஆயிரம் சிங்களப் படையினரின் சடலங்களை சவப் பெட்டிகளில் பொதிசெய்து தென் இலங்கைக்கு அனுப்பி வைப்போம் என வீரவசனம் பேசி பல்கலைக்கழக மாணவர்களையும், பொதுமக்களையும் உசுப்பேத்தியிருந்தார்.**


# தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாண கூட்டமைப்புடன் எப்போதும் பேசத்தயார்

(கொழும்பு)

பேச்சுவார்த்தைகளுக்கு முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடாத்தத் தயார் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காண்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



அரசியல் தீர்வுத் திட்டம் குறித்த பேச்சுவார்த்தைகள் முடங்கியமைக்கு அரசாங்கமே பொறுப்பு என்ற கூட்டமைப்பின் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பேச்சுவார்த்தைக்கான கதவுகள் திறந்தே இருக்கின்றன. அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாடாளுமன்ற முறைமையின் ஊடாக தீர்வு காண வேண்டும் என கோருவதாகவும், இது தொடர்பில் கூட்டமைப்பு அஞ்ச வேண்டிய அவசியமில்லை எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

# அரசியல் சக்தியை விடவும் எரிசக்திக்கு பலம் அதிகம்



அரசியல் சக்தியை விட, எரிசக்திக்கு அதிகளவு பலம் காணப்படுகின்றது. நாட்டில் எரிசக்தி தொடர்பில் உரிய கொள்கைகள் பின்பற்றப்படாவிட்டால் அரசாங்கம் கவிழக் கூடுமென முன்னாள் மின்வலு எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். எந்தவொரு நாடும் எரிசக்தி மூலம் லாபமடைகின்றது. இவ்வாறு லாபமீட்டப்படாவிட்டால் அரசாங்கங்கள் கவிழக் கூடும். சுரங்கக் கரி காரணமாகவே இங்கிலாந்து ஸ்திரமான நிலையை அடைந்தது.பல நாடுகளில் போர் மூழ்வதற்கும் எரிசக்தி வளப் பிரச்சினை ஏதுவாக அமைந்துள்ளது. கோஷங்களை எழுப்புவதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.கொழும்பு தேசிய நூலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# 2012 இல் இ.போ.ச.விற்கு 380 கோடி நஷ்டம்

இலங்கைப் போக்குவரத்துச் சபை 2012 ஆம் ஆண்டு ரூபா 380 கோடி நஷ்டம் அடைந்துள்ளதாக மத்திய வங்கி அறிக்கை குறிப்பிடுகிறது. அதனை சென்ற வருடத்துடன் ஒப்பிட்டு நோக்கும் போது, நூற்றுக்கு 15.5 வீதத்தினால் அதிகரித்துள்ளது எனவும் அவ்வறிக்கை மூலம் அறியமுடிகின்றது.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு அரசாங்கத் திறைசேரியிலிருந்து பெருந்தொகைப் பணம் ஒதுக்கீடு செய்யப்படுவதுடன், 2012 ஆம் ஆண்டு ரூபா 360 கோடி ஒதுக்கப்பட்டது. நஷ்டம் மேற்படும் பாதைகளில் நஷ்டத்தை ஈடுசெய்யும் பொருட்டு ரூபா 220 கோடியும், சலுகைக் கட்டணத்துடன் கூடிய பிரவேசப் பத்திரங்களுக்காக ரூபா 120 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன.

# பௌத்தத்திற்கு எதிரான செயற்பாடுகள் தீவிரம்

## - ராவணா பலயகுற்றச்சாட்டு

இலங்கையில் பௌத்த மதத்துக்கு எதிரான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பௌத்த மத அமைப்பான ராவணா பலய குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு, பௌத்த சாசன அமைச்சில் முறைப்பாட்டைச் செய்துள்ளது.

அண்மைக்காலமாக முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு தமது அமைப்பின் மீது குற்றம் சுமத்தப்படுவது திட்டமிடப்பட்ட செயல் என்றும் ராவணா பலய குறிப்பிட்டுள்ளது.

இது பௌத்த மதத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என்று குறிப்பிட்டுள்ள ராவணா பலய வடக்கு கிழக்கில் பௌத்த மதச்சின்னங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளது.

# மின்சக்தி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை




(கொழும்பு)

மின் சக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை கொண்டுவர பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ளது. இது தொடர்பிலான பிரேரணை ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்காவினால் நாடாளுமன்ற செயலாளர் தமிக்க திசாநாயக்காவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான லக்மன் கிரியெல்ல, தயாசிறி ஜயசேகர, அகில விராஜ் காரியவசம், ரஞ்சன் ராமநாயக்க, சந்திரனி பண்டார மற்றும் ஆர்.யோகராஜன் உட்பட 12 பேர் கையொப்பமிட்டுள்ளனர்.

மின் சக்தி அமைச்சராகப்பதவி வகித்த சம்பிக்க ரணவக்கவினால் நிராகரிக்கப்பட்ட இந்த முன்மொழிவை அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி அமுல்படுத்தியுள்ளார். அத்துடன் இந்த சர்ச்சை தொடர்பாக அமைச்சர் சம்பிக்க அமைச்சர் பவித்ராவிற்கு எதிராக சவால் விடுத்துள்ளார் என பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை, அமைச்சர் டிலான் பெரேவிற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியினால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை இது வரை நிறைவு பெறவில்லை. எவ்வாறாயினும், அமைச்சர் ஜீ.எல். பீரிஸிற்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை 2/3 பெரும்பான்மையினால் தோற்கடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது



நாடளாவிய ரீதியில் நடைபெறவிருந்த புகையிரத வேலை நிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது. போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகளுக்கும் புகையிரத தொழிற்சங்கங்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் பேச்சு இடம்பெற்றுள்ளது. இதன் போது சம்பள முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்பதற்கு அதிகாரிகள் இணக்கம் கண்டுள்ளனர். இதனை அடுத்தே புகையிரத தொழிற்சங்கங்களின் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போலி விசாவைப் பயன்படுத்திய இலங்கையர் இந்தியாவில் கைது

போலி வீசாவைப் பயன்படுத்திய இலங்கையர் ஒருவர் இந்தியாவின் கோவா மாநில அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார். மாக்லிவம் கிர்தாஸ் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.பிரான்ஸ் நோக்கிப் பயணம் செய்ய முயற்சித்த போது குறித்த நபரை இந்திய அதிகாரிகள் கைது செய்துள்ளனர். ஸ்பெய்னில் வழங்கப்பட்டதாகத் தெரிவித்து போலி வீசா ஒன்றை குறித்த நபர் வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபரிடம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2010ஆம் ஆண்டு ஸ்பெய்ன் தூதரகத்தினால் வீசா வழங்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும் விசாரணைகளின் போது இந்த வீசா போலியானது என கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

# தரம் குறைந்த உணவால் கொழும்பில் 300 உணவகங்கள் மூடல்

உரிய தரத்தில் நுகர்வோருக்கு உணவுப் பொருட்களை விநியோகம் செய்யத்தவறிய, கொழும்பு நகரத்தில் அமைந்துள்ள சுமார் 300 உணவகங்களை மூட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.கொழும்பு நகர சபையின் மக்கள் சுகாதாரப் பிரிவு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

குறித்த உணவகங்கள் அடிப்படை சுகாதார வசதிகளையேனும் கொண்டிராமல் இருந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.அத்துடன், இவற்றுள்பல, விற்பனை சான்றிதழ்களையும் கொண்டிருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் குறித்த உணவகங்கள் தொடர்பான ஆரம்பகட்ட சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக கொழும்பு நகர சபையின் பொது மக்கள் சுகாதாரப் பிரிவால் குறிப்பிடப்பட்டுள்ளது.



சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தை இலக்குவைத்து அண்மைக் காலமாக கடும்போக்கு பௌத்த அமைப்புக்கள் முன்னெடுத்து வரும் இனவாத நடவடிக்கைகளுக்கு எதிராக கொழும்பில் நேற்று முன்தினம் பேரணி ஒன்று நடைபெற்றுள்ளது.

இந்த இனவாதத்துக்கு எதிரான ஊர்வலத்தை "சர்வதேச சதி" என்று கூறி ஒரு இடத்தில் ஒரு இளைஞர் குழு தடுக்க முற்பட்டது. ஆனால், அவர்கள் பொலிஸாரால் கலைக்கப்பட்டனர்.

# விஞ்ஞான பாடம் கற்போரின் வீதத்தை அதிகரிக்க ஏற்பாடு

(கொழும்பு)

விஞ்ஞான பாடத்தைக் கற்பவர்களின் வீதத்தை எதிர்வரும் 2016ஆம் ஆண்டிலிருந்து அதிகரிக்க உள்ளதாக கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். அதேவேளை, கலைப்பீடத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் வீதத்தை குறைக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்படி விஞ்ஞான பாடத்தைக் கற்கும் வீதத்தை 40 ஆக அதிகரிப்பதுடன் கலைப்பீடத்தில் கற்பவர்களின் தொகையை 25 வீதத்தால் குறைக்கப்படவுள்ளது.

அதேவேளை தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பவியல் பாடத்தை கற்பவர்களின் வீதத்தை 75 ஆக எதிர்பார்த்துள்ளதாகவும் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

இந்த வருடத்திலிருந்து தொழில்நுட்பவியல் எனும் பாடத்தை கல்வி அமைச்சு அறிமுகம் செய்யவுள்ளது. எந்தவொரு மாணவனும் விஞ்ஞானம், கணிதம் உட்பட மற்றும் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருந்தால் இந்த தொழில்நுட்பவியல் பாடத்தைக் கற்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

# மும்மொழிப் பெயர்ப்பலகை இல்லாவிடின் சுற்றிவளைப்பு

(கொழும்பு)

தேசிய கருமமொழி ஆணைக்குழுவின் கொள்கைகளுக்கு அமைய பேருந்துகளின் பெயர்ப்பலகைகளை தயாரிப்பதற்காக வழங்கப்பட்ட கால எல்லை நிறைவடைந்துள்ளது.

பெயர்ப் பலகைகளை மும்மொழிகளிலும் காட்சிப்படுத்தாத பேருந்து உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய கருமமொழி ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதற்காக பொலிஸாரின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய அரச கருமமொழி ஆணைக்குழுவின் கொள்கைகளுக்கு எதிராக செயற்படுகின்ற பேருந்துகள் மே மாதம் 7ஆம், 8ஆம் மற்றும் 9ஆம் திகதிகளில் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் சுற்றிவளைக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

# மீண்டும் இயங்கும் சனசமூக நிலையம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம் நீண்டகாலத்தின் பின்னர் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒருவருடமாக இயங்காத நிலையில், தற்போது வாசகர்களுக்காக பத்திரிகைகள் போடப்பட்டு இந்நிலையம் இயங்கி வருகின்றது.

இதனால் வாசகர்கள் தாம் பத்திரிகைளைத் தற்போது பார்க்கக் கூடியதாக இருப்பதாகவும், இதனால் தகவல்களையும், உலக விடயங்களையும் அறிவதற்கும் ஏதுவாக இருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (21)

## முரசின் இன்றைய பலன்

(30.04.2013 – செவ்வாய்க்கிழமை)


விஜய வருஷம் சித்திரை மாதம் 17 ஆம் திகதி.
நட்சத்திரம் மூலம் அமிர்தம் முற்பகல் 10.06 வரை. திதி பஞ்சமி
மரணயோகம் பிற்பகல் 2.52 வரை. இராகுகாலம் 2.58 – 4.28 வரை.
சுபநேரம் 10.28 – 11.58 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | உங்கள் சிரமங்களை பிறரிடம் சொல்ல வேண்டாம். கடுமையான உழைப்பால் வேண்டிய வெற்றி பெறுவீர்கள். தொழில் சுமாரான அளவில். பணவரவு தாமதமாகலாம். எதிர்காலத்துக்கென இன்று ஆரம்பிக்கும் முயற்சி பலிதமாகும். |
| ரிஷபம் | போட்டியாளர்கள் உங்களைக் குறை சொல்வர். சாந்த குணத்துடன் விலககுவீர்கள். தொழில் வேலைச் சுமை அதிகரிக்கும். தவிர்க்க இயலாத செலவு ஏற்படலாம். கடனுக்கு கிடைக்கிறதென்று, பயன் தராப் பொருள் வாங்க வேண்டாம். |
| மிதுனம் | சிலரது மறைமுக இடையூறு இருக்கும். வீண் விவாதம் வேண்டாம். தொழிலில் மாறுபட்ட சூழ்நிலை உணர்ந்து, செயல்படுவது நல்லது. சிறு கடன் பெற நேரும். முடிக்க வேண்டிய வேலை ஒன்றில் தடங்கல் வரும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி. |
| கடகம் | முக்கியமான செயலை, பிறர் பொறுப்பில் விடவேண்டாம். ஆரவார நடைமுறை தவிர்ப்பது நல்லது. தொழில், வளர கூடுதல் கவனம் அவசியம். வரவை விட செலவு கூடும். எதிர்பார்த்த செய்தி ஒன்று வரும். மருத்துவ சிகிச்சை தேவைப்படும். |
| சிம்மம் | செய்த நன்மைக்கு பலன் தேடிவரும். உண்மை, நேர்மையில் அதிக நம்பிக்கை வைப்பீர்கள். தொழில், வளர்ச்சி இலக்கு நிறைவேறும். உபரி பணவரவு. சமூக அந்தஸ்து உயரும். இல்லறத்துணை விரும்பியது வாங்கித் தருவீர்கள். |
| கன்னி | குடும்ப பெரியவர்களின் ஆலோசனைப்படி செயற்படுவீர்கள். திட்டமிட்ட பணி சிறப்பாக நிறைவேறும். தொழில் செழித்து வளரும். உபரி பணவரவில் அறப்பணி செய்வீர்கள். பிள்ளைகளால் பெருமிதம். நித்திரையில் இனிய கனவு. |
| துலாம் | நண்பரிடமிருந்து உதவி கிடைக்கும். முக்கிய செயல் ஒன்றை எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், அபிவிருத்தி ஏற்படும். வரவு அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள். உறவினர் வருகையால் குதூகலம். |
| விருச்சிகம் | செயலில் குளறுபடி ஏற்படலாம். கருமமே கண்ணாயிருந்தால் ஜெயிக்கலாம். தொழில், சுமாரான அளவில். உறவினர் வகையில், அதிக பணச் செலவு. ஒவ்வாத உணவு வகை தவிர்க்கவும். போக்குவரத்திலும் கவனம். |
| தனுசு | முன்னர் தவறு விட்ட செயலை, சரியாக முடிப்பீர்கள். குடும்பத்தினர், அன்பும் அனுசரணையுமாக இருப்பர். தொழில், போட்டி குறையும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். இல்லறத்துணையின் அன்பில் மகிழ்வீர்கள். இறைகருமத்தில் ஈடுபாடு. |
| மகரம் | திட்டமிட்ட செயல், நல் உழைப்பினால் பூர்த்தியாகும். எண்ணத்தில், செயலில் புதுமை காட்டுவீர்கள். தொழில், அபிவிருத்திக்கு, முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும். பணவரவு முன்னேற்றம் பெறும். விருந்து விசேஷத்தில் கலந்து கொள்வீர்கள். |
| கும்பம் | நண்பர் செய்த உதவிக்கு, பிரதியுபகாரம் செய்வீர்கள். மனதில் மகிழ்ச்சி கூடும். தொழில், இருந்த இடையூறு விலகும். சராசரி பணவரவு. கடன் மீளும். உறவினர் உங்களைப் புரிந்து கொண்டாடுவர். உடல் நலம் பலம் பெறும். குடும்ப மகிழ்வு. |
| மீனம் | புதியவருடன், பொது விஷயம் பேசவேண்டாம். சொந்த வேலையை முழுமையாக கவனிப்பது நல்லது. தொழில், இலக்கு நிறைவேறும். குறைந்த பணவரவு. எதிர்ப்பான சூழலினால் மனதில் சஞ்சலம். தாயின் ஆறுதல் மனதிற்கு நம்பிக்கை தரும். |

# இன, மத பேதங்களைக் கடந்து சேவை செய்பவர் அமைச்சர் டக்ளஸ்

## - யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனச் செயலாளர்



(யாழ்ப்பாணம்)

இன, மத பேதங்களுக்கப் பால் தமிழ் முஸ்லிம் மக்களது மீள்குடியேற்றம் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மனிதாபிமான மிக்க சிறந்த மனிதர் என யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் செயலாளர் அஸ்மின் ஐயூப் தெரிவித்தார்.

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற யாழ்ப்பாணத்தில் மீளக் குடியேறியுள்ள முஸ்லிம்களின் வீட்டுத்திட்ட விண்ணப்பங்களை கையளிக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த முஸ்லிம்களாகிய நாம் ஒரு காலகட்டத்தில் விரட்டப்பட்ட போது அதற்கெதிராக குரல் கொடுத்தவர் அமைச்சர் என்பது மட்டுமல்லாமல் இடம்பெயர்ந்து புத்தளத்தில் நாம் தங்கியிருந்த போது அங்கு நேரடியாக வருகை தந்து எமது சுகநலன்களை கேட்டறிந்து கொண்டதுடன் 119 குடும்பங்கள் குடியமர்வதற்கான காணியையும், தற்காலிக வீட்டுத் திட்டங்களையும், பாலர் பாடசாலை வசதிகள் உட்பட பல்வேறு வசதிகளையும் தனது சொந்தச் செலவில் தொடர்ந்து மேற்கொண்டார்.

இதனிடையே யுத்தம் முடிவிற்கு வந்து மீளவும் நாம் யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமர்ந்து வரும் நிலையில் எமக்கு அடிப்படைத் தேவையான வீட்டுத் திட்டம் உள்ளிட்ட வாழ்வாதார உதவித் திட்டங்களை வழங்குவதிலும் மிக கரிசனை காட்டி வருகின்றார் என்றார்.

நிகழ்வில் யாழ்.மாநகர சபை உறுப்பினர் சரபுல் அனாம் உரையாற்றும் போது,

அன்றும் சரி இன்றும் சரி முஸ்லிம்களின் கல்விச் செயற்பாடுகளுக்கும் முன்னேற்றத்திற்கும் பேருதவியாக இருந்து வரும் அதேவேளை, வடமாகாண அபிவிருத்தி மேம்பாட்டிற்கு மட்டுமல்லாது முஸ்லிம் மக்களுக்கான வாழ்வாதாரம் மற்றும் உட்கட்டுமான வேலைத் திட்டங்களையும் சிறப்பான முறையில் முன்னெடுத்து வருகின்றார் என்றும் சுட்டிக் காட்டினார்.

அத்துடன், மாநகரசபை உறுப்பினர் சாபுல் அனாம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைவாக ஆளுநரின் ஊடாக முஸ்லிம் மாணவர்களது கல்வி செயற்பாடுகளுக்காக 50 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், முதற்கட்டமாக 10 துவிச்சக்கர வண்டிகள் இன்றைய தினம் வழங்கி வைக்கப்பட்டன.

ஒஸ்மானியாக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் சந்திரசிறி, யாழ். மாநகர சபை பிரதி முதல்வர் எச்.எல்.றமீஸ், ஆகியோரும் உரையாற்றினர்.

இதன்போது ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரின் (உதயன்), யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), யாழ் மற்றும் வேலணை பிரதேச செயலாளர்கள், ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் முபாரக், மாநகர சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட துறை சார்ந்த பலரும் கலந்துகொண்டனர்.

# மீண்டும் சேதமாகியது நாவற்குழிப் பாலம்

(யாழ்ப்பாணம்)

மீண்டும் சேதமாகியுள்ளது நாவற்குழி இரும்புப் பாலம். இது இந்த வாரத்தின் ஆரம்பத்தில் பாலத்தின் நடுவே உள்ள இரும்புத்தகடு ஒன்று உள்ளே வளைந்து சென்றுள்ளது. தற்போது அந்தத் தகடு கீலமாகக் கிழிந்துள்ளது. இதன் மீது செல்லும் வாகனங்களின் ரயர்கள் சேதமடையும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

தற்போது இப்பகுதிக்கு மேல் ஒரு எண்ணெய் பரல் வைக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் ஆபத்தான பாலமாக காணப்படுவதாக வாகனச் சாரதிகள் பலரும் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து கவனம் செலுத்தவேண்டிய அதிகாரிகள் ஏனோ பாராமுகமாக இருப்பதாக பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## ஆன்மீக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் ஆன்மீக நிகழ்வில் எதிர்வரும் 3 ஆம்திகதி வழிபாடு எது? என்னும் விடயத்தில் சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் சொற்பொழிவாற்றுவார்.




— மூலபாரதி


### மேதினப் போதம்!

உழைக்கும் வர்க்க தினமே வருக
உலகத் தொழிலாளர் ஒன்றிணைக!
தழைக்க அவரின் வாழ்விளங்கள்
தரணி பூக்கும் நாளது மேதினம்!

வளத்தை வழங்கும் உழைப்பு சக்தி
வறுமை போக்கும் தொழிலாளர்கள்
உளத்தை ஊக்கும் மே தினத்தில்
உரிமை கோரல் வான் பிளக்கும்!

உழைப்புக்கேற்ற ஊதியங்கொடு
உடலம் சோர உறிஞ்சிடாதே
இளைக்கும் கொடுமை உனக்கேயாம்
இதுவே நியதி மேதினப் போதம்!

# பிரதமர் பதவி விலகவேண்டும் எனக்கோரி
# நாடாளுமன்ற இரு அவைகளிலும் அமளி



(புதுடில்லி)

நிலக்கரி சுரங்க ஊழல் விவகாரத்தில் இந்திய நாடாளுமன்றத்தில் நேற்று அமளி ஏற்பட்டது. நிலக்கரி சுரங்க ஊழல் விசாரணை அறிக்கை வெளியான விவகாரம், இந்தியாவுக்குள் சீன இராணுவம் ஊடுருவல் ஆகியவற்றால் கடும் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும் மத்திய அரசு, அவற்றுக்கு பதில் சொல்ல முடியாமல் திணறியபடி உள்ளது. இந்த நிலையில் நிலக்கரி சுரங்க விவகாரத்துக்கு தார்மீகப் பொறுப்பு ஏற்று பிரதமர் பதவி விலக வேண்டும் என்று பா.ஜ.க. கோரிக்கை விடுத்தது. ஆனால் ராஜினாமா செய்யும் பேச்சுக்கே இடமில்லை என்று பிரதமர் மன்மோகன்சிங் திட்டவட்டமாக கூறிவிட்டார்.

இந்த நிலையில் நிலக்கரி சுரங்க ஊழல் விவகாரம் நேற்றைய நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் எதிரொலித்தது. எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்று திரண்டு பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக அமளியில் ஈடுபட்டதால், நாடாளுமன்றம் முடங்கியது. பகல் 11 மணிக்கு நாடாளுமன்ற மக்களவை கூடியதும் சபாநாயகர் மீராகுமார், வழக்கமான அலுவலைத் தொடங்க முயன்றார். ஆனால் பா.ஜ.க. எம்.பி.க்கள் கணேஷ் சிங், சஞ்சய் ஜெய்ஸ்வால் தலைமையில் பாரதீய ஜனதா உறுப்பினர்கள் எழுந்து பிரதமர் ராஜினாமா செய்ய வேண்டும் என்று கோஷ மிட்டனர். சபை மையப்பகுதிக்கு சென்ற பா.ஜ.க. எம்.பி.க்கள் நிலக்கரி சுரங்க ஊழலுக்கு காங்கிரசே பொறுப்பு என்று முழக்கமிட்டனர். சபாநாயகர் மீராகுமார் பா.ஜ.க. எம்.பி.க்களை இருக்கைக்கு செல்லுமாறு பல தடவை கேட்டுக் கொண்டார். அதை ஏற்க மறுத்த பா.ஜ.க. எம்.பி.க்கள் பிரதமரை கண்டித்து தொடர்ந்து முழக்கம் எழுப்பியபடி இருந்தனர்.

இந்தக் கூச்சல், அமளிக்கிடையே சமாஜ்வாதிக் கட்சி உறுப்பினர்கள் எழுந்து இந்திய மண்ணில் சீன இராணுவம் ஊடுருவல் குறித்த பிரச்சினையை எழுப்பினார்கள். சமாஜ்வாதி எம்.பி.சைலேந்திரகுமார் உரத்த குரலில், ஒட்டு மொத்த இந்தியாவையும் சீனா கைப்பற்றிக் கொண்டிருக்கிறது என்றார். சமாஜ்வாதிக் கட்சியின் மற்றொரு உறுப்பினர் சரோஜ் கூறுகையில், நாட்டை மிகப்பெரிய ஆபத்து சூழ்ந்துள்ளது என்றார்.

இதேவேளை ஆந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களின் சிலர் தெலுங்கானா மாநிலம் உருவாக்கக்கோரி பதாகைகளை ஏந்தியபடி நின்றனர். நேரம் செல்லச், செல்ல எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கோஷம் அதிகரித்தது. அவர்களை சபாநாயகர் மீராகுமாரால் சமரசம் செய்ய முடியவில்லை. இதையடுத்து மக்களவையை மதியம் 12 மணி வரை ஒத்தி வைப்பதாக அவர் அறிவித்தார். மேல்சபையிலும் கடும் அமளி ஏற்பட்டது. பகல் 11 மணிக்கு மேல்சபை தொடங்கியதும், துணை ஜனாதிபதி மித் அன்சாரி, பா.ஜ.க. எம்.பி. பிரகாஷ் ஜவதேகரை முதல் கேள்வி கேட்கும்படி கூறினார். உடனே பிரகாஷ் எழுந்து என் முதல் கேள்வியே, பிரதமர் எப்போது ராஜினாமா செய்வார் என்பது தான் என்றார். அடுத்த நிமிடம் பா.ஜ.க. எம்.பி.க்கள் கோஷமிட்டப்படி சபை மையப்பகுதிக்கு சென்றனர். அன்சாரியை முற்று கையிட்டபடி நின்று கொண்டு அவர்கள் முழக்கமிட்டனர். இதனால் அவர் மேல்சபையை மதியம் 12 மணி வரை ஒத்தி வைத்தார்.

12 மணிக்கு நாடாளுமன்றத்தின் இரு சபைகளும் கூடின. அப்போது மீண்டும் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது. இதனால் 2 மணி வரை இரு சபைகளும் ஒத்தி வைக்கப்பட்டன.

இந்தியச் செய்திகள்

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர் வாகன விபத்தில் உயிரிழப்பு



இந்தியாவில் கர்நாடக மாநிலம் பிதர் மாவட்ட ஹியுமனாபாத் அருகே நேற்று அதிகாலை இடம்பெற்ற சாலை விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர் பலியாகியுள்ளனர். மகராஷ்டிர மா நில சோலாப்பூர் மாவட்ட ஹாபூர் கிராமத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர், ஒரு சொகுசுக் காரில் திருப்பதி நோக்கி ஆண்மீகப் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

அப்போது சோலாப்பூர்- மசூலிப்பட்டிண தேசிய நெடுஞ்சாலையில் எதிரே வந்த எண்ணெய் லொறியுடன் அந்த சொகுசுக் கார் நேருக்கு நேர் மோதியது. இந்தக் கோர விபத்தில் ஒரு 6 வயது சிறுமி உட்பட 10 பேர் உயிரிழந்தனர். இவ்விபத்துச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

# வன்புணர்வுகள் அதிகரிப்பதற்கு மதுவும், மாமிசமுமே காரணம்



மக்கள் மாமிசம் சாப்பிடுவதையும் மது அருந்துவதையும் விட்டுவிட்டால் வல்லுறவுக் குற்றங்கள் குறைந்துவிடும் என சுவாமி அக்னிவேஷ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், பொலிஸாரை வைத்து மட்டும் வல்லுறவு போன்ற குற்றத்தை நிறுத்திவிட முடியாது. மக்கள் மாமிசம் சாப்பிடுவதை நிறுத்திவிட்டால் வல்லுறவுக் குற்றங்கள் பெருமளவு குறையும் என்று நான் நினைக்கிறேன்.

இது குறித்து பல ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மது அருந்துவதைத் தவிர்த்தால் வல்லுறவுக் குற்றங்கள் குறையும். மது அருந்துவதால் தான் பல்வேறு குற்றங்கள் மற்றும் விபத்துகள் நடக்கின்றன.

ஜப்பானிய ஆராய்ச்சியாளர்கள் உலகின் வயதான மனிதர் குறித்து ஆய்வு செய்ததில் அவர் ஒரு சைவப் பிரியர் என்பது தெரிய வந்துள்ளது. அனைத்து நோய்கள் ஏற்பட மாமிசம் தான் காரணம் என்று பல்வேறு ஆய்வுகளில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. டில்லியில் ஓடும் பேருந்தில் இளம்பெண்ணை வல்லுறவுக்குட்படுத்தியவர்களும் சரி, 5வயதுச் சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்தியவரும் சரி குடிபோதையில் இருந்துள்ளனர். இதன் மூலம் மது தான் அவர்களைக் குற்றம் செய்யத் தூண்டியுள்ளது என்பது தெரிய வருகிறது. வருவாய் வருவதால் அரசு மது உற்பத் தியை நிறுத்தவில்லை. அனைத்து மாநிலங்களும் போட்டி போட்டு மது உற்பத்தி செய்கின்றன.

தினமும் ஒரு பில்லியன் மிருகங்கள் மாமிசத்திற்காகக் கொல்லப்படுகின்றன. இதன் பின்விளைவு பயங்கரமாக இருக்கும். பாடசாலைகளில் மதுவால் ஏற்படும் சீர்கேடுகள் குறித்து குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பது இல்லை. ஒரு குற்றத்திற்காக தனி நபரைக் குறைகூற முடியாது. ஒட்டுமொத்த சமுதாயமும்தான் பொறுப்பு. வன்புணர்வுக்கு மரண தண்டனை என்பதை நான் ஆதரிக்க மாட்டேன். மரண தண்டனையால் ஒன்றும் நடக்கப் போவதில்லை. நாடாளுமன்றத்தைத் தாக்கியவர்கள் உட்பட யாருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கக் கூடாது என்றார்.

# ராமதாஸ் மீது வழக்கு

தமிழகத்தில் வன்முறையை அரசு ஒருபோதும் சகித்துக் கொள்ளாது என சட்டசபையில் முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார். மரக்காணம் கலவரம் தொடர்பாக, தமிழக சட்டசபையில் கொண்டுவரப்பட்ட சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தின் போது பேசிய முதல்வர் ஜெயலலிதா, தமிழகத்தில் வன்முறையை அரசு ஒருபோதும் சிகித்துக்கொள்ளாது.

மாமல்லபுரத்தில் பா.ம.க.சார்பில் நடந்த சித்திரை விழாவில் பொலிஸாரின் நிபந்தனைகள் மீறப்பட்டுள்ளது. இரவு 10 மணி வரை நடக்க வேண்டிய விழா, இரவு 11.35 மணி வரை நடந்துள்ளது. பொலிஸார் வழக்கு போட்டால் பார்த்துக்கொள்கிறேன் என ராமதாஸ் தெரிவித்துள்ளார். அவரது கோரிக்கையை ஏற்று ராமதாஸ் மீது வழக்கு போடப்பட்டுள்ளது. குற்றத்தை ஒப்புக் கொண்டு ராமதாஸ் தண்டனையை ஏற்றுக்கொள்வார் என நம்புகிறேன் என முதல்வர் தெரிவித்துள்ளார்.

# பாதயாத்திரை மீண்டும் தொடரும் சந்திரபாபு நாயுடு அறிவிப்பு



(ஐதராபாத்)

ஆந்திர சட்டசபைத் தேர்தல் இந்த ஆண்டில் நடைபெவுள்ளது. இதையொட்டி, மாநிலத்தில் பாதயாத்திரை மேற்கொள்ளத் தீர்மானித்த முன்னாள் முதலமைச்சர், தெலுங்கு தேச தலைவருமான சந்திரபாபு நாயுடு, கடந்த ஆண்டு ஒக்ரோபர் 2ஆம் திகதி அனந்தப்பூர் மாவட்டத்தில் உள்ள இந்துபூரில் தனது பாதயாத்திரையைத் தொடங்கினார்.

தெலுங்கானா, ராயலசீமா மற்றும் கடலோர ஆந்திராவில் உள்ள 16 மாவட்டங்களில் 208 நாட்களில் 3,000 கிலோமீற்றர் தூரம் நடந்து சென்று மக்களைச் சந்தித்த சந்திரபாபு நாயுடு, விசாகப்பட்டினத்தில் தனது பாதயாத்திரையை நிறைவு செய்தார். பின்னர் அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவர் பேசினார்.

விரைவில் மற்றொரு பாதயாத்திரைத் திட்டத்தை மேற்கொள்ள வாய்ப்பு உள்ளது விசாகப்பட்டினத்தில் இருந்து ஐதராபாத் திரும்பிய பிறகு, இது குறித்து, திட்டத்தின் விவரங்கள், முடிவு விரைவில் அறிவிக்கப்பட வாய்ப்பு உள்ளது எனத் தெரிவித்தார்.

கடந்த ஏழு மாதங்களில் அவரது 3,000 கி.மீ ஆந்திர பிரதேசம் முழுவதும் பயணம் செய்த பின் துறைமுக நகரம் ஒரு ஒளிவிடும் பொது கூட்டம் முடிவடைந்தது. அவர் முன்னேற் றம் பாதையில் தனது உறுதியை மட்டும் பாத யாத்திரை மூலம் மீண்டும் ஆந்திர பிரதேச மாநிலத்தை வலுவானதாக ஆக்கவுள்ளதாகக் கூறினார்.

மாநிலத்தில் நடக்கும் காங்கிரஸ் ஆட்சியின் 'கொடுங்கோன்மை' ஒழித்துக் கட்ட வேண்டும் என மக்கள் என்னிடம் முறையிடுவாதாக நாயுடு கூறினார்.

டி.ஆர்.எஸ். கட்சி தனது துப்பாக்கியைப் பயிற்சி கொடுப்பது தான் அவர்களது கட்சிக்கு வேலை மக்கள் பிரச்சினைகளுக்கு வேலை இல்லை என்றார்.




## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................

முகவரி : ..................................

பிறந்த ஆண்டு : ..................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்


..................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

## வலிகாமம் வடக்கு பிரதேச செயலக விளையாட்டு

# இளவாலை இளஞ்சுடர் முதலிடம்



(மல்லாகம்)

வலிகாமம் வடக்குப் பிரதேச செயலக விளையாட்டு விழாவில் இளவாலை இளஞ்சுடர் விளையாட்டுக்கழகம் முதலிடத்தைப் பிடித்துக்கொண்டது.

வலிகாமம் வடக்குப் பிரதேச செயலக விளையாட்டு விழா அண்மையில் மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் பிரதேச செயலர் கனகராசா ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெற்றது.

இதில் ஒட்டுமொத்தப் போட்டிகளில் இளவாலை இளஞ்சுடர் விளையாட்டுக் கழகம் 62 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், மல்லாகம் ஆர்.டி.எஸ். விளையாட்டுக்கழகம் 55 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், அளவெட்டி பாரதி விளையாட்டுக்கழகம் 40 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

இதேவேளை, சிறந்த தட வீரராக அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ஜெ. ஜெயனந்தன், சிறந்த தட வீராங்கனையாக மல்லாகம் ஆர்.டி.எஸ். விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த துன்சியா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

சிறந்த கள வீரராக பன்னாலை கணேசன் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த மு. கிஸ்ணா, சிறந்த கள வீராங்கனையாக அதே கழகத்தைச் சேர்ந்த ஜெ. அனித்தா ஆகியோரும், சிறந்த தடகள வீரராக கணேசன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த மு.கிஸ்ணா தெரிவு செய்யப்பட்டனர்.

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் கனகராசா ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் இ. ஜெயபாலசிங்கம், கௌரவ விருந்தினராக தெல்லிப்பளை உப பொலிஸ் பரிசோதகர் எச்.ஆர். ஷான், வலிகாமம் வடக்கு பிரதேச முன்னாள் தலைவர் பா. பாஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தனர். இப்போட்டி நிகழ்வில் விளையாட்டுக்கழகங்களைச் சேர்ந்த தலைவர், செயலாளர், வீர,வீராங்கனைகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டிகளைக் கண்டு களித்தமை குறிப்பிடத்தக்கது. (93)

## தீவக மட்ட கால்பந்து நாளை ஆரம்பம்


(வேலணை)

வேலணை அம்பிகைநகர் மகேஸ்வரி சனசமூக நிலையத்தின் ஆண்டு நிறைவை முன்னிட்டு தீவக கால்பந் தாட்ட அணிகளுக்கிடையிலான மாபெரும் கால்பந்தாட்டப் போட்டி நாளை முதலி எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இதில் தீவகத்தைச் சேர்ந்த முன்னணி அணிகள் உட்பட 36இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குகொள்கின்றன.

போட்டிகள் அனைத்தும் காலை 9.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை வேலணை அம்பிகை நகர் மகேஸ்வரி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற ஏற்பாடுகள்மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், போட்டி நிரலின்படி உரிய அணிகள், உரிய நேரத்திற்கு வருகை தந்து நேரவிரயத்தை தவிர்த்துக் கொள்ளுமாறும்,போட்டி அமைப்பாளர்கள்கேட்டுள்ளனர். இப்போட்டியில் கிண்ணத்தை வெல்லும் முனைப்புடன் பல அணிகள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிந்தது. (21)

## கிண்ணம் வென்றது ஆவரங்கால் மத்தி



(கைதடி)

கைதடி நவசக்தி விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட மாவட்ட மட்ட கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் மத்தி அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. கைதடி நவசக்தி விளையாட்டுக்கழகம் நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுப் போட்ட்டியின் இறுதி ஆட்டம் அண்மையில் நடைபெற்றது. இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்தி அணியும் புத்தூர் கலைமதி அணியும் மோதின.

ஐந்து செட்களைக் கொண்ட இத்தொடரில் ஆரம்பம் முதலே அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஆவரங்கால் மத்தி 3:1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டியில் சிறப்பான முறையில் செயற்பட்டு அணியின் வெற்றிக்குப் பங்காற்றிய ஆவரங்கால் மத்தி அணி வீரர் சி.சொருபன் போட்டியின் சிறந்த வீரராகத் தெரிவானார். இப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வெற்றிக் கிண்ணத்தை வழங்கி வைத்தார். (118)



**கொழும்பு அருகே ஹொரானா என்ற பகுதியில் தமிழ் புத்தாண்டு தினக் கொண்டாட்டம் கடந்த சில வாரங்களாக நடைபெற்றது. இதில் தமிழர் பாரம்பரிய மாட்டு வண்டி பந்தயத்தில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டதைக் காணலாம்.**

## மென்பந்து கிரிக்கெட்

# அளவெட்டி மத்தி சம்பியன்



(மல்லாகம்)

தெல்லிப்பளைப் பிரதேச மட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் அளவெட்டி மத்தி அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தெல்லிப்பளை பிரதேச மட்ட விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக தற்போது பெரு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டி அண்மையில் மல்லாகம் ஆர்.டி.எஸ். விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

அணிக்கு ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர் தொடராக நடைபெற்ற இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் அளவெட்டி மத்தி அணியும், மல்லாகம் ஆர்.டி.எஸ். அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய அளவெட்டி மத்தி அணி தயாளனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் அளவெட்டி மத்தி அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தயாளன் ஒரு சிக்ஸர், இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 22 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 51 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மல்லாகம் ஆர்.டி.எஸ். அணி சுதனின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து தோல்வியைத் தழுவியது. இறுதியில் மல்லாகம் ஆர்.டி.எஸ். அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 30 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ரஜீவன், அஜித் தலா 7, சுஜித் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுதன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (93)

# வடமாகாண தேர்தல்: கூட்டமைப்புக்குள் இடியப்பச் சிக்கல்

- எம்.எம்.எம்.ஹன்சீர் கட்டுரையிலிருந்து.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இன்று எழுந்துள்ள உள் முரண்பாடுகள் தீவிரமாகி வருகின்றன. தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்சியாகப் பதிவு செய்வதற்கு விருப்பமோ, ஆர்வமோ காட்டவில்லை. ஆனால், வட மாகாண சபைத் தேர்தலுக்கு முன் இதில் முடிவெடுக்கப்பட மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீதான செல்வாக்கை தளர்வாக்கலாம் என்பதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக வட மாகாண சபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஒருவரே முதலமைச்சருக்கான அபேட்சகராக முன்நிறுத்தப் படலாம் என்பதனால் ஏனைய கட்சிகள் எவ்வளவு தூரம் உளப்பூர்வமாக அவரின் வெற்றிக்காக செயற்படும் என்ற சந்தேகமும் உள்ளது. இதனால் வடமாகாணத்திற்கான முதலமைச்சர் அபேட்சகர் தண்டாயுதபாணிக்கே குறைந்த விருப்பு வாக்குகளைப் பெற்ற போதும் முக்கியத்துவமிக்க எதிர்க்கட்சித்தலைவர் பதவி வழங்கப்பட்டது. இது போன்ற நடைமுறை வடமாகாண சபைத் தேர்தலிலும் பின்பற்றப்படுவதே சிறந்தது எனப் பலர் வாதிடுகின்றனர்.

ஆனால், முக்கியமான பிரச்சினை யாதெனில், கிழக்கு மாகாணத்தில் உள்ளது எதிரக்கட்சித் தலைவர் பதவி. ஆனால் வடமாகாணத்தில் எதிர்பார்ப்பது



வேண்டும் என ஏனைய கட்சிகள் வலியுறுத்துகின்றன. வட மாகாணசபைத் தேர்தலுக்குப் பின் இதனைப் பற்றிப் பேசலாம் என்கின்ற பாணியில் செல்கின்றது தமிழரசுக் கட்சி.

வடமாகாண சபைத் தேர்தலுக்கு முன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்படாவிட்டால் வழமை போன்று அது தமிழரசுக்கட்சியின் சின்னத்தில் தான் அத்தேர்தலையும் சந்திக்க வேண்டி ஏற்படும். இதனால் தமிழரசுக் கட்சி இன்னும் தனது நிலையை உறுதிப்படுத்தும்.

இவ்வாறான உள் முரண்பாடுகள் தமிழ் மக்கள் எக்கட்சி சாராமல் பொதுவேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

இதற்கு கிழக்கு மாகாண சபையிலும் முன்மாதிரி இருக்கின்றது. நடைபெற்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எப் துரைரெட்ணம் அதிகூடிய வாக்குகளைப் பெற்றிருந்த போதும் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினரான துரைரெட்ணசிங்கம் இரண்டாமிடம் வந்த போதும் புதிதாக அரசியலுக்குக் கொண்டுவரப்பட்ட கல்வியாளர் என்று அறியப்பட்ட திருகோணமலையைச் சேர்ந்த முதலமைச்சர் பதவி. வட மாகாண முதலமைச்சரின் முக்கியத்துவம் எவ்வாறென்பதை தமிழரசுக்கட்சி நன்கறியும். விக்னேஸ்வரன் போன்றவர்கள் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்பட்டு வெற்றி பெற்றால் கட்சியின் ஆதிக்கத்தினுள் அவர் வருவார் என எதிர்பார்க்க முடியாது. மாறாக அவர்களின் பின்னால் செல்ல வேண்டிய நிலைமை கட்சிக்கு ஏற்படும். இதனை ஒருபோதும் சம்பந்தரோ, சுமந்திரனோ, மாவையோ உளப் பூர்வமாக விரும்பப்போவதில்லை.

# எஸ்.வி.ரங்

- R.P.ராஜநாயஹம் -



தன் வாழ்நாளில் முதுமையைப் பார்த்தறியாத ஒருவர் திரைப் படங்களில் இருபத்தைந்து வருடங்கள் (1950களில், 1960களில், 1970களின் முற்பகுதியில்) நிறைய வயதான, முதிய கதாபாத்திரங்கள் செய்திருக்கிறார் எ விந்தை. எழுபது வயது மனிதராக சி காட்டிய எஸ்.வி ரங்காராவ் அறுபது வயதைத் தன் வாழ்நாளில் கண்டதில் 1974 இல் அவர் மறைந்த போது அ வயது 56 தான்.

தெலுங்கு, தமிழ் படங்களில் நடித் தெலுங்கு மக்கள் இவருக்கு "விஸ்வ சக்ரவர்த்தி" என பட்டம் அளித்தார்க அந்தப் பட்டம் தமிழ் பட டைட்டிலில் பார்த்திருக்க முடியாது.

அந்தக்காலத்தில் பட்ட[illegible] ந[illegible]ர் வி.ரங்காராவ் B.Sc.

நாடகமேடையில் ஆங்கில நாடகங் நடித்த Shakespearean Actor! நாடகங் நடித்திருந்தாலும், திரைப் படங்களில் கதாபாத்திரங்களில் நடித்திருந்தாலும் நாடக செயற்கைத்தனம் இல்லாம ரொம்ப இயல்பாக நடித்து அள சாதனை செய்தார்.

ஒரு தெலுங்கு நடிகர் தமிழ் படங்களில் செய்த சாதனை அசாதாரணமானது. ஆஜானுபா ரங்காராவ் ஒரு காட்சியில் இரு இவர் தான் Scene Stealer!

# பிழையின்றித் தமிழ் 16

- ஞானச்செல்வன் -

### இறும்பூதும் இறுமாப்பும்

தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்களின் உரைகளில் எழுத்துகளில் இவ்விரு சொற்களும் நிரம்ப இடம் பெற்றிருக்கும். இறும்பூது என்னும் சொல்லுக்கு வியப்பு, அற்புதம், பெருமை, வண்டு, மலை, தாமரைப் பூ எனப் பல பொருள் உண்டு. "உங்கள் வளர்ச்சி கண்டு நான் இறும்பூதடைகிறேன்" என்றால் பெருமையடைகிறேன் என நல்ல பொருளில் கொள்ள வேண்டும். நான் வியப்படைகிறேன் என்று பொருள் கொண்டால், பாராட்டு மாறிப் பழிப்பாகிவிடும். இறுமாப்பு என்பது, செருக்கு, அகந்தை, பெருமிதம், நிமிர்ச்சி, ஆணவம் என்று பலவாறு பொருள் சொல்லப்பட்டாலும், ஏறத்தாழ ஒரே பொருள் தருவன அச்சொற்கள்.

அரிய பல நல்லவற்றை, ஆற்றலை, வெற்றியைப் பாராட்டும்போதும், வியப்பான செய்திகளைக் கேட்டபோதும் இறும்பூது என்னும் சொல்லை ஆளுதல் நன்றாம். இறுமாப்பு - பெருமிதம் என்ற பொருளில் மனிதர்க்கு இருக்க வேண்டிய நற்பண்புகளுள் ஒன்றே. ஆனால், அது அகந்தையாய், ஆணவமாய் ஆகிவிடக்கூடாது. கல்விச் செருக்கு, செல்வச் செருக்கு மாந்தரிடையே இருப்பது இயற்கையே. இவ்விரு சொற்களும் தக்கவாறு இன்றும் பயன்படுத்தப்படுமானால் தமிழுக்கு ஆக்கமாம்.


### கோவிலா? கோயிலா?

தமிழில் உடம்படுமெய் என்று ஓர் இலக்கணச் செய்தி உளது. நிலைமொழியின் இறுதியிலும், வருமொழியின் முதலிலும் உயிர் எழுத்து வருமாயின் அவ்விரண்டு உயிர்களையும் இணைத்திட (உடம்படுத்த)ப் பயன்படும் மெய்யெழுத்துகள் ய், வ் என்றிரண்டு. கோ (க்+ஓ) இல் (இ) கோ என்பதில் ஓ எனும் உயிரும், இல்லில் இ எனும் உயிரும் இணையுமிடத்தில் வ் எனும் மெய்யெழுத்து தோன்றும். ஆதலின் கோ + வ் + இல் = கோவில் என்பதே சரியானது.

கோயில் என்னும்போது கோ + ய் + இல் = கோயில் என்று "ய்" உடம்படுமெய்யாக வந்துள்ளது. ஆனால் நன்னூல் இலக்கணம் என்ன சொல்லுகிறது என்றால்,

"இ, ஈ, ஐ வழி யவ்வும் ஏனை உயிர் வழி வவ்வும் ஏ முன் இவ்விருமையும் உடம்படு மெய் என்றாகும்"

கோவில் ஓகாரம் இருப்பதால் "வ்" உடன்படு மெய்தான் வர வேண்டும். ஆயினும் மக்கள்




வழக்கத்தில் கோயிலும் இடம் பெற்றுவிட்டது. இது ஏற்கத்தக்க பிழையே.

மணி + அடித்தான் = மணியடித்தான் (இகரத்தின் முன் "ய்" உடம்படு மெய் வந்துள்ளது.

தே + ஆரம் = தேவாரம் (ஏகாரத்தின் முன் "வ" உடன்படு மெய் வந்தது)

அவனே + அழகன் (ஏகாரத்தின் முன் "ய்" உடம்படுமெய் வந்தது) அவனேயழகன் என்றானது.

போதும் எனக் கருதுகிறோம். இலக்கணம், படிப்பவர்க்குச் சுமை ஆகிவிடாமல் சுவை பயத்தல் வேண்டும் எனும் நோக்கில்தான் எழுதி வருகிறோம்.

ஒரு சிறிய சொல்லாய்வு செய்வோமா? "இதற்காக ரொம்பவும் மெனக்கெட்டு அலைந்தேன்?" இச்சொற்றொடரில் மெனக்கெட்டு என்பதன் பொருள் என்ன? மனைக்கட்டு நமக்குத் தெரியும். மெனக்கெட்டு? ஒருகால் இப்படியிருக்குமோ? எப்படி? மனம் கெட்டு அலைந்தேன் என்றிருக்கலாமோ? ஒரு வேலையை முடிப்பதற்காக அதே சிந்தையாக அலைதலை மனம் கெட்டு அலைந்தேன் என்று சொல்லுவது சரிதானே?

### ஏனிந்தப் பிழைகள்?

வழிபாடு வேறு, வழிப்பாட்டு வேறு. வழிபாட்டுக் கூட்டத்தில் அமைதி நிலவியது என்றால் சரியான சொற்றொடர். வழிப்பாட்டுக் கூட்டத்தில் என்றெழுதினால், வழிச் செல்வோர் பாடும் பாட்டு என்று பொருள் தருமே. அதாவது வழிநடைப் பாட்டு என்பதாம் இது. வழிபாட்டை வழிப்பாட்டு ஆக்க வேண்டா.

தமிழ் கற்றவரே சிலர் தம் ஏடுகளில் நாநிலம் என்றெழுதுகிறார்கள். இதன் பொருள் நாக்கு ஆகிய நிலம் என்பதன்றோ? முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனும் நால்வகை நிலங்களினாலான உலகத்தை நானிலம் எனல் வேண்டும். (நான்கு + நிலம் = நானிலம்). இவ்வாறே தன்நலம் என்றெழுதுகிறார்கள். தன் + நலம் = தன்னலம் என்றாகும். தம் + நலம் = தந்நலம் என்றாகும். இரண்டுமின்றி தன் நலம் எனல் விட்டிசைக்கிறது. இவ்வாறே என் + தன் = என்றன் எனவும், எம் + தம் = எந்தம் எனவும் ஆகுதல் இலக்கணம். எந்தன் என்றெழுதுவது பிழையாகும்.

தேசீயம், ஆன்மீகம், காந்தீயம் என்றெல்லாம் எழுதுகிறார்களே? சரியா? இல்லை. இவற்றை நெடில் போட்டு நீட்டாமல் தேசியம், காந்தியம், ஆன்மிகம் என்றே எழுதிடல் வேண்டும். இஸம் - தமிழில் இயம் என்றாகும். மார்க்சிஸம் - மார்க்சியம் என்றாகும். தேசியம், காந்தியம் இவற்றுள்ளுள் இயம் இருத்தல் காண்க.

# .ரங்காராவ்

றும் -

எல்லோரையும் தூக்கி சாப்பிட்டு விடுவார்.

தேவதாஸ், மிஸ்ஸியம்மா ஆரம்பித்து, "நானும் ஒரு பெண்" மாமனார் - மருமகள் உறவு. விஜயகுமாரியின் மாமனாராக... "கற்பகம்" ஜெமினி கணேஷின் மாமனாராக....

இயக்குனரிடம் "இன்றைக்கு விடிய விடிய எவ்வளவு நேரம் ஆனாலும் சரி. ஷூட்டிங் வைத்து க்ளைமாக்ஸ் காட்சியை முடித்துக்கொள்ளுங்கள். எனக்கு உடம்பு சரியில்லை. ஆனால் அது பற்றி கவலையில்லை." என்று ரோசத்தோடு சொல்லி அதன்படியே நடித்துக்கொடுத்தாராம்.

நானும் ஒரு பெண்ணில் மரணப் படுக்கையில் இருக்கும் ரங்காராவை

இந்தோனேசியாவில் ஒரு திரைப்படவிழாவில் இவர், "நர்த்தன சாலா" என்ற படத்தில் கீசகனாக நடித்ததற்காக ஒரு விருது வாங்கியிருக்கிறார். மற்றபடி இந்திய அரசாங்க கௌரவம் எதுவும் இவருக்கு கிடைத்ததில்லை.

உலகத்தின் மிகச் சிறந்த அபூர்வ நடிகர்களில் ஒருவர் எஸ்.வி.ரங்காராவ். இன்று அவர் இறந்து முப்பத்தைந்து ஆண்டுகள் ஆனபின்னும் அவர் நடிப்பு



ருக்கிறார் என்பது
மனிதராக சினிமா
ாவ் அறுபது
ில் கண்டதில்லை.
த போது அவர்

ங்களில் நடித்தவர்.
க்கு "விஸ்வநாத
அளித்தார்கள்.
டைட்டிலில் யாரும்

[illegible] நடிகர் எஸ்.

கில நாடகங்களில்
tor! நாடகங்களில்
படங்களில் புராண
த்திருந்தாலும் கூட
ம் இல்லாமல்
நடித்து அளப்பரிய

நடிகர் தமிழ்
சாதனை
ஆஜானுபாகுவான
ட்சியில் இருந்தால்
Stealer!

"அப்பா" ரோல் திரைப் படங்களில் ரொம்ப மலிவானது. அதை மிகவும் உயர்த்திக் காட்டியவர் எஸ்.வி.ரங்காராவ்.

"கண் கண்ட தெய்வம்" படத்தில் சுப்பையாவின் "அண்ணன்" ரோல்!

அவர் செய்த புராண பாத்திரங்கள்.

வில்லனாக "நம் நாடு" படத்தில் "பக்த பிரகலாதா"வில்.

"மாயா பஜாரில்" கடோத்கஜனாக "கல்யாண சமையல் சாதம்!"

சபா' மீனா, எங்க வீட்டுப் பிள்ளை, சர்வர் சுந்தரம் போன்ற படங்களில் அவருடைய இயல்பான நகைச்சுவை.

நானும் ஒரு பெண்(1963) படப் பிடிப்பின் க்ளைமாக்ஸ் ஷூட்டிங்குக்கு எம்.ஆர்.ராதா சரியான நேரத்தில் வந்து காத்திருந்து பொறுமை இழக்கின்ற நிலை. ரங்காராவ் ரொம்ப தாமதமாக உள்ளே நுழையும்போது ராதா அவர் பாணியிலேயே ரங்கா்ராவ் காதில் விழும்படியே

கமென்ட் அடித்திருக்கிறார்: "கெட்டவனா நடிக்கிறவன் ஒழுங்கா கரெக்டா நடந்துக்கிறான். நல்லவனா நடிக்கிறவன் பாரு. ஒரு ஒழுங்கு இல்ல. படாத பாடு படுத்துறான்."

ரங்கா ராவ் ரொம்ப மனம் புண்பட்டு "அத்தான்... ஒரே ஒரு கையெழுத்து போடு அத்தான்...." "என்று ராதா படாத பாடு படுத்துவார்.


சந்திர பாபு செட்டில் இருந்தால் எப்போதும் ரங்காராவிடம் அத்து மீறி விளையாடுவாராம். இவரால் தாங்கமுடியாத அளவுக்கு கலாய்ப்பார். சகிக்க முடியாத அளவுக்கு பாபுவின் நடவடிக்கை இருக்கும் போது ரங்காராவ் ரொம்பவே மூட் அவுட் ஆகிவிடுவாராம்.

ரங்காராவ் இயக்குநரும் கூட! தெலுங்கில் இவர் இயக்கிய இரண்டு படங்கள் நந்தி விருது பெற்றிருக்கின்றன.

சாசுவத்தன்மையுடன் தமிழ், தெலுங்கு திரைப்படங்களில் மிக உயர்ந்து நிற்கிறது.

இன்று ரி.வி சனல்களில் எவ்வளவோ நடிகர்களை பலரும் மிமிக்ரி செய்வதைப் பார்க்கமுடியும். மிமிக்ரி ஆர்ட்டிஸ்ட் ஒருவர் கூட இதுவரை மிகப் பெரிய நடிகர் ரங்காராவை இமிடேட் செய்ததே கிடையாது. ரங்காராவின் தனித்துவத்திற்கு இது கூட உதாரணம். அவ்வளவு நுட்பமானது அவரது நடிப்பின் பரிமாணங்கள்! முதியவராக நடித்தார். ஆனாலும் இவரை ஒரு வட்டத்துக்குள் அடைத்து Brand செய்துவிட முடியாது.

## போர், விளையாட்டல்ல



இரண்டாம் உலகப்போரின் போது இங்கிலாந்தின் புகழ்பெற்ற சுழற்பந்து வீச்சாளர் யார்க்ஷையரின் ஹெட்லி வெரிட்டி (Hedley Verity) இரண்டாம் உலகப்போரின் போது இராணுவத்தில் தன்னிச்சையாக சேர்ந்தார். சிசிலியில் தளபதியாகச் சண்டையில் காயமுற்று ஜேர்மனியரால் சிறைப்பிடிக்கப்பட்டார். பின் கடுமையான காயங்களால் மரணமடைந்தார்.

இவர் (கிரிக்கெட்) உலகின் புகழ் பெற்ற `Body line' தொடரில் பங்கேற்றவர், கப்டன் டக்ளஸ் ஜோர்டின்னின் விருப்பமான ஸ்பின்னர். முக்கியமாக, உலகின் தலைசிறந்த துடுப்பாட்டக்காரர் டொன் பிரட்மனை டெஸ்ட் போட்டிகளில் அதிகம் அவுட் செய்தவர் (8 தடவைகள்).

டக்ளஸ் ஜோர்டினும் இரண்டாம் உலகப்போரில் பங்கேற்றார். கடுமையான காயமடைந்தாலும் உயிர் தப்பினார்.

## திசைமாறிய குருவி



அமெரிக்கா, கனடா நாடுகளில் மஞ்சள் நிற றொபின் குருவியை அதிக அளவில் பார்க்கமுடியும். அந்த நாடுகளுக்குரிய விசேட பறவை இது. தற்போது இப் பறவையை இங்கிலாந்து மக்கள் தங்களது நாட்டின் பெரும்பாலான இடங்களில் காண்கிறார்கள். அவர்களில் பெரும்பாலானோர் இந்தக் குருவி தமது நாட்டிற்கு எப்படி வந்தது என்று புரியாமல் குழம்பினார்கள். வட அமெரிக்காவில் கடந்த சில மாதங்களாக வீசிய சூறாவளிக் காற்றில் இந்தப் பறவை, அட்லாண்டிக் கடலையும் தாண்டி வந்திருப்பது தெரிந்தது. காற்றின் போக்கிலேயே இங்கிலாந்து வந்து சேர்ந்த மஞ்சள் வயிற்று றொபின் குருவிகள் தற்போது தங்களின் புதிய இடத்தில் எந்தவித ஆபத்துமின்றி வாழ்கின்றன.

## புதையலைத் தேடி....



ஜெகல் ரஃபியின் குமாரராகிய ஐஸக் ரஃபி, போலந்து நாட்டின் க்ராகோவ் நகரில் யூதச் சேரியில் வாழ்ந்து வந்தார்.

இவர் ஒருநாள் இரவு தூங்கும் போது ஒரு கனவு கண்டார். அவர் தமது ஊரை விட்டுக்கிளம்பி, வெகு தொலைவிலுள்ள செக்.நாட்டின் தலைநகரான ப்ராக் சென்று அந்நாட்டு மன்னரது அரண்மனையின் முன்னாலுள்ள பாலத்திற்கு அடியில் மறைந்து கிடக்கும் பெரும் புதையலைத் தான் தேடிக்கண்டுபிடிப்பதாக அவர் கனவு கண்டார்.

ரஃபி அவர்களுக்கு வியப்புத் தோன்றியது. விருப்பமும் தோன்றியது. ஆனாலும் உறுதி ஏற்படவில்லை. இது உண்மையாயிருக்குமா என்று குழம்பினார். கனவிலே தான் கண்டதை மறக்கமுயன்றார்.

ஆனால், மீண்டும் மீண்டும் அவருக்கு இரண்டு தடவைகளுக்கு மேல் அந்தக் கனவு தெளிவாக முன்பு கண்டது போலவே இடங்களும் புதையலும் கனவில் அவருக்குத் தோன்றின. அவரால் கனவை நிராகரிக்க முடியவில்லை போய்ப் பார்த்து விடுவது என்று முடிவுகட்டிக் கொண்டு, துணிந்து ப்ராக்-ஐ நோக்கிப் பயணமானார்.

ப்ராக் நகருக்கு வந்து சேர்ந்தார். அவர் கனவில் கண்டபடியே அரண்மனையும் அதற்குச் செல்லும் பாலமும் காட்சியளித்தன. ஆனால் அந்தப் பாலத்தை இரவும் பகலும் அரண்மனைக்காவலாளர் காத்து நின்றனர். அவர்களுக்குத் தெரியாமல் எப்படி பாலத்தின் கீழ் வெட்டிச் சோதிப்பது? எனவே காலையில் பாலத்தருகே வருவார், நிற்பார், இரவு வரை அங்கேயே நின்று பார்ப்பார், பின் சோர்வோடு தங்குமிடம் திரும்புவார் இப்படிப் பல்நாட்கள் கடந்தன.

இப்படி ஒரு கிழவர் பிடிவாதமாய்த் தினந்தோறும் வந்து நின்று பார்த்துக் கொண்டிருந்துவிட்டுத் திரும்புவதைக் கண்டு வியந்த காவலாளரின் தலைவன், அவரை அழைத்து விசாரித்தான். "பெரியவரே! காணாமல் போன எதையேனும் தேடுகிறீர்களா? அல்லது யாருக்காவது காத்திருக்கிறீர்களா?.. ஒவ்வொருநாளும் இங்கு வந்து நின்று திரும்பிப் போவதன் காரணம் என்ன?"

ஐஸக் ரஃபி, தான் கண்ட கனவு பற்றியும், அந்தப் புதையலைத் தேடியே தான் வந்திருப்பதாகவும் ஒளிவு மறைவின்றி அவனிடத்தில் எடுத்துக் கூறினார்.

காவல் தலைவன் வாய்விட்டுச் சிரித்தான்: "ஐயோ பாவம், பெரியவரே! ஒரு கனவை நம்பியா இவ்வளவு தூரம்கால்நோக நடந்து வந்தீர்? அறிவுடைய யாராவது இப்படிக் கனவை நம்பி நடந்து கொள்வார்களா? ஏன், நானே கூட இதுமாதிரிக் கனவு ஒன்றைக் கண்டிருக்கிறேன். அதை நான் நம்பியிருந்தால், நானும் நீர் நடந்த தூரத்திற்கு நடந்திருக்க வேண்டும். நீர் ப்ராகிற்கு வந்திருப்பது போல நான் க்ராகோவிற்குப் போயிருக்க வேண்டும். உங்களை மாதிரி வீண் அலைச்சலுக்கு நான் தயாரில்லை...' என்று கூறிய காவல் தலைவன், 'நான் கண்ட கனவையும் சொல்கிறேன் கேளும்' என்று மேலும் கூறினான்.

'என் கனவில் நான் ஒரு குரலைக் கேட்டேன். க்ராகோவிற்குச் சென்று, அங்கே ஜெகல் ரஃபியின் மகனான ஐஸக் ரஃபியின் வீட்டின் சமையலறையில் அடுப்புக்குப் பின்னால் வெட்டிப் பார்த்தால் கிடைக்குமாம் புதையல்! ஐஸக்காம்! ஜெகலாம்! ப்ராக் எங்கே? க்ராகோவ் எங்கே? நாடு விட்டு நாடு போய், யூத்ச்சேரியில் உள்ள வீடுகளுக்குள் தேடிப் புகுந்து சமையல் அறைகளைத் தோண்டிப் பார்க்க வேண்டுமாம்! அதுவும் யூதர்களிடையே ஜெகலும் ஐஸக்கும் சர்வசாதாரணமாக எல்லோர்க்கும் வைக்கப்படும் பெயர்களாயிற்றே.... கனவை நம்புவதாயிருந்தால் பெரியவரே! எனக்கு உம்மைப்போல் பல மடங்கு அலைச்சல்தான் நேர்ந்திருக்கும்...' என்று சொல்லி இடி இடியென்று நகைத்தான் அந்தக் காவல் தலைவன்.

அடக்கம் மிகுந்த ரஃபி அவர்கள் அவன் சொன்னதையெல்லாம் பொறுமையோடு கேட்டார். அவனைக் குனிந்து வணங்கினார். அந்த இராணுவ நண்பருக்கு நன்றி கூறினார்.

அன்றே ஊருக்குத் திரும்பி நடந்தார். வீட்டை அடைந்தார். வீட்டினுள்ளே சென்று கவனிப்பாரற்றுக் கிடந்த சமையலறை மூலையை வெட்டிப் பார்த்தார். பெரும் புதையலைக் கண்டார். முன்னோர் சேர்த்துவைத்த அந்தச் செல்வத்தை எடுத்துக் கொண்டார். அதன்பின் கவலையற்று வாழ்க்கை நடத்தி, பல சேவைகள் செய்து தமது பெயரையும் புகழையும் நிலைநாட்டினார்.

# சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இலங்கையின் ஆயுர்வேத மருத்துவம்



(கொழும்பு)

மூன்று தசாப்தங்களாக நிலவிய யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர், ஆயுர்வேத மருத்துவ சந்தையில் இலங்கை நல்லதொரு முன்னேற்றத்தினை எட்டியுள்ளது. என பைத்ருகம் மருத்துவமனைக் குழுமத்தை நடாத்தி வருபவரும், செல்வாக்குமிக்க கேரள சுற்றுலா சமூகத்தின் செயலருமான சஞ்சீவ் குருப் தெரிவித்தார்.

கடந்தவாரம் நான் இலங்கையில் இருந்தேன். அவர்கள் எமது வர்த்தகத்தின் 30 - 40 சதவீதத்தை எடுத்துக் கொண்டுள்ளனர் என்று நான் மதிப்பிடுகிறேன். என குருவாயூர் கோவிலுக்கு அருகில் உள்ள பெரும்பயில் ஆயுர்வேத மனா என்ற நிலையத்தில் வைத்து சஞ்சீவ் குருப் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு மில்லியன் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளையும், ஒரு கோடி உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளையும் கேரளாவுக்கு ஆண்டுதோறும் ஈர்ப்பதில் ஆயுர்வேத மருத்துவம் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆயுர்வேத மருத்துவத்துக்காகவே, 70 வீதமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும், 30 - 40 வீதமான உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும் கேரளாவுக்கு வருகின்றனர்.

வெளிநாட்டவர்கள் சராசரியாக 18 நாட்கள் வரை கேரளாவில் தங்கியிருப்பதற்கு ஆயுர்வேதமே காரணமாகும்.

இலங்கையில் முன்னர் ஆயுர்வேத வர்த்தகம் நன்றாகவே இடம்பெற்று வந்த போதிலும்,, நீண்டகாலம் நீடித்த மோதல்களின் நிழல், பொதுவாக சுற்றுலாத்துறையின் மீதும் படிந்தது.


2009இல் போர் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கையில் ஆயுர்வேத வர்த்தகம் திடீரென வளர்ச்சியடைந்து வருகிறது என்று கூறும் குருப், இலங்கையில் சுற்றுலாப் பயணிகள் கூடும் தென்பகுதி கரையோரப் பகுதிகளில் ஆயுர்வேத மருத்துவ நிலையங்கள் முளைவிட்டுள்ளதை தாம் கண்டதாகவும் தெரிவித்தார். இந்திய ரூபாவை விடவும், இலங்கை ரூபாவின் மதிப்புக் குறைவாக உள்ளதால், இந்தியாவுடன் ஒப்பிடுகையில் அங்கு ஆயுர்வேத சிகிச்சை மலிவாக உள்ளது இதற்கு ஒரு காரணம் என்றார்.

# தவறான தகவல்களை வழங்கிய 15 விளம்பரங்களுக்குத் தடை

(கொழும்பு))

உணவுப் பொருட்கள் தொடர்பில் மக்களுக்குத் தவறான தகவல்களை வழங்கும் வகையிலான 15 வர்த்தக விளம்பரங்கள் தடை செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

உணவுப்பொருட்கள் ஆலோசனைக் குழுவின் பரிந்துரைக்கு அமைய சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பபட்டுள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.




இந்த விளம்பரங்களில் உணவுப் பொருட்களில் இல்லாத போசனை சத்துக்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அவற்றின் பாவனையால் உடலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் தவறான தகவல்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் பாலித்த மஹிபால கூறியுள்ளார்.

# மின்கட்டண உயர்வால் அல்லலுறும் மக்களுக்கு மானியம் வழங்கவேண்டும்

(கொழும்பு)

மின் கட்டண அதிகரிப்பால் அல்லலுறும் மக்களுக்கு மானியம் வழங்க மத்திய அரசாங்கம் அல்லது கிழக்கு மாகாண சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் விடுக்கப்பட்டுள்ளது. இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் பிரேரணையை கிழக்கு மாகாண சபையில் முன்வைக்கவுள்ளார்.

மின்கட்டண அதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்தே தான் இந்தப் பிரேரணையை முன்வைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவால் மின் கட்டண அதிகரிப்பு குறித்து மக்களிடம் கருதுக் கணிப்பை மேற்கொண்டு கடந்த 20.04.2013 தொடக்கம் மின்சாரக் கட்டணம் அதிகரித்துள்ளதாக மின்சார சபை அறிவித்துள்ளது.

எமது நாட்டின் 94 வீதமானோர் மின்சாரம் பாவிக்கின்றனர் என மத்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த வருட இறுதிக்குள் 600 மெகா வோட்ஸ் மின்சாரம் இணைக்கப்படுமெனவும் இக்கட்டணங்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் குறைக்க வாய்ப்பு உள்ளதாகவும் அமைச்சரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரம் பாவிப்போரை பொறுத்த மட்டில், 30 அலகு பயன்படுத்துவோருக்கு 75 ரூபாய் அதிகரிக்கப்படுகிறது. 11 இலட்சம் குடும்பங்கள் 30 அலகு வரையில் பயன்படுத்துகின்றார்கள், 60. அலகு பயன்படுத்துவோர் 16 இலட்சம் குடும்பங்கள். 90 அலகுக்கு மேல் பயன்படுத்துவோர் ஐந்து இலட்சத்து 60 ஆயிரம் குடும்பங்களாகும்.

இக்குடும்பங்களை மின் கட்டண உயர்வு அதிகமாக பாதிக்கும்.

இதனால் கிழக்கு மாகாணத்திலும், ஏனைய பகுதிகளிலும் பொதுமக்கள் பலவழிகளிலும் பாதிக்கப்படுகின்றனர்.

மக்கள் பாதிக்கப்படும் மத்திய அரசின் தீர்மானத்தை கண்டிப்பதோடு இப்பாதிப்பிலிருந்து மக்கள் மீளவேண்டுமாயின் உடனடியாக மின்கட்டணங்கள் குறைக்கப்பட வேண்டும்.

இல்லாத பட்சத்தில் மக்களைப் பாதிப்பிலிருந்து மீட்பதற்கு ஏதாவதொரு சலுகை, மானியக் கொடுப்பனவை மத்திய அரசு அல்லது மாகாண சபை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனும் தீர்மானத்தை சபையில் பிரேரணையாகக் கொண்டுசெல்லவுள்ளேன் என்றார்.

# தனியார் கல்வி நிலையத்தில் கைக்குண்டு மீட்பு

(கொழும்பு)

மொனராகலை, படல்கும்புர தனியார் கல்வி நிலையம் ஒன்றினுள் இருந்து கைக்குண்டு ஒன்று பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸ அவசர அழைப்பிற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் படி மேற்கொண்ட தேடுதலின் போது இக்கைக்குண்டு கைப்பற்றப்பட்டுள்ளது. புத்தல பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் குறித்த இடத்திற்குச் சென்று, கைக்குண்டை செயலிழப்பிற்காக எடுத்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக படல்கும்புர பொலிஸார் தெரிவித்தனர்.

# சுகாதார அமைச்சா பங்குகொள்ளும் திடீர் மருத்துவமனை சோதனைகள்

(கொழும்பு)

மருத்துவமனைகளில் நிலவும குறைபாடுகளைக் கண்டறிவதன் பொருட்டு திடீர் சோதனைகளை மேற்கொள்ள குழுவொன்றை நியமிக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுகாதார அமைச் சரின் பணிப்புரையின் பேரில் இந்த விசேட சோதனை குழு அமைக்கப்படவுள்ளதாக அமைச்சின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

இந்த திடீர் சோதனை நடவடிக்கைகளில் சுகாதார அமைச்சரும் பங்கு கொள்ளவுள்ளார்.




இதன் போது நோயாளர்களுக்கு உரிய முறையில் மருத்துவ வசதிகள் வழங்கப்படுகின்றனவா? சத்திர சிகிச்சைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படுகின்றனவா? வெளிநோயாளர் பிரிவுகள் முறைப்படி இயங்குகின்றனவா என்பன உள்ளிட்ட விடயங்கள் சோதனை செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# புதைக்கப்பட்டிருந்த கைக்குண்டு ஓட்டமாவடியில் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் ஓட்டமாவடி த பாலக வீதியருகில் புதைக்கப்பட்டிருந்த கைக்குண்டு ஒன்றினை பொலிஸாரின் உதவியுடன் இராணுவத்தினர் மீட்டுள்ளனர்.

வியாபார நிலையத்திற்கு முன்பாக வெடிகுண்டு புதைக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.



குறித்த கடைக்கு முன்னாலுள்ள பகுதியை துப்புரவு செய்த நிலையிலேயே மண்ணுக்குள் புதைந்த நிலையில் குறித்த வெடிகுண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் வாழைச்சேனைப் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து ஸ்தலத்திற்கு பொலிஸார் விரைந்து வெடிகுண்டை கைப்பற்றியதாகவும் வியாபார நிலைய உரிமையாளர் தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச் சேனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




**நெல்லியடி வட்டலயன்ஸ் கழகம் வைத்திய வசதிகள் குறைந்த வடமராட்சி கிழக்கில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்காக நடாத்திய இலவச மருத்துவ முகாமில் மக்கள் வைத்திய சேவைகளைப பெற்றுக் கொளவதையும், கண்பார்வை குறைநதவர்களுக்கு கண் பரிசோதனை இடம் பெறுவதையும் படங்களில் காணலாம்.**

**(01)**

# பொது வேலைத்திட்டங்களுக்கு அம்பன் கிராமத்திற்கு நிதிஒதுக்கீடு



வடமராட்சி கிழக்கு அம்பன் கிராமத்திலுள்ள பொது வேலைத திட்டங்களுக்காக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நிதியுதவி வழங்கியுள்ளார்.

அம்பன் கிராம முன்னேற்றச் சங்கம் விடுத்த வேண்டுகோளையடுத்து அக்கிராமத்திற்குச் சென்று கிராம மக்களுடன் கலந்துரையாடிய அமைச்சர் அவர்கள், விளையாட்டுக் கழக மைதான வேலி, முன்பள்ளி மற்றும் பொது மண்டபத் திருத்தம் போன்றவற்றிற்காக கட்சியின் நிதியிலிருந்து முதற்கட்டமாக நான்கு இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளார்.

இதற்கான காசோலையை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளரும், பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் தம்பிராசா மணீதரன் ஆகியோர் அம்பன் கணேசா சன சமூக நிலையத்தலைவர் க.பிரபாகரனிடம் அம்பன் முன்பள்ளியில், சமூக மட்ட அமைப்புக்களின் முன்னிலையில் கையளித்தனர்.

# உடையார்கட்டு மக்களுக்கு மின்சார விநியோகம் எப்போது?

(உடையார்கட்டு)

உடையார்கட்டுப்பகுதிக் கிராம மக்களுக்கான மின்சார வீநியோகத்திட்டம் மேற்கொள்ளப் படவில்லை.

இப்பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு ஒரு வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், குடியிருப்புகளுக்கான மின்சார விநியோகம் இடம்பெறவில்லை.

பரந்தனிலிருந்து புதுக்குடியிருப்புவரை மின்சார விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

ஆயினும், இந்தக் கிராம மக்களுக்கான மின்சார விநியோகம் இடம்பெறவில்லை.

பரந்தன் முல்லைத்தீவு பிரதான வீதியிலுள்ள உடையார்கட்டு வர்த்தக நிலையங்களுக்கு மின்விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

ஆயினும் உடையார்கட்டு தெற்கு உடையார்கட்டு வடக்கு, ஆகிய கிராமசேவைகளிலுள்ள பிரிவுகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளன.

தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டு தற்போது இவர்கள் வாழ்ந்து வருகின்றனர். நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான தெரிவுகள் இடம்பெற்ற நிலையில் உள்ளது.

இரு கிராம சேவையர் பிரிவுகளிலும் இரண்டு பாடசாலைகள், முக்கிய வணக்கஸ்தலங்கள், பொது மண்டபங்கள் என்பன அமைந்துள்ளன.

இப்பகுதிக்கு இதுவரை மின்சார விநியோகம் மேற்கொள்ளப்படததால் விவசாயச் செய்கையில் ஈடுபடும் மக்கள் நீர் இறைக்கும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்து தமது விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதற்காக எரிபொருட் செலவு உட்பட பெருமளவு நிதியினை விவசாய நடவடிக்கைகளுக்காகச் செலவிடுகின்றனர்.

இப்பகுதிகளுக்கு மின்சாரம் விநியோகம் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் விவசாய நடவடிக்கைகள் உட்பட பல்வேறு தரப்பினரும் மிகுந்த் பயன் அடைவர்.

இவ்விடையம் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனம் எடுத்து மின்சாரம் விநியோகம் மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# துரிதகதியில் புனரமைக்கப்படும் கிளிநொச்சி "கொங்கிறிற்" வீதிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் கிராமப்புற வீதிகள் கொங்கிறிற் வீதிகளாக மாற்றப்படும் நடவடிக்கைகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

ஏற்கனவே சிறுவீதிகளாகவும், மணல்வீதிகளாவும் போக்கு வரத்துக்குத் தகுதியற்ற நிலையில் காணப்பட்ட முக்கியமான வீதிகளே தற்பொழுது கொங்கிறிற் வீதிகளாக மாற்றப்பட்டுவருகின்றன.

கணேசபுரம், திருநகர், ஜெயந்திநர், கனகபுரம் உட்பட பல கிராமங்களின் சிறு வீதிகள் கொங்கிறிற் வீதிகளாக்கப்பட்டு வருகின்றன.

'வடக்கின் வசந்தம்'திட்டத்தின் கீழ் கடந்த வருடம் இதற்கான ஆரம்பக் கட்டப்பணிகள் இடம்பெற்றன. இதில் ஜெயந்திநகர் உட்பட்ட சில கிராமங்களின் வீதிகள் பூரணமாகும் தறுவாயில் உள்ளன.

மற்றைய கிராமங்களின் வீதிகள் துரித கதியில் கடந்த ஒரு மாத காலத்திற்கும் மேலாக இடம்பெற்று வருகின்றன.

இந்த வீதிப்புனரமைப்புப் பணிகள் காரணமாக இப்பகுதி மக்கள் குடியிருக்க ஆரம்பித்த காலத்திலிருந்து எதிர்நோக்கி வந்த போக்கு வரத்துப் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்பட்டுள்ளது.

அத்துடன் வீதிகளை அண்டிய கால்வாய்களும், சீரக அமைக்கப்பட்டு நீர் வழிந்தோடும் மதகுகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் மழைகாலங்களில் நீரில் மூழ்கும் சில கிராமங்கள் தற்பொழுது அந்தப்பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுள்ளன.

சீரான வடிகால் பணிகளும், கொங்கிறிற் வீதி அமைக்கும் பணிகளும் நிறைவுற்றதும் இதுவரை காலமும் இப்பகுதி மக்கள் எதிர்கோக்கி வந்த போக்கு வரத்துப்பிரச்சினைகள் உட்பட கிராமங்களில் நீர்தேங்கும் நடவடிக்கைகளுக்கும் முடிவு எட்டப்படும் என இப்பகுதி மக்கள் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றனர். (21)



ஓமந்தை புகையிர நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி தண்டவாளம் பொருத்தும் பணி இடம் பெறுவதனைக் காணலாம். (130)

# பதிவிறக்கப் பெட்டகம்

பஸ் நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தவரிடம் கை நீட்டினான் பிச்சைக்காரன்.

"இரண்டு நிமிடத்திற்கு முன் தானே ஐந்து ரூபா கொடுத்தேன்..." என்றார் அவர்.

"பழங்கதை பேசிப் பேசியே தான் நம்ம நாடு கெட்டுப் போச்சு..." என்று முணுமுணுத்துக் கொண்டே நகர்ந்தான் பிசைக்காரன்.

*** *** *** ***

**முதலாளி திட்டினார்:** ஏனப்பா, உன் அப்பா எனக்கு நண்பர் என்பதால்... உன்னை வேலைக்கு சேர்த்துக் கொண்டேன். நீ ஒன்றும் சரிவர மாட்டாய் போலிருக்கே...

**வேலையாள் சொன்னான்:** நீர் என் அப்பாவின் நண்பர் என்பதால் தான், இதுவரை நானும் உம் மீது கை வைக்காமல் இருக்கிறேன், கவனம்!

*** *** *** ***

"வைக்கோல் சாப்பிட்டா கண் பார்வைக்கு நல்லது"

"சும்மா அளக்காதே..."

"உண்மையைத்தான் சொல்றேன். எந்த மாடாவது மூக்குக் கண்ணாடி போட்டிருக்கா?"

*** *** *** ***

**அதிகாரி:** ஒருவர் முகத்தில் ஈயாடவில்லை என்றால் என்ன அர்த்தம்?

**நேர்முகத்தேர்வுக்கு வந்தவர்:** அவர் தலைக்கு மேல் மின்விசிறி வேகமாக சுற்றிக் கொண்டிருக்கிறது,என்று அர்த்தம்!

*** *** *** ***

"என் காதலி, எங்களுடைய காதலைப்பற்றி அவ அப்பாவிடம் சொல்லுறதுக்கு பயப்பிடுறா அங்கிள்"

"அப்படியா, என்னிடம் உன் காதலியை கூட்டிக்கொண்டு வா, நான் தைரியம் சொல்கிறேன்"

"மாலா, உன் அப்பா உன்னை கூப்பிடுகிறார், தைரியமா வா"

*** *** *** ***

"பாயாசம் ஒரு தரம்... பாயாசம் இரண்டு தரம்... பாயாசம் மூன்று தரம் என்று ஏலம் விடுறியே ஏன்?"

"பாயாசம் காய்ச்சி இறக்கும்போது ஏலம் போடும்படி புத்தகத்திலே எழுதியிருக்கு"

*** *** *** ***

**ஆசிரியர்:** ஏன்ரா, பாடப்புத்தகத்தை அவ்வளவு தூரத்திலே வைச்சிட்டு, நீ இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறாய்?

**மாணவன்:** பிரச்சினைகளை தள்ளி வைக்கோணும் என்று நீங்கள்தானே சேர் சொன்னீங்கள்!

*** *** *** ***

**ரீச்சர்:** ஒரு ஊரிலே ஒரு வயசான பாட்டி இருந்தாங்க....

**மாணவி:** பொய் சொல்லாதீங்க ரீச்சர் எந்த ஊரிலேயும் ஒரு வயசுப் பாட்டி இருக்கவே மாட்டாங்க.

*** *** *** ***

**வழுக்கைத் தலையர்:** எனக்கு இப்படி முடி கொட்டினதுக்கும் எனக்கிருக்கிற குடிப்பழக்கத்துக்கும் சம்பந்தம் உண்டா டாக்டர்?

**டாக்டர்:** சேச்சே! குடி குடியைத்தான் கெடுக்கும். முடியை ஏன் கெடுக்கப்போகுது!

*** *** *** ***

**கண்டக்டர்:** எங்கே போகணும்? டிக்கெட் எடுங்கம்மா

**பயணி:** பின்னால மீசை வச்சிருப்பவர் எடுப்பார்

**கண்டக்டர்:** எல்லாரும் முன்னாலதானே மீசை வச்சிருப்பாங்க... பின்னால எப்படி?

*** *** *** ***

பிரபல மோட்டார் கார் தயாரிப்பாளர் ஹென்றி போர்டின், 50வது ஆண்டு திருமண விழாவில், "உங்களது திருமண வாழ்க்கையின் வெற்றிக்குக் காரணம் என்ன?" என்று கேட்டனர் நண்பர்கள். அவர் சொன்னார்: "கார் வியாபாரத்தை போல ஒரே மொடலைப் பின்பற்றுகிறேன்!"

*** *** *** ***

லண்டன் விமான நிலையத்தில், பயணிகள் எதிரில் புத்தகமொன்றை படித்துக் கொண்டிருந்ததற்காக, விமான ஓட்டி ஒருவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். அவர் படித்துக் கொண்டிருந்த புத்தகம் என்ன தெரியுமா? "பத்தே நாட்களில் விமானம் ஓட்டுவது எப்படி?" என்பது தான்!

# க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கான அலகு ரீதியான குறிப்புகள்

புவியியல்

ஆசிரியர் : P.S.V. தினேஸ்
B.A(Hons) Geo.Spl.

1) பட வரைகலையியலின் தந்தை என அழைக்கப்படுபவர்.
   1) மங்கவுஸ் 2) டட்லிஸ்ராம்
   3) அனெக்சி மென்டர் 4) P.E ஜேம்ஸ்
   5) பென்ச் றிவோதா

2) புயலடிக்கும் நகரம், மலைகளின் இளவரசி எனக் குறிப்பிடப்படுபவை முறையே
   1) உரோமம், இமயம் 2) ஜப்பான், சுலைமான்
   3) சிக்காக்கோ, கொடைக்கானல் 4) மும்பாய், உதகமண்டலம்
   5) கொச்சின், பமீர்முடிச்சு

3) இலங்கையில் உள்நாட்டு நீர்நிலைகள் குறைவாகவும், அதிகமானதாகவும் உள்ள மாகாணங்கள் முறையே
   1) கிழக்கு மாகாணம், மேல் மாகாணம்
   2) சப்பிரகமுவா - வடமத்திய மாகாணம்
   3) வடமத்திய, ஊவா மாகாணம்
   4) மேல், மத்திய மாகாணம்
   5) தென், மத்திய மாகாணம்

4) "பச்சைத்தரவு" (Raw Data) என்றால் என்ன?
   1) முதலாம் நிலைத்தரவு 2) இரண்டாம் நிலைத்தரவு
   3) காவித்தரவு 4) நெய்யரித்தரவு
   5) இடம்சாராத் தரவு

5) "Devana Ran" (திவன ரண்) திட்டம் என்றால் என்ன?
   1) உயிரியல் வாயுக்களை உற்பத்தி செய்வது
   2) அழிவினை எதிர்கொள்ளும் உள்நாட்டு தாவர இனப்பாதுகாப்பு
   3) சுற்றுச்சூழல் உணர்வுமிக்க சமூகத்தினை உருவாக்கல்.
   4) உள்நாட்டு மண்வளங்களை பெறுமதியாகப் பயன்படுத்தல்.
   5) திண்மக் கழிவு முகாமைத்துவத்திட்டம்.

6) "தரவுவங்கி"இற்கு சிறந்த உதாரணங்களாகக் கொள்ள முடியாதது.
   1) ஆவணக்கோப்புக்கள் 2) மின்னஞ்சல்
   3) வன்தட்டு 4) இறுவட்டு 5) களஆய்வகம்

7) "சொனொரன் பாலை வனம்" பரவலடைந்துள்ள தளங்கள் எவை?
   1) தென் அமெரிக்கா, அரிசோனா, கலிபோர்னியா
   2) அரிசோனா, கலிபோர்னியா, மெக்சிக்கோ
   3) அரேபியா, வெனிசுவெலா
   4) ஈரான், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான்
   5) நியூமெக்சிக்கோ, அரேபியா, ரெக்சாஸ்

8) பின்வரும் கூற்றுக்களில் தாழ்நிலஈரவலய, புல்நில, புதர்காடுகளின் குணவியல்புகளினை முறையே பொருத்தமாக இனங்காட்டுவது,

கூற்று - A இவை சராசரியாக 124340.8 Ha நிலப்பரப்பில் பரவலடைநதுள்ளது.
கூற்று - B 1250 - 2000 mm மழை கிடைப்பதுடன் கருங்காலி, வேம்பு, மில்ல போன்றனவும் காணப்படுகின்றன.
கூற்று - C போபத்தலாவ, நக்கிள்ஸ், மன்னம்பிட்டிய, சோமாவதி போன்ற இடங்களில் பரவலடைந்துள்ளன.
கூற்று - D கன்னெலிய, தெதியகல, நாக்கியாதெனிய போன்றவற்றில் காணப்படுகிறன.
கூற்று - E எரமினியா, குகுல்கடு, கள்ளி போன்ற தாவர இனங்களைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

   1) B,C,D 2) A,C,E 3) A,B,C
   4) C,D,E 5) D,A,E

9) சர்வதேச நீர்முகாமைத்துவ நிறுவனத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள்
   1) 69 2) 68 3) 58 4) 76 5) 60 நாடுகள்

10) தரவுத்தளம் ஒன்றிலுள்ள முழுக்குடியினையும், மாதிரி அலகுகளாகப் பிரித்து, அவ் அலகுகளில் எழுமாற்றாக எடுக்கப்படும் அலகுகள் மீண்டும் உப அலகாக பிரிக்கப்பட்டு, மாதிரி எடுக்கும் நுட்பமுறை.
   1) முறைமையான மாதிரி 2) கொத்தணிமாதிரி
   3) படையாக்கப்பட்ட மாதிரி 4) எளிய மாதிரி
   5) பங்குவீத மாதிரி

11) கீழ்வருவனவற்றுள் இந்தியாவின் பல்தேசியக் கம்பனி எது?
   1) யுனிலிபர் 2) கார்கில்
   3) விம்போ 4) கெய்சி 5) காட்பரி

12) உலகப்பேரழிவு தடுப்புதினம் எப்பொழுது அனுஷ்டிக்கப்படுகின்றது?
   1) ஒக்டோபர் - 14 2) யூலை - 11
   3) மார்ச் - 21 4) மே - 22
   5) ஒக்டோபர் - 04

13) ஓரங்குல இடவிளக்கப்படத்தில் உள்ள கட்டமொன்றினை இரண்டு மடங்காக சிறுப்பிக்கும் பொழுது பயன்படுத்தப்படும் நேர்கோட்டு அளவுத்திட்டம்
   1) 1 miles 0 1 2 3 miles (1 அங்குலம்)
   2) 2 miles 0 2 4 miles (2 அங்குலம்)
   3) 1 miles 0 1 2 3 miles (2 அங்குலம்)
   4) 2 miles 4 6 8 10 12 miles (1 அங்குலம்)
   5) 2 miles 0 1 2 3 4 miles (1 அங்குலம்)

14) வடமத்திய மாகாண நகர வலயத்தினுள் உள்ளடக்கப்படுபவை
   1) அம்பாந்தோட்டை
   2) மொனராகலை, பொலனறுவை, தம்புள்ள
   3) திருகோணமலை, அனுராதபுரம், தம்புள்ள
   4) களுத்துறை, கம்பஹா, கொழும்பு
   5) பதுளை, பொலநறுவை, அநுராதபுரம்

15) காவித்தரவு தொடர்பாக மிகப் பொருத்தமான கூற்று
   A - தொடர்ச்சியற்ற தரவுகளினைக் காண்பிக்கலாம்.
   B - புள்ளி, பரப்பு, கோடு போன்றவற்றினூடாக காட்சிப்படுத்தலாம்.
   C - Pixel இன் அளவு சிறிது எனின் அளவுத்திட்டம் பெரிதாகக் காணப்படும்.
   D - மேற்படிதல் பகுப்பாய்வுகளிற்குப் பொருத்தமானது

   1) C,D 2) A,C 3) A,B
   4) A,D 5) B,D

16) 2000 - 2010 ஆம் ஆண்டு வரையான மோட்டார் வாகன, கப்பல் கட்டுமான, இலத்திரனியல் உற்பத்தி போக்குகளினை இனங்காட்டப் பொருத்தமான படவரைகலையியல் நுட்பமுறை
   1) கூட்டுபார் 2) கூம்பக பார்
   3) தொகுதி பார் 4) பல்கோட்டு பார்
   5) பிரிக்கப்பட்ட வட்ட வரைபடம்

17) முக்கலக் கருதுகோளில் உள்வாங்கப்பட்டுள்ள காற்றுக்கள் எவை?
   1) போன்காற்று, வியாபாரக்காற்று
   2) ஓரிடக்காற்று, வியாபாரக் காற்று
   3) வடகீழ் வியாபாரக் காற்று, வடமேலைக் காற்று
   4) வடமுனைவுக் காற்று, வடகீழ் வியாபாரக் காற்று
   5) தென் மேலைக்காற்று, தென்முனைவுக் காற்று

18) வடக்குத் தெற்கு, மேற்குக் கிழக்கான போக்கில் சுற்றி வருகின்ற செய்மதிக்கு உதாரணமாகக் கொள்ளக்கூடியது
   1) NOAA, TIROS 2) Insat
   3) Tiros Geos 4) Gms, Landsat -1
   5) Insat, meteosat

19) உலகளாவிய ரீதியில் அதிகரித்த பிறப்பு விகிதம் கொண்ட நாடுகள் முறையே...
   A - உகண்டா B - எத்தியோப்பியா C - நைகர்
   D - மாலி E - இந்தியா F - சீனா

   1) A,D,B 2) F,E,B 3) C,A,D
   4) C,A,D 5) F,D,B

20) பின்வருவனவற்றுள் முரண்சூறாவளி தாக்கத்திற்கு உட்படாத தளங்கள்
   1) சைபீரியா, மேற்கு ஐரோப்பா
   2) வடசீனா, ஜப்பான்
   3) மத்திய அமெரிக்கா, வடகனடா
   4) ஜப்பான், சைபீரியா
   5) வடநோர்வே, இந்தியா

21) செய்மதித் தொலையுணர்வு மூலம் பெறப்பட்ட விம்பங்களை இனங்காட்டப் பொருத்தமான நெய்யரித்தரவு வடிவம் யாது?
   1) ASCII 2) JPEG 3) BSQ
   4) Arcview 5) Tiff

22) மனிதவள அபிவிருத்திச் சுட்டெண்ணில் முன்னிலையில் உள்ள நாடுகள் வரிசையில்...
   1) ஐஸ்லாந்து, நோர்வே, அவுஸ்ரேலியா
   2) நோர்வே, ஜப்பான், டென்மார்க்
   3) லக்ஸம்பேர்க், நோர்வே, கனடா
   4) நோர்வே, ஐஸ்லாந்து, அவுஸ்ரேலியா
   5) கனடா, லக்ஸம்கேர்க், சுவீடன்


23) இலங்கையின் இறப்பு, பிறப்பு விகிதங்களை முறையே (2010 யூலை)
   1) 18.5, 5.98 2) 6, 17.2
   3) 5.9, 17.0 4) 6.82, 18.93
   5) 5.96, 17.04

24) அருவித்தாரை தொடர்பான கருத்துக்களை முதன்முதலில் முன்வைத்தவர்?
   1) Kodeswaran 2) Rossby
   3) Berall 4) Vernon Drovak
   5) Trewartha

25) தொலையுணர்வின் பிரதான கூறுகளில் உள்ளடக்கப்படாதது.
   1) மின்காந்த சக்தி
   2) வளிமண்டலம்
   3) மேற்பரப்பியல் அம்சங்கள்
   4) தரவுகளினைப் பதிவு செய்யும் கருவி

## பகுதி - II

பகுதி - I




01. 1)

அ) தரப்பட்டுள்ள "ஹப்புத்தளை" இடவிளக்கப்படத்தில் அதிகூடிய உயரம் கொண்ட சமவுயரக் கோட்டுப் பெறுமானத்தினை அடியில் தருக

ஆ) T -Q இனூடாக இனங்காட்டப்பட்டுள்ள பௌதிக நிலவுறுப்பு யாது?

2)

அ) Y -1 இனூடாக காட்டப்பட்டுள்ள அம்சம் யாது?

ஆ) U -V, M -N இனூடாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலவுறுப்புக்களினைப் பெயரிடுக?

3) படப்பகுதியினூடாக நகருகின்ற நதிவடிநிலத்திற்கும், அங்கு உருவாகின்ற நிலவுருவவியல்களிற்கும் இடையிலான தன்மைகளினைப் பொருத்தமான வரைபடங்களினூடாக விளக்குக?

4)

அ) A, B எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள பிரதான பௌதிக அம்சங்கள் யாவை?

ஆ) இங்கு முன்னெடுக்கப்படுகின்ற நிலப்பயன்பாட்டிற்கு அம்சங்களினைக் குறிப்பிட்டு, அவற்றுள் பயிர் உற்பத்திக்கும் படத்திற்கும் ஆன தொடர்பு களினை ஆராய்க.

5) ஹப்புத்தளை படப்பிரதேசத்தின் ஒரு பகுதியினை காட்டும் இப்படப் பிர தேசத்தினூடாக பொருளாதாரத் தேட்டங்களினை சம்பாதித்துக்கொள்ளும் வழிவகைகளினைக் குறிப்பிட்டு விபரிக்குக.

**பகுதி - II**

02) 1) புவியில் தகவல் ஒழுங்கின் (GIS) பரிமாணங்களினைப் பெயரிட்டு, அவற்றுள் கற்பனைக் கோடுகளினை அடிப்படையாகக் கொண்டு சேகரிக்கப்படும் தரவினது முக்கியத்துவங்களினைப் பரிசீலிக்குக?

2) தரவுத்தள முகாமைத்துவ செயற்பாடுகளினை (DBMS) சுருக்கமாக விபரிக்குக?

3) பாரம்பரிய பட வரைகலையிலிருந்து இலத்திரனியல் தரவுத்தள ரீதியான படவரைகலை விகாரமடையும் பாங்கினையும், சமகால உலகில் அத்தகைய படங்களது உருவாக்கங்களின் அவசியத்தையும் ஆராய்க.

4) GIS இன் பிரதான செயற்பாடுகளினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக?

**வட- கிழக்கு மாகாணதுறைசார் உற்பத்திகள்**
**1981 - 1990 (million ரூபாவில்)**

| துறை | 1981 | 1984 | 1987 | 1990 |
|---|---|---|---|---|
| பயிர்ச்செய்கை | 923.7 | 665.2 | 719.4 | 501.9 |
| பரும்படியாக்கம் | 119.6 | 187.9 | 73.0 | 106.6 |
| வர்த்தகம் | 579.3 | 787.6 | 505.8 | 558.8 |
| போக்குவரத்து | 224.1 | 276.6 | 276.8 | 292.8 |
| மொத்தம் | 1846.7 | 1917.6 | 1575.8 | 1460.1 |

**மூலம் : இலங்கைத் திட்டமிடல் அமைச்சு**

1) மேலே அட்டவணையிலுள்ள அம்சங்களினை வரைந்து காட்ட மிகப் பொருத்தமான படவரைகலையியலினைத் தேர்வுசெய்து வரைபடமாக்குக?
2) நீர் வரைந்த வரைபடத்தினூடாக அவதானிக்கக்கூடிய மூன்று முனைப்பான குணாம்சங்களைத் தருக.

3) பின்வரும் அம்சங்களில் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1) மீடிறன் வளையி
2) சிதறல் வரைபடம்
3) நியம விலகல்
4) மணிக்கூட்டு வரைபடம்

## பகுதி II

01)
1."புவியோட்டுத் தகட்டோட்டசைவு" என்பதனூடாக நீர் விளங்கிக் கொள்வது யாது?

2. புவியோட்டசைவினால் தோற்றம் பெறும் நிலவுருவங்கள் 10 I பட்டியற் படுத்துக?

3) வினா II இல் "நீர் சுட்டிய நிலவுருவங்களில் 4 இனை அவற்றின் புனையா வரைபடங்களின் உதவியோடு விளக்குக?

4) புவித்தகட்டோட்டசைவின் பரிமாணங்களை ஆராய்வதுடன் அதனால் உரு வாகும் நிலவுருவாக்க செயன்முறைகள், பேரழிவுகள் போன்றவற்றைப் பொருத்தமான சான்றாதாரங்களின் துணையுடன் விளக்குக.

02)
1) துருவப் பிராந்தியங்களின் முனைப்பான குணவியல்புகள் 5 இனைக் குறிப்பிடுக?

2) "சமகால உலகில் அதிகரித்துவருகின்ற வெப்பத்தின் நிமிர்த்தம் பனிப் படலங்கள் யாவும் உருகலடையும் நிலைக்குட்பட்டுள்ளது" இவ் உருவல் செயன்முறைகளை விளக்குக?

3) பனியாற்று நகர்வினால் உருவாகின்ற எட்டு நிலவுருவங்களினை முன்வைத்து அவற்றில் பிரதானமான 4 நிலவுருவங்களை புனையா வரைபடங்களின் துணையுடன் விளக்குக.

4) சாதாரண தின்னல் நிலவுருவும், இமவாக்கம் போன்றவற்றினது குணாம்சங் களினை ஒப்பீடு செய்க.

03)
1) உயிர்ப்பெருந்திணிவு என்பதனூடாக நீர் விளங்கிக் கொள்வது யாது?

2) மத்திய கோட்டுக் காலநிலையானது நிலவுகின்ற பகுதிகளிலுள்ள பசும்போர் வைகள் சமகாலத்தில் அருகலுற்றுச் செல்வதற்கு ஏதுவான காரணிகளை விளக்குக?

3) வினா இல 2 இல் நீர் பெயரிட்ட காரணிகளால் ஆவியாக்க, ஆவியுயிர்ப்புத் தன்மைகள் கணிசமான அளவு பாதிப்புற்றுச் செல்லும் நிலைமை காலப்போக்கில் ஏற்படலாம். இதனால் எதிர்கால சந்ததியினர் எதிர்நோக்கவுள்ள பாரிய இடரி னைப் பெயரிட்டு, அவ் இடரிற்கு ஏதுவான பிறகாரணிகளை இலங்கையினைத் தளமாகக் கொண்டு ஆராய்க?

4) அவ் அனர்த்தத்தினை இழிவளவாக்க முன்னெடுக்கப்பட்டு வருகின்ற செயற்திட்டங்களினை விளக்குக?

04)
1) "கோளம் வெப்பமயமாதல்" என்பதன் செயற்பாட்டினைச் சுருக்கமாக விளக்குக?

2) பூகோளப் பிராந்தியங்களில் ஏற்பட்டு வருகின்ற வெப்பநிலை உயர்வு, காலநிலை மாற்றம் போன்ற செயற்பாடுகளிற்கு ஏதுவாக அமைகின்ற காரணி களை நன்கு இழிவளவாக்க முயலுகையில் ஏற்பட்டு வருகின்ற சமூக. பொருளா தார, அரசியல் ரீதியான விளைவுகளை ஆராய்க.

3) கோளப் பகுதியில் வெப்பத்தின் தன்மைகள் உயர்வடைந்து பனிப்படலங்கள் உருகலுற்று கடல்நீர் மட்டம் உயர்வடைவதனால் கரையோரத்தினை அடுத்துள்ள பல பிராந்தியங்கள் மாசுற்று வரும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதனால் ஏற்படவுள்ள தாக்கங்களைப் பரிசீலிக்குக?

4) வெப்பமயமாதல், செயன்முறைகளை கணிசமான அளவு குறைத்துக்கொள்ள சர்வதேச ரீதியில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களது பங்களிப்புகளினை தக்க சான்றாதாரங்களினூடாக குறிப்பிடுக?

05)
1) சனத்தொகை நிலைமாறுகால கட்டத்தன்மைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் கூம்பக் தன்மைகளின் குணவியல்புகளை குறிப்பிட்டு, அவற்றுக்குப் பொருத்தமான நாடுகளைப் பெயரிடுக?

2) "சமகால உலகில் வளர்முகப் பகுதிகளில் மனிதவளமானது உயரளவான போக்கிலுள்ளதனால் வேண்டிய நிலமை உருவெடுத்துள்ளது" இவ் வளத்தின் போக்கினை இழிவளவாக்க முயலுகையில் எதிர்நோக்கவுள்ள சவால்களை ஆராய்க.

3) குடித்தொகைத் தன்மைகள் தொடர்பாகத் தோற்றம் பெற்ற கோட்பாடுகளில் குடிப்பெருக்கவாதக் கோட்பாடுகளின் தன்மைகளினை விளக்குக.

4) எதிர்வரும் காலங்களில் (2050) சனத்தொகையினுடைய அளவுசார் பரிணாமங்கள் "பாரிய கைத்தொழில் துறையின் வளர்முக நாடுகள்" மத்தியில் மாற்றமுற்றுள்ளதனால் ஏற்படவுள்ள விளைவுகளைப் பரிசீலிக்குக.

06)
1) தரப்பட்ட உலகப் புறவுருவப்படத்தில் மோட்டார் வாகனம் / இரும்புருக்குக் கைத்தொழில் உற்பத்தியில் சமகாலத்தில் முன்னிலையில் திகழ்கின்ற தலா 3 தளங்களினைக் குறிப்பிடுக?

2) நீர் தேர்வு செய்த பாரிய கைத்தொழிற்துறை உற்பத்தியில் சமகாலத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்று விளங்கும் தளத்திற்கு, ஏதுவான காரணிகளை பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க.
1. திட்டமிடலுடன் கூடிய முகாமைத்துவத் திறன்
2) அரச ஆதரவும் சலுகைத் திட்டங்களும்.

3) சமகாலத்தில் மோட்டார் வாகன உற்பத்திப் போக்கில் (ஆசிய - அமெரிக்க) நாடுகளது நிலைப்பாடுகளினைக் குறிப்பிடுக?

4) "உலக அரங்கில் புதிதாக கைத்தொழில் மயமாகி வருகின்ற நாடுகளினது ஆதிக்கம் பழைமையான சந்தைகளின் ஸ்திரத் தன்மைகளினைப் பாதிப்படையச் செய்துள்ளது" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க?

07)
1) இலங்கையின் தெங்கு முக்கோண வலயங்களினை குறித்துப் பெயரிடுக.

2) தெங்கு உற்பத்தி நடவடிக்கைகளின் போது எதிர்நோக்கி வருகின்ற சவால்களினை இலங்கையின் சமகால அபிவிருத்திக் களநிலைகளினை ஆதாரமாகக் கொண்டு விளக்குக?

3) "சமகாலத்தில் பெருவிருத்தி பெற்று வருகின்ற தொழில்நுட்பத் திறமுறைகளினால் விவசாய ரீதியிலான உற்பத்தி, ஏற்றுமதி நடவடிக்கைகள் அபரிமிதமான போக்கிலேயே காணப்படுகின்றன" இக் கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? தகுந்த சான்றாதாரங்களுடன் பரிசீலிக்க.

4) முதலாவது பசுமைப் புரட்சி செயன்முறையில் சூழலியல், மனுக்குல அமைப்புகளிற்கு ஏற்பட்ட விளைவுகளைக் குறிப்பிட்டு அத்தாக்கங்களை இழிவாக்க உம்மால் முன்வைக்கக்கூடிய ஆலோசனைகளை விளக்குக.

08)
1) குடியிருப்புகளினை அதன் பருமன், வடிவ அடிப்படையில் பாகுபாடு செய்து உதாரணங்களுடன் குறிப்பிடுக?

2) கடலக வளங்களினை ஆதாரமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற தொழில் முயற்சிகளினைப் பெயரிட்டு, அப் பகுதிகளில் நடைபெறும் தின்னல் செயற்பாடுகளிற்கு ஏதுவான காரணிகளுடன் விபரிக்குக?

3) இக் கடலக வளங்களில் இலங்கையின் நீலப்புரட்சி செயன்முறையின் போது எதிர்நோக்கும் சவால்களினைக் குறிப்பிடுக.

4) வினா இல iii நீர் முன்வைத்த சவால்களினை குறைப்பதற்கு இலங்கை அரசு முன்னெடுத்து வருகின்ற அபிவிருத்தித் திறமுறைகளை ஆராய்க.

## புவியியல்

ஆசிரியர் : S. வீரசுதாகரன்

1) புவி நடுக்கம், காற்றின் வேகம் என்பவற்றுடன் தொடர்புடைய அளவுத்திட்டம் முறையே
அ) றிச்டர், கதிமானி ஆ) போபார்ட், றிச்டர்
இ) அனுமாமானி, றிச்டர் ஈ) போபார்ட், கதிமானி
உ) றிச்டர் போபார்ட்

2) எக்காலப்பகுதியில் சம இராக்காலம் தோன்றுகிறது?
அ) மார்ச் 21, செப்ரெம்பர் 23 ஆ) யூன் 21, டிசம்பர் 22
இ) யூன் 21, செப்ரெம்பர் 23 ஈ) மார்ச் 21, டிசம்பர் 22
உ) யூன் 21, மார்ச் 22

3) பின்வரும் எந்த நெடுங்கோட்டை கிழக்கு மேற்காக கடக்கும்போது ஒரு நாள் வித்தியாசம் ஏற்படுகிறது?
அ) 1800 சர்வதேச திகதிக்கோடு ஆ) கிறீன்வீச்கோடு
இ) 900 மேற்கு நெடுங்கோடு ஈ) 900 கிழக்கு நெடுங்கோடு
உ) 1000 மேற்கு நெடுங்கோடு


4) பின்வருவனவற்றில் கால்ற் பிரதேச நில உருவங்களை மாத்திரம் கொண்ட விடை?
அ) புனற்பள்ளம், உவாலாஸ், யாடாங்கு, போல்ஜே
ஆ) புனற்பள்ளம், கூர்நுனி உச்சி, வட்டக்குகை, போல்ஜே
இ) போல்ஜே, வட்டக்குகை, லாப்பீஸ், உவாலாஸ்
ஈ) பனற்பள்ளம், உவாலாஸ், போல்ஜே, லாப்பீஸ்
உ) வட்டக்ககை, தரைக்கீழ்குலை, கும்பகச்சிகரம், போல்ஜே

5) ஒரே ஒரு கனிப்பொருள் சேர்க்கையால் உருவாகிய பாறை
அ) கருங்கல் ஆ) உருமாறியபாறை
இ) நிலக்கரி ஈ) மைக்கா

6) உரு ஆற்றின் முதுமை நிலையில் நிகழும் பிரதானமான செயல்முறை?
அ) நிலைக்குத்து சுரண்டல் ஆ) பக்கச் சுரண்டல்
இ) படிதல் ஈ) அரித்தல்
உ) பள்ளத்தாக்கு அகலமாதல்

7) சூழற்தொகுதி ஒன்றில் உள்ளடக்கப்படுபவை?
அ) விலங்குகள், தாவரம், வளிமண்டலம்
ஆ) உயிருள்ள கூறுகள், உயிரற்ற கூறுகள்
இ) நீருக்குரிய கூறுகள், மண்ணுக்குரிய கூறுகள்
ஈ) மண்ணுக்குரிய கூறுகள், வளிமண்டலத்துக்குரிய கூறுகள்

8) படத்தில் ABC ஆகிய புவிஓட்டு விருத்தி விசைகள் முறையே




அ) A இழுவிசை C அமுக்கவிசை C மேலுயர்ச்சிவிசை
ஆ) A மேலுயர்ச்சிவிசை B இழுவிசை C அமுக்கவிசை
இ) A அமுக்கவிசை B இழுவிசை C மேலுயர்ச்சிவிசை
ஈ) A அமுக்கவிசை B மேலுயர்ச்சிவிசை C இழுவிசை

9) எட்னா எரிமலை அமைந்துள்ள தீவு?
அ) ஜிப்ரால்டா ஆ) தியாராடெல்கியூகோ
இ) சிசிலி ஈ) தஸ்மேனியா

10) கூழாங்கல் நாக்குகளை உருவாக்குவது?
அ) ஓடும் நீர் ஆ) காற்று
இ) அலைகள் ஈ) பனிக்கட்டி

11) பிலிப்பைன்ஸ் யப்பான் சீனக்கடலில் தோன்றும் சூறாவளி?
அ) தொனாடோக்கள் ஆ) வல்லிவிலிஸ்
இ) தைபூன் ஈ) கரிக்கேன்

12) ஆபிரிக்காவில் சனத்தொகை கூடிய நாடு?
அ) தன்சானியா ஆ) சோமாலியா
இ) நைஜீரியா ஈ) கென்யா

13) பசுமைப்புரட்சியால் உருவாக்கப்பட்ட விதைகளால் ஏற்பட்ட அனுகூலம் அல்லாதது?
அ) நோய்களுக்குத் தாக்குப்பிடித்தல்
ஆ) பூச்சித் தொல்லைக்குத் தாக்குப்பிடித்தல்
இ) நீண்ட காலத்தில் விளைச்சல் பெறல்
ஈ) விளைச்சல் அதிகரித்தல்

14) மகாவலித் திட்டத்தில் அதிகளவில் திட்டமிட்டு அமைக்கப்பட்ட குடியிருப்புவகை?
அ) சந்திக் குடியிருப்பு ஆ) நாடாக் குடியிருப்பு
இ) சிதறிய குடியிருப்பு ஈ) கொத்தணிக் குடியிருப்பு
உ) நகரக் குடியிருப்பு

15) உலக விவசாய பாகுபாடு மேற்கொண்ட இருவர்?
அ) டி.பி.கீரிக், டார்வென் விட்டில்சி
ஆ) ஜேம்ஸ்பேக்கன், ரெய்லர்
இ) ஜேம்ஸ்வாட், விட்டில்சி
ஈ) டி.பி. கீரிக், ஜேம்ஸ் பேக்கர்

16) இலத்தீன் அமெரிக்காவில் "மில்பா" எனும் தென்கீழ் ஆசியாவில் லடாக் என்றும் கூறப்படும் பதங்கள்?
அ) கோதுமை செய்கை ஆ) பெயர்வுச் செய்கை
இ) நெற்செய்கை ஈ) நாடோடி மந்தை மேய்ப்பர்

17) இலங்கையில் விவசாயக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டது?
அ) 1930 ஆ) 1940
இ) 1970 ஈ) 1980

18) குவைத்திலும் ஐக்கிய அராபிய குடியரசிலும் நகராக்க வீச்சு?
அ) 10 - 20 ஆ) 20 - 42
இ) 42 - 65 ஈ) 80 - 97

19) பஸ்டி எனும் பதம்?
அ) எகிப்தின் சேரிகளை ஆ) சங்காயின் சேரிகளை
இ) கல்கத்தா சேரிகளை ஈ) ஜகார்த்தா சேரிகளைக் குறிக்கும்

20) 2030 இல் இலங்கையின் மொத்த குடித்தொகையில் 60 வயதிற்கு மேற்பட்ட குடித்தொகையின் சதவீதம்
அ) 5 வீதமாக இருக்கும் ஆ) 10 வீதமாக இருக்கும்
இ) 15 வீதமாக இருக்கும் ஈ) 22 வீதமாக இருக்கும்

21) இலங்கை முழுவதையும் உள்ளடக்கிய மெற்றிக் அளவை இடவிளக்கவியல் ஓரங்குல இடவிளக்கவியல் முறையே எத்தனை படமாக வெளியிடப்பட்டது?
அ) 72, 92 ஆ) 92, 70
இ) 90, 72 ஈ) 92, 72
உ) 92, 82

22) 1:50000 தேசப்படத்தில் உள்ள 4 cm தூரம் புவியில் எத்தனை Km குறிக்கிறது?
அ) 1/2 km ஆ) 1 km
இ) 2 km ஈ) 4 km

23) சம உயரக்கோடுகள் யாவும் உயரம் குறைந்த பிரதேசத்தை நோக்கி நீண்டு சாய்ந்து காணப்படும் நிலத்தோற்றம்?
அ) பள்ளத்தாக்கு ஆ) சுவகு
இ) குத்துச்சாய்வு ஈ) மலையிடுக்கு

24) G.P.S மூலம் நாம் இனங்காணக்கூடியது?
அ) ஒரு இடத்தின் தனி அமைவிடத்தை
ஆ) ஒரு இடத்தின் சார்பு நிலையத்தை
இ) ஒரு இடத்தின் தரைத்தோற்றத்தை
ஈ) ஒரு இட காலநிலையை

25) மையநிலை ஆய்வாக கொள்ளக்கூடியது?
அ) விலகல்கள் ஆ) இடையம்
இ) மாறல்திறன் ஈ) இணைபுகுணக

# பார்சிலோனா ரென்னிஸ்
# 8ஆவது முறை நடால் வசம்



(பார்சிலோனா)

பார்சிலோனா ஓப்பன் ரென்னிஸ் தொடரில் ஸ்பெயினின் நடால் சம்பியன் பட்டம் வென்றார்.

ஸ்பெயினில், ஆண்களுக்கான ஏ.டி.பி., பார்சிலோனா ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடந்தது. இதன் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் ஸ்பெயினின் ரபெல் நடால், சகநாட்டைச் சேர்ந்த நிகோலஸ் அல்மார்கோவை சந்தித்தார். போட்டியின் தொடக்கம் முதல் ஆதிக்கம் செலுத்திய நடால் முதல் செட்டை 6-4 என வென்றார். பின் இரண்டாவது செட்டிலும் அசத்திய நடால் 6-3 என சுலபமாக தன்வசப்படுத்தினார். முடிவில், ஸ்பெயினின் ரபேல் நடால் 6-4, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார்.

8ஆவது முறை பார்சிலோனா ஓப்பன் ரென்னிஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற ஸ்பெயி-னின் ரபேல் நடால் (2005,06,07,08,09,11,12,13) இத்தொடரில் 8ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை வென்றார். தவிர, இத்தொடரில் அதிக முறை சம்பியன் பட்டம் வென்ற வீரர்கள் பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

# சமநிலை



(லண்டன்)

ஆர்சனல்,மான்செஸ்டர் யுனைடட்அணிகள் மோதிய பிரிமியர் லீக் கால்பந்துத் தொடரின் லீக் போட்டி சமநிலையானது.

இங்கிலாந்தில் பிரிமியர் லீக் கால்பந்து தொடர் நடக்கிறது. இதன் லீக் போட்டியில் ஆர்சனல், மான்செஸ்டர் யுனைடெட் அணிகள் மோதின. போட்டியின் தொடக்கத்தில் ஆர்சனல் அணிக்கு வால்காட் (2ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு மான்செஸ்டர் யுனைடட் அணியின் ரொபின் வான் பெர்சி (42ஆவது நிமிடம்) பெனால்டி வாய்ப்பில் பதிலடி கொடுத்தார். பின் இரண்டாவது பாதியில் இரு அணி வீரர்களின் கோல் முயற்சி எதுவும் பலிக்கவில்லை. முடிவில், போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையானது.

# ஸ்ரெய்னும் ஒருவர்

உலகில் தோன்றிய மிகச்சிறந்த 3 வேகப்பந்து வீச்சாளர்களுள் ஒருவராக ஸ்ரெய்னை தான் கருதுவதாக பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வக்கார் யுனிஸ் தெரிவித்துள்ளார். அத்தோடு டேல் ஸ்ரெய்னின் மிகச்சிறந்த இரசிகர்களுள் தான் ஒருவர். அவருக்கு சிறந்த எதிர்காலம் உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

# போரிஸ் ரென்னிஸ்
# ஷரபோவா சம்பியன்



(ஸ்டட்கார்ட்)

போரிஸ் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் ரஷ்யாவின் மரிய ஹரபோவா கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டார்.

ஜேர்மனியில் உள்ள ஸ்டட்கார்ட் நகரில் போஸ் ரென்னிஸ் கிராண்ட் பிரிக்ஸ் தொடர் நடைபெற்றது. பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா, சீனாவின் லிநா ஆகியோர் மோதினர். ஆரம்பம் முதலே அசத்திய மரிய ஷரபோவா 6-4, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வீழ்த்தி, கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

கிண்ணம் வென்றமை குறித்து கருத்துத் தெரிவித்த மரிய ஷரபோவா, கிண்ணம் வென்றமை மகிழ்ச்சி அளிக்கின்றது. தொடர்ந்தும் வரும் போட்டிகளிலும் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பலமாக இருப்பதாக உணர்க்கின்றேன். இதன் மூலம் சிறப்பாக செயற்பட முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. எனக்கு இறுதி வரை ஆதரவு அளித்த இரசிகர்களுக்கு நன்றி என்றார்.

இதேவேளை, பெண்கள் இரட்டையர் பிரிவு இறுதியில் இந்தியாவின் சானியா மிர்சா, அமெரிக்காவின் பெதானி மட்டக்-சாண்ட்ஸ் ஜோடி, ஜேர்மனியின் லிசிக்கி, மோனா ஜோடியை எதிர் கொண்டது. இதன் முதல் செட்டை 4-6 என இழந்த சானியா ஜோடி, இரண்டாவது செட்டையும் 5-7 என பறிகொடுத்தது. முடிவில், இந்தியாவின் சானியா, அமெரிக்காவின் பெதானி ஜோடி 4-6, 5-7 என்ற நேர் செட் கணக்கில் தோல்வியடைந்தது.



# நிறைவேறுமா? கெய்லின் ஆசை

இங்கிலாந்து பிராந்திய அணிகளுக்கு இடையிலான ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரில் சமர்செட் அணியில் விளையாடுவதற்கு மேற்கிந்தியத் தீவுகளின் அதிரடித்துடுப்பாட்டக்காரர் கிறிஸ்கெய்ல் விருப்பம் தெரிவித்துள்ளார்.சர்வதேச போட்டி அட்டவணைகள், தமக்கு இடம்கொடுக்கும் பட்சத்தில், சமர்செட் பிராந்திய அணியில் விளையாட ஆர்வத்துடன் இருப்பதாக கிறிஸ் கெய்ல் குறிப்பிட்டுள்ளார். சமர்செட் பிராந்திய அணிக்காக விளையாடும் வெளிநாட்டு வீரராக இணைந்துகொள்ளும் நோக்கிலான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட கிறிஸ் கெய்ல் விருப்பம் தெரிவித்திருந்தார்.எனினும் அந்தசந்தர்ப்பத்தில், மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளால் கிறிஸ் கெய்ல் தேசிய அணியில் இணைத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.தற்போது மீண்டும் தேசிய அணியில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதால், சமர்செட் பிராந்திய அணியில் முழுமையான ஈடுபாட்டுடன் விளையாட முடியாத நிலை கிறிஸ் கெய்லுக்கு ஏற்பட்டுள்ளது. இந்தியன் பிறிமியர் லீக் கிரிக்கெட் தொடரில் விளையாடும் கிறிஸ் கெய்ல் ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டிகளில் பல்வேறு சாதனைகளுக்கு சொந்தக்காரர் என்பது குறிப்பிடத்தக்கது.






# பழிதீர்த்தது ராஜஸ்தான்

(ஜெய்ப்பூர்)

இறுதி நேரத்தில் நிலைதடுமாறிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, ஒரு வழியாக நான்கு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று கடந்த போட்டியில் அடைந்த தோல்விக்குப் பழிதீர்த்துக் கொண்டது.

ஆறாவது ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் 40ஆவது போட்டி நேற்று ஜெய்ப்பூரில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி முதலில் துடுப்பாடக் களமிறங்கியது. ஆரம்பம் அரங்கம் அதிரும் வகையில் கிறிஸ் கெய்லின் அதிரடி அமைந்திருந்திருந்தது. தொடர்ந்தும் அசத்துவார் என எதிர்பார்க்கப்பட்டபோதும் மினி சூறாவளிபோல் களத்தில் நின்ற சிறிது நேரத்தில் பந்து வீச்சாளர்களை புரட்டியெடுத்துவிட்டு வெளியேறினார். தொடர்ந்து களமிறங்கிய கப்டன் விராட் ஹோலி, டிவில்லியர்ஸ் ஆகியோர் சிறிது நேரம் தாக்குப் பிடித்து அணியின் ஓட்ட வேகத்தை அதிகரித்ததுடன் விரைவாக களத்தைவிட்டு வெளியேறினர். இதனால் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் விக்கெட்டுக்கள் சீரான இடைவெ-ளியில் சாய்க்கப்பட்டது. இருப்பினும் இறுதி ஓவரில் வினய் குமார் அதிரடியில் கலக்கி அணியின் ஓட்ட எண்ணிக்கையை சடுதியாக உயர்த்தினார். இறுதியில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வினய் குமார் ஆறு பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர்கள் அடங்கலாக 22 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். மற்றும் கிறிஸ் கெய்ல் 16 பந்துகளில் 34, விராட் ஹோலி 32, டிவில்லியர்ஸ் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து விச்சில் வட்சன் மூன்று, ஸ்ரீசாந்த் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 172 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி முதலிரு விக்கெட்டுக்களையும் 48 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை பறிகொடுத்தது. தொடர்ந்து மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த வட்சன், சம்சன் அணி மிகவும் சிறப்பான முறையில் ஆடி பெங்களூர் பந்து வீச்சாளர்களை நெருக்கடிக்குள் உள்ளாக்கியது. இருப்பினும் இந்த ஜோடி 68 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து வட்சனும் பிரட் ஹொக்கும் வெற்றியை உறுதி செய்யும் வகையில் ஆடினர். வெற்றிக்கு 10 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் வட்சன் விக்கெட் பெங்களூர் அணியால் சாய்க்கப்பட்டது. இறுதி ஓவரில் ராஜஸ்தான் அணியின் வெற்றிக்கு ஆறு ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் அடுத்தடுத்து இரண்டு விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இதனால் ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. இறுதியில் 19.5ஆவது பந்தில் பின் பவுண்டரி விளாசி அணியின் வெற்றியை உறுதி செய்தார். முடிவில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி அணி 19.5 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சம்சன் 63, வட்சன் 41, ராவிட் 22, பிரட் ஹொக் 32 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ராம்போல் இரண்டு விக்கெட்டை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக சம்சன் தெரிவானர்.

# சீன இராணுவ ஊடுருவல்; இந்தியாவுடன் பேசத் தயார்

## - சீனா அறிவிப்பு



(பீஜிங்)

லடாக் பகுதியில் சீன இராணுவம் ஊடுருவிய விவகாரம் குறித்துத் இந்தியாவுடன் பேச்சு நடத்த தயார் என்று சீனா தெரிவித்துள்ளது.

காஷ்மீர் மாநிலம் லடாக் பிராந்தியத்தில் தவுலத் பெக் ஆல்டி பகுதியில் இந்திய பகுதிக்குள் 19 கி.மீ. தூரம் வரை சீன இராணுவம் ஊடுருவி உள்ளது. அங்கு கூடாரம் அமைத்து சீன இராணுவ வீரர்கள் முகாமிட்டுள்ளனர். இதனால், அப்பகுதிக்கு இந்தியா, தனது படைகளை அனுப்பி வைத்துள்ளது. இப்பிரச்சினையில், இருநாட்டு இராணுவ அதிகாரிகளுக்கிடையிலான பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தது. படைகளை திரும்பப்பெற சீன இராணுவம் மறுத்து விட்டது. இதற்கிடையே, பிரதமர் மன்மோகன்சிங், இப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படும். என்று கூறினார்.

இந்நிலையில், பிரதமரின் கருத்து குறித்து சீன அரசிடம் நிருபர்கள் கருத்துக் கேட்டனர். அதற்கு விளக்கம் அளித்து சீன வெளியுறவு அமைச்சகம் சார்பில் ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் கூறப்பட்டு இருப்பதாவது பிரதமர் மன்மோகன்சிங்கின் கவனத்தை கருத்தை கவனத்தில் கொண்டுள்ளோம். இந்தியாவுடனான கருத்து வேறுபாடுகளை தீர்க்க இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருக்கிறோம். இருநாடுகளும் பேச்சுவார்த்தைக்கான வழிமுறை மூலம் தொடர்பு கொண்டுள்ளன. அதே சமயத்தில், எல்லை பகுதியில் அமைதியை கடைபிடிப்போம்.

சமீபகாலமாக, இந்தியாவும், சீனாவும் நட்புரீதியான ஒத்துழைப்பை வளர்த்து வருகின்றன. அதே நேரத்தில், எல்லை தகராறு உள்ளிட்ட பிரச்சினைகளை அமைதி பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள இரு நாடுகளும் உறுதி பூண்டுள்ளன. இந்த பிரச்சினைகள், இருதரப்பு உறவில் பாதிப்பு ஏற்படுத்துவதை தடுக்க விரும்புகின்றன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# எகிப்து முன்னாள் அதிபரின் கோரிக்கை மனுநிராகரிப்பு



(கெய்ரோ)

எகிப்து நாட்டின் முன்னாள் அதிபர் ஹொஸ்னி முபாரக் மீதான ஊழல் வழக்குகள் தொடர்பான மறுவிசாரணை கெய்ரோ குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

2011ஆம் ஆண்டு நடைபெற்ற மக்கள் புரட்சியின் போது பதவி விலகிய முபாரக் மீது 900 மக்களை கொன்றது உள்பட நடைபெற்ற வழக்குகளில் அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

சுமார் 2 ஆண்டு காலமாக சிறையில் தண்டனை அனுபவித்து வரும் முபாரக்கிற்கு பலமுறை உடல் நலக்குறைவு ஏற்பட்டது. இதன் அடிப்படையில், தன்னை விடுவிக்க வேண்டும் என்று அவர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தார்.

இந்த மனு நேற்று முன்தினம் தள்ளுபடி செய்யப்பட்டது. விசாரணை முடிவடையும் வரை இன்னும் 15 நாட்களுக்கு முபாரக் சிறையில்தான் இருக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

# விமானப்படை வேலையைவிட்டு விலகப்போவதாக அறிவிப்பு



(லண்டன்)

இங்கிலாந்து இளவரசர் வில்லியம், "ராயல் ஏர் ஃபோர்ஸ் எனப்படும் அந்நாட்டின் விமானப் படையின் "சீ கிங்" மீட்பு மற்றும் தேடுதல் பிரிவில் ஹெலிகொப்டர் விமானியாக உள்ளார். ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளை வேட்டையாடிய "நேட்டோ" படையில் இவர் இடம்பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் 3 ஆண்டுகளாக இப்பணியில் உள்ள வில்லியம், கடந்த ஆண்டு தனது காதலி கேட் மிடில்டனை திருமணம் செய்து கொண்டார். இளவரசி கேட் மிடில்டன் தற்போது கர்ப்பிணியாக உள்ளார். வரும் ஜுலை மாதம் இத்தம்பதியருக்கு குழந்தை பிறக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தனது முதல்வாரிசு பிறக்கும் வேளையில் குடும்பத்தை விட்டு வெகு தொலைவில், வெகு நாட்கள் பிரிந்திருப்பதை விரும்பவில்லை என சில மாதங்களுக்கு முன்னர் ஒரு பேட்டியின் போது வில்லியம் கூறியிருந்தார்.

இந்நிலையில், இன்னும் ஓரிரு மாதங்களில் விமானப்படை பணியை விட்டு விலகப்போவதாக வில்லியம் தனது உயரதிகாரியிடம் தெரிவித்துள்ளதாக இங்கிலாந்தில் இருந்து வெளியாகும் "சண்டே டைம்ஸ்" பத்திரிகை, செய்தி வெளியிட்டுள்ளது.

# திருடப்பட்ட நாணயத்தாள்கள் வீதியில் எறிந்ததால் பரபரப்பு



வீதியில் வாரி இறைக்கப்பட்ட யூரோ நாணயத்தாள்களால் பெல்ஜியத்தில் பரபரப்பு!

பெல்ஜியம் நாட்டில், பணத்தை சாலைகளில் வாரி இறைத்து, திருடர்கள் தப்பிச் சென்றனர். ஐரோப்பிய நாடான பெல்ஜியத்தின், ஜெதல்ஜெம் நகரில் உள்ள ஒரு வீட்டில் திருட்டை முடித்துக் கொண்டு பணப்பைகளுடன் வெளியே வந்த திருடர்கள், பொலிஸார் வருவதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். உடனே, தாங்கள் வைத்திருந்த பணப்பைகளை காரில் வைத்துவிட்டு, பொலிஸாரை திசை திருப்ப, தாங்கள் கொள்ளையடித்த பணத்தில் இருந்து, ஒரு பங்கை, சாலையில் வீசி எறிந்துவிட்டு ஓடினர். சாலையில் 50,100, 200 யூரோ நாணயத் தாள்கள் நிறைந்து கிடப்பதைக் கண்ட மக்கள் வேகமாக எடுத்து தங்கள் பாக்கெட்டை நிரப்பிக் கொண்டனர்.

மக்கள் அங்குமிங்கும் ஓடியதால், பொலிஸார் திருடர்களைப் பிடிக்காமல், கோட்டை விட்டனர். பொதுமக்கள், தாங்கள் எடுத்த பணத்தை, திருப்பி ஒப்படைக்கும் படி பொலிஸார் உத்தரவிட்டு உள்ளனர். இதையடுத்து, சிலர், தாங்கள் எடுத்துச் சென்ற பணத்தை பொலிஸாரிடம் திருப்பிக் கொடுத்துள்ளனர். இதுவரை 11 ஆயிரம் யூரோ மட்டுமே திரும்பக் கிடைத்துள்ளது. இன்னும் கணிசமான அளவு பணம் கிடைக்கவில்லை. கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டால், அவர்களுக்கு, 2 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை கிடைக்கும் என, பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

# தற்கொலைத்தாக்குதல் பாகிஸ்தானில் 8பேர் பலி

பாகிஸ்தானில் தற்கொலைப் படைத்தாக்குதலில் 8பேர் பலியாகினர். 45இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பாகிஸ்தானின் வடமேற்கு நகரான பெஷாவரில் நேற்று திங்கள் கிழமை காலை இந்தக்குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. பொலிஸ் வாகனம் ஒன்றினைக் குறிவைத்து இந்தக் குண்டிவெடிப்புத் தாக்குதலை பயங்கரவாதிகள் மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்தவர்கள் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## உலகச் செய்திகள்

# பின்லேடனைக் கொல்லக் காரணமான டாக்டர் சிறையில் உண்ணாவிரதம்




(இஸ்லாமாபாத்)

அல்-கொய்தா தீவிரவாத இயக்கத்தின் தலைவர் ஒசாமா பின்லேடன், 2011 ஆம் ஆண்டு அமெரிக்க "சீல்" படையினரால் பாகிஸ்தானில் சுட்டுக் கொல்லப்பட்டான்.

பாகிஸ்தானைச் சேர்ந்த 'கில் அப்ரிடி என்ற டாக்டர், அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.வின் தூண்டுதலின் பேரில், போலியாக தடுப்பூசி முகாம் என்ற போர்வையில், அபோட்டாபாத் நகரில் ஒசாமா பின்லேடன் வசித்து வந்த மாளிகையைப் பற்றி உளவறிந்து தகவல் கூறியதால் தான் பின்லேடனைக் கொல்ல முடிந்தது.

பாகிஸ்தானில் வாழ்ந்து கொண்டே அமெரிக்காவுக்கு உளவு சொன்னதற்காக டாக்டர் 'கில் அப்ரிடி கைது செய்யப்பட்டார். அவர் மீது தேசத் துரோக வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கை விசாரித்த நீதிபதி, டாக்டருக்கு 33 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். பெஷாவர் சிறையில் அவர் அடைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 6 மாத காலமாக அவரைச் சந்திக்க மனைவி, குடும்பத்தினர் மற்றும் வழக்கறிஞரை அனுமதிப்பதில்லை. உடல்நிலை சரியில்லாத வேளைகளில் முறையான சிகிச்சை அளிக்கப்படுவதில்லை என கூறி சிறை அதிகாரிகளை கண்டித்து 'கில் அப்ரிடி நேற்று முன்தினம் பெஷாவர் சிறையில் உண்ணா விரதம் மேற்கொண்டுள்ளார்.

# பங்களாதேஷில் கட்டட இடிபாடு பலியானோர் 375 ஆக உயர்வு



(தாகா)

பங்களாதேஷ் தலைநகர், தாகாவில்,எட்டு அடுக்குமாடிக் கட்டடம் நொறுங்கிவிழுந்ததில், பலியானவர்களின் எண்ணிக்கை, 375 ஆக உயர்ந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக, கட்டட உரிமையாளர் உட்பட, ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பங்களாதேஷின், தாகா நகரில், "ராணா பிளாசா" என்ற பெயரில், எட்டு அடுக்கு, வணிக வளாகக் கட்டடம், கடந்த வாரம், நொறுங்கி விழுந்தது. இதில், ஏராளமானவர்கள் புதையுண்டனர் 500இற்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை, 375 ஆக உயர்ந்துள்ளது. இன்னும் 900 பேரைக்காணவில்லை அவர்கள் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என, அஞ்சப்படுகிறது. 2,500இற்கும் அதிகமானவர்கள் உயிருடன் மீட்கப்பட்டு விட்டனர்.

கட்டடம் இடிந்து 100 மணி நேரத்திற்கு மேலாகியும், இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களின் அழு குரல்களும், முனகல்களும் கேட்பதாக, மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். எனவே, மீட்புப் பணிகள் தொடர்கின்றன.

இதற்கிடையே, கட்டட உரிமையாளர் மற்றும் தொழிற்சாலை நிர்வாகிகள் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இடிபாடுகளுக்கிடையில் குழந்தை பெற்ற பெண்கள் இந்தக் கட்டடத்தில் நிறைமாதக் கர்பிணிகள் சிலரும் பணி புரிந்தனர். கட்டட இடிபாடுகளில் சிக்கிய இரு பெண்கள், குழந்தை பெற்றுள்ளனர். அதிர்ஷ்டவசமாக மூன்று நாள் கழித்து அவர்கள் மீட்கப்பட்டனர்.

# பொதுபலசேனாவிற்கு நிதியுதவி முற்றாக மறுக்கும் நோர்வே

(கொழும்பு)

பொதுபலசேனாவிற்கு நிதி உள்ளிட்ட எந்தவொரு உதவியையும் வழங்கவில்லை என நோர்வே அரசாங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வெளியான செய்திகளை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் இனங்களுக்கு எதிராக செயற்படும் எந்தவொரு அமைப்பிற்கும் உதவியளிக்கப்படமாட்டாது என நோர்வே அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நோர்வே தூதுவராலயத்தின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கை உட்பட எந்தவொரு நாட்டிலும் இன, மத பேதங்களை ஏற்படுத்தவோ அல்லது அமைதியினை சீர்குலைக்கும் விதமாகவோ நோர்வே எந்தவொரு பங்களிப்பினையும் வழங்கவில்லை. அத்துடன் முஸ்லிம்களுக்கு எதிரான எந்தவொரு நிகழ்ச்சி நிரலும் எங்களிடம் கிடையாது.

எனினும், பொதுபலசேனாவின் உறுப்பினர்களுக்கு எமது நாடு சில வருடங்களுக்கு முன்னர் அழைப்பு விடுத்தமையையும் அவர்கள் அங்கு வந்தமையையும் ஏற்றுக்கொள்கிறோம். எனினும் குறித்த பிக்குகள் உள்ளிட்ட எட்டுப் பேர் கொண்ட குழுவினர் பேச்சுவார்த்தைக்காகவே அழைக்கப்பட்டனர். அவர்களுக்கு நோர்வே எவ்வகையிலும் நிதி உதவி வழங்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெண் சாரணர்களுக்கு ஜனாதிபதி விருது



(வவுனியா)

வடமாகாணத்தில் முதன்முதலாக வவுனியாவைச் சேர்ந்த இரு பெண் சாரணர்கள், ஜனாதிபதி விருது பெற்று சாதனை படைத்துள்ளனர் என சாரணர் அமைப்பின் வவுனியா மாவட்ட ஆணையாளர் எம்.எஸ்.பத்மநாதன் தெரிவித்தார்.

வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி பெண் சாரணர் துருப்பைச் சேர்ந்த மாணவிகளான செல்வி நிலாந்தி சிவஞானசுந்தரம், செல்வி இராசலிங்கம் நிலானி ஆகிய இருவருமே சாரணர் உயர் விருதான ஜனாதிபதி விருதினை பெற்றுள்ளனர்.

அகில இலங்கை ரீதியில் பெண் சாரணர்கள் ஜனாதிபதி விருதினை பெற்றுக்கொண்ட வரிசையில் 5ஆம் 6ஆம் நிலைகளில் உள்ள இவ்விருவரும் வவுனியா மாவட்ட சாரணர் சமூகத்திற்கும் கல்லூரிக்கும் பெருமையை தேடித்தந்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

## மேதின ஏற்பாடு யாழில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழிலாளர் ஒத்துழைப்பு குழுவின் ஏற்பாட்டில் மேதின சிறப்பு கலந்துரையாடல் நாளை மாலை 4.00 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரிக்கு அண்மையிலுள்ள டி.எம்.எஸ். தனியார் கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

சொ.சிவபாலன் தலைமையில் நடைபெறும் இக்கலந்துரையாடலில் தொழிலாளர் அமைப்புக்களைச் சார்ந்தோர் உரையாற்றவுள்ளனர். (23)

## இன்று கொடியேற்றம்

(ஆனைக்கோட்டை)

நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும் இம்மஹோற்சவத்தில் மே மாதம் 8 ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (104)

## மகா கும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

மீசாலை கிழக்கு ஸ்ரீ முத்து மாரியம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதன் முன்னோடியாக எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு இன்று காலை 7.00 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணிவரை பக்திபூர்வமாக நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக தினத்தன்று கலாபூஷணம் சிவஸ்ரீ தி.சிதம்பரநாதக் குருக்கள் மற்றும் அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபைத் தலைவர் சிவஸ்ரீ க.கிருபானந்தக் குருக்கள் ஆகியோர் அருளாசியுரை வழங்கவுள்ளனர். (11)

## காந்தியவாதி மாரியப்பன் காலமானார்

(கொழும்பு)

பிரபல காந்தியவாதியும் மதுரை சர்வோதய இலக்கியப் பண்ணையின் தலைவருமான மு.மாரியப்பன் நேற்று காலமானார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### ஈழமக்கள்...

மே முதலாம் திகதி மாலை 3.00 மணிக்கு நடைபெறவுள்ள மேதின எழுச்சி நிகழ்வுக்கு அனைவரையும் பங்கேற்குமாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

### அரசுக்கு...

முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்திடம் இருந்து உரிய தீர்வு கிடைக்காமையை ஆட்சேபித்தே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

### மக்களின்...

தலைவிரித்தாடுகின்றன. இராணுவத்தினர் தமது இரத்தத்தை சிந்தி பெற்ற வெற்றியை வைத்து 4 வருடங்கள் காலத்தை ஓட்டினர். எல்லாத்துறையிலும் நட்டம் என்று சொல்லி மாபியாக்களை உருவாக்கி வைத்துள்ளது அரசாங்கம்.

இதேவேளை, மக்களின் அனைத்து எதிர்பார்ப்புக்களையும் சீரழித்துள்ளதுடன் மக்களுக்கு வழங்கியவை அனைத்தும் பொய்வாக்குறுதிகளே. திவிநெகுமவின் மூலம் விவசாய மக்களின் வாழ்க்கையில் விளையாடியுள்ளது.

தற்போது மக்களை ஏமாற்றி வந்த அரசாங்கத்தின் கபட நாடகம் வெளியில் தெரிய ஆரம்பித்துள்ளது.

அரசாங்கத்தினுள் பிளவு ஏற்பட்டுள்ளமை மின் கட்டண அதிகரிப்பின் மூலம் வெளிப்படையாகத் தெரியவந்துள்ளது.

முன்னாள் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் ஒன்று கூறினால் தற்போதைய எரிசக்தி அமைச்சர் அதற்கு எதிர்மாறாக கூறுகிறார். இதன் மூலமாக அரசாங்கத்தின் நெருக்கடி நிலைமைகள் புலப்படுகிறது.

அரச நிறுவனங்களில் ஊழல், குற்றச் செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது குறிப்பாக இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகிய இரண்டும் மக்களுக்கு பெரும் சுமைகளாக அமைந்து விட்டன.

தனியார்துறை ஊழியர்கள் 85 வீதத்திற்கும் குறைவான சம்பளத்தையே பெறுவதாகவும், தனியார்துறை ஊழியர்களை அரசு பொருட்படுத்துவதில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

### இலங்கையில்...

இன்னும் தொடர்ந்து வருவதாக குற்றம்சாட்டியுள்ளார்.

அவுஸ்ரேலியாவின் ஏ.பி.சி. வானொலிக்கு அவர் அளித்துள்ள செவ்வியில் இலங்கையில் மக்கள் தொடர்ந்து சித்திரவதை செய்யப்படுவதாகவும், காணாமற்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

போர்க்குற்றங்களை விசாரிக்காவிட்டால், இலங்கையில் நடைபெறும் கொமன்வெல்த் தலைவர்களின் உச்சி மாநாட்டை புறக்கணிக்கப் போவதாக கனடா கூறியுள்ளதை யஸ்மின் சூகா பாராட்டியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தினால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாவிட்டால், கொமன்வெல்த் தலைவர்களின் உச்சி மாநாட்டை நடத்த அவர்களை அனுமதிக்கக்கூடாது.

அவுஸ்ரேலியா உள்ளிட்ட, ஏனைய நாடுகள் தாம் மாநாட்டில் பங்கேற்போம் என்று பலவீனமான முறையில் கூறியுள்ளது ஆச்சரியமளிக்கிறது. அவுஸ்ரேலியா குறித்து எனக்கு ஆச்சரியமாக உள்ளது. இது மிகவும் அதிர்ச்சியளிக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கடற்படை வீரரின் சடலம் உறவினரிடம் ஒப்படைப்பு

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று ஒப்படைக்கப்பட்ட அனலைதீவு கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படை வீரரது சடலம் சட்டவைத்திய அதிகாரியின் பரிசோதனையை அடுத்து அவரது தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கிரிகலயைச் சேர்ந்த இயியா இல்டொன் பனும் நாயண கொனிக்கஸ் (வயது - 26) என்ற கடற்படை வீரரது சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவரது தந்தையான கிரிகலயைச் சேர்ந்த பத்மசிறி சடலத்தை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

குறித்த கடற்படை வீரர் தனக்குத்தானே சுட்டு தற்கொலை செய்துகொண்டிருப்பதாக மருத்துவ பரிசோதனையின் மூலம் தெரியவந்திருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவ நேரம் குறித்த கடற்படை வீரருக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்ததாகவும் அதன் பின்னர் குறித்த கடற்படை வீரர் தனக்குத்தான் சுட்டு தற்கொலை புரிந்திருப்பதாகவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

குறித்த கடற்படை வீரரது சடலத்தின் கழுத்தில் காயம் ஒன்று காணப்படுவதாகவும் மேலும் தெரியவருகிறது. (பா)

# பொதுநலவாய மாநாட்டில் நியூஸிலாந்து பங்கேற்கும்

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வில் பங்கேற்கப் போவதாக நியூசிலாந்து அரசாங்கம் அறிவித்துள்ளது. நியூஸிலாந்துப் பிரதமர் ஜோன் கீ இதனை உறுதி செய்துள்ளார்.

பிரித்தானியா மகாராணி அல்லது அவரது பிரதிநிதி ஒருவர் இலங்கை அமர்வுகளில் பங்கேற்பார் எனவும், இந்த அமர்வுகளில் பங்கேற்க வேண்டியது அவசியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற தவறுகளை திருத்திக் கொள்வதற்கு இலங்கை முயற்சித்து வருவதாக நியூஸிலாந்துப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த அமர்வுகளில் பங்கேற்கப் போவதாக அவுஸ்ரேலியாவும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமர்வுகளில் பங்கேற்பது தொடர்பில் உறுப்பு நாடுகளுக்கு இடையில் முரண்பாட்டு நிலைமை நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும், இதுவரையில் எந்தவொரு உறுப்பு நாடும் அமர்வுகளை முழுமையாக புறக்கணிப்பதாக உத்தியோகபூர்வ பகிரங்க அறிவிப்பை வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

### காணி....

முயன்ற போதும் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். பிரதேச செயலகத்தின் முன்னால் கூட்டமொன்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் எதிர்வரும் 2, 3 ஆம் திகதிகளில் மீளவும் ஒன்று கூடி அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆராய்வதென தீர்மானிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எஸ்.சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்த சங்கரி, தமிழ்த் தேசிய முன்னணியின் கஜேந்திரன் மற்றும் வித்தியாதரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

### போராட்ட...

இலங்கையில் உள்ள நீதிமன்றங்களை நிரப்பிய பின்னரே நாங்கள் சர்வதேச அரங்குக்குச் செல்ல முடியும்.

ஆகையினால் நீதிமன்றத்தை நம்பி நாங்கள் வழக்குத் தாக்கல் செய்யவில்லை. அரசாங்கம் 10 வருடங்களாக உயர் நீதிமன்றத்தை ஏமாற்றியுள்ளது.' அவர்கள் உயர் நீதிமன்றத்தை எந்தவிதமாக நடத்துகின்றனர் என்பது உங்களுக்குத் தெரியாத விடயமல்ல் ஆனாலும் சட்டத்தின் படி செல்ல வேண்டிய நிலையில் உள்ளோம்.

இன்னும் மீள் குடியேற்றப்பட வேண்டிய 9,900 குடும்பங்கள் இருக்கின்றன. இதில் 5 ஆயிரம் குடும்பங்களாவது வழக்குத் தாக்கல் செய்ய முன் வருவீர்களானால் எதிர்வரும் 2 ஆம் திகதி இலங்கையில் 5 ஆயிரம் பேர் வழக்குத் தாக்கல் செய்தார்கள் என்ற ஒரு செய்தி வருமேயானால் அது உலகத்தை உலுப்புகின்ற ஒரு செய்தியாக இருக்கும்.

அதன் பின்னர் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பதாக இருந்தாலோ தொடர் போராட்டங்களை நடாத்துவதாக இருந்தாலோ இந்தத் தடைகளை மீறி செல்வதாக இருந்தாலோ நாங்கள் முன்னின்று நடத்துவோம்.

மேல் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், உயர் நீதிமன்றம் என இந்த நாட்டில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் நாங்கள் வழக்குத் தாக்கல் செய்வோம் எனத் தெரிவித்தார்.

### ரணிலுடனான...

தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரிடம் முறையிட்டதாகவும், காணாமற் போனவர்களின் குடும்பத்தினர், மன்னாரில் காணாமற் போன 472 பேரின் பட்டியலை அவரிடம் கொடுத்து அவை குறித்து நாடாளுமன்றத்தில் பேசுமாறு எதிர்க்கட்சித் தலைவரைக் கோரியதாகவும் கூறினார்.

ஆனால், எதிர்க்கட்சித் தலைவரோ அவை குறித்து எந்த விதமான பதில் கருத்தும் கூறவில்லை. மாறாக மாகாணசபைத் தேர்தல் போன்ற விடயங்கள் குறித்தே பேசியதாகவும் அவர் கூறினார்.

இதனால் தமது மாவட்ட மக்களுக்கு அவருடனான சந்திப்பினால் எந்தவிதமான பலனும் கிடையாது என்றே தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

# கொமன்வெல்த் மாநாட்டிற்குமுன்
# லண்டனில் வட்டமேசை மாநாடு

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள கொமன்வெல்த் தலைவர்களின் உச்சி மாநாட்டுக்கு முன்னதாக லண்டனில் இலங்கையின் நல்லிணக்க முயற்சிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய விவகாரங்கள் குறித்து வட்டமேசை மாநாடு ஒன்று நடத்தப்படவுள்ளதாக லண்டனில் உள்ள உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

லண்டனில் கடந்த வெள்ளிக்கிழமை கொமன்வெல்த் அமைச்சரவை நடவடிக்கைக் குழுவின் கூட்டத்தில், இலங்கை விவகாரம் குறித்து ஆராயப்படலாம் என்று கருதப்பட்டது.

ஆனாலும், இலங்கையில் இருந்து மாநாட்டை இடமாற்றம் செய்யும் முடிவு ஏதும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையிலேயே, கொமனவெல்த் செயலர் கமலேஸ் சர்மா, நவம்பரில் இலங்கையில் நடத்தப்படவுள்ள உச்சி மாநாட்டுக்கு முன்னதாக, இலங்கையின் நல்லிணக்க முயற்சிகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய விவகாரங்கள் குறித்து விவாதிக்கும் வட்டமேசை மாநாடு ஒன்றை லண்டனில் நடத்தும் திட்டத்தை முன்மொழிந்துள்ளார்.

பெரும்பாலும் வரும் ஜுன் மாதம் நடைபெறலாம் என்று கருதப்படும் இந்தக் கூட்டத்துக்கு இலங்கை அரசின் பிரதிநிதி ஒருவரும் பங்குபற்றுவதற்கான ஒப்புதலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் தாம் பெற்றுள்ளதாகவும் கமலேஸ் சர்மா தெரிவித்துள்ளார்.

இலங்கை நிலைவரங்கள் தொடர்பாக கவலை கொண்டுள்ள நாடுகளைத் திருப்திப்படுத்தும் நோக்கிலேயே, கொமன்வெல்த் தலைவர்களின் உச்சி மாநாட்டுக்கு முன்னதாக இந்த வட்டமேசை மாநாட்டை நடத்தும் யோசனையை கமலேஸ் சர்மா முன்மொழிந்துள்ளார்.

# நூல் வெளியீட்டுவிழா




(யாழ்ப்பாணம்)

உலக புத்தக தினத்தினை முன்னிட்டு யாழ். மாநகரசபை பொதுசன நூலகம் நடத்தும் "தகவலை நோக்கிய வலையின் வீசல்கள்" நூல் வெளியீட்டு விழா இன்று மு.ப. 10.00 மணிக்கு யாழ். பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் பிரதம நூலகர் திருமதி இமெல்டா கருணாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாநகரசபை பொதுசன நூலகர் சி.என்.எச்.சாள்ஸ் எழுதிய மேற்படி நூலின் வெளியீட்டு உரையை முன்னாள் பிரதம நூலகர் எஸ். தனபாலசிங்கம், மதிப்பீட்டு உரையினை யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறை உதவி விரிவுரையாளர் சி.ரமணராஜாவும் வழங்கவுள்ளனர்.

## இறுதிவரை பரபரப்பு
## பஞ்சாப்பை வீழ்த்தியது மும்



மில்லர் மற்றும் இறுதி விக்கெட்டுக்காக சிறப்பாக ஆடிய பிரவீன்குமாரின் போராட்டம் வீணாகாது கிங்ஸ் லெவன் பஞ்சாப் 4 ஓட்டங்களினால் மும்பை இந்தியன்சிடம் தோல்வியடைந்தது.

மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற 41 ஆவது போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடியது மும்பை இந்தியன்ஸ். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக சிமித், சச்சின் களமிறங்கினர்.

வழமைபோன்று சச்சின் 9 ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். எனினும் சிமித்துடன் இணைந்த கார்த்திக் 19 பந்தில் 25 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

ஆனால், பின்னர் சிமித்துடன் றோகித் சர்மாவின் ஆட்டத்தில் அணல் பறந்தது. மறுமுனையில் சிமித் 33 ஓட்டங்களுடன் ஆட்டமிளக்க போலாட் வந்தார். றோகித சர்மா போலாட் இணை இறுதி வரை ஆட்டமிழக்காது சிறப்பாக விளையாட மும்பை இந்தியன்ஸ் 3 விக்கெட்டுக்களை இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் றோகித் சர்மா 39 பந்தில் 6 பவுண்டரிகள், 6 சிக்சர்கள் அடங்கலாக 79, போலாட் 21 ஓட்டங்களையும் பெற்றார்.

பந்துவீச்சில் குமார் கோனி சாவ்ளா, தலா ஒரு விக்கட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு 175 ஓட்ட வெற்றியிலக்காகக் கெ துடுப்பெடுத்தாடிய இஸ்லெ பஞ்சாப் டேவிட் ஹசி - 34 லர் 56, பிரவின்குமார் 24, யோர் சிறப்பாகச் செய போதிலும், 20 ஓவர்களில் த்து விக்கெட்டுக்களையும் ந்து 170 ஓட்டங்களை ம எடுத்து 4 ஓட்டங்களால் தே யடைந்தது.

பந்துவீச்சில் ஹர்பஜ யோன்ஸ்சன், குல்கர்ணி, ஆகியோர் தலா 2, மலி விக்கெட்டைக் கைப்பற்றி ஆட்டநாயகனாக றோகித் தெரிவானார்.

# வவுனியா நகரசபையின் ஆவணங்கள் தீக்கிரை
## உள்வீட்டு வேலையா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வவுனியா நகரசபையில் பாதுகாக்கப்பட வேண்டிய ஆவணங்கள் சில தீயில் எரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா நகரசபை உறுப்பினர்கள் சபை கூட்டங்களில் கலந்துகொள்ளும் போது கையொப்பம் இடப்படுகின்ற பதிவேட்டுப் புத்தகமே இவ்வாறு எரிக்கப்பட்டுள்ளது. தீயில் எரிந்த நிலையில் பதிவேட்டுப் புத்தகத்தின் சில பகுதிகள் மக்களால் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நகரசபை உறுப்பினர் ஒருவரை நகரசபையில் இருந்து இடைநிறுத்துவதற்கான முயற்சிகள் நகரசபை நிர்வாகத்தாலும் சில நகரசபை உறுப்பினர்களாலும் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அதன் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில அவ் உறுப்பினர் ஒழுங்காக கூட்டங்களுக்கு வருவதில்லை என்பதை வெளிப்படுத்துவதற்கான கையொப்பம் இடப்படுகின்ற பதிவேட்டுப் புத்தக ஆவணமே எரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா நகரசபைத் தலைவர் ஜ.கனகையா இது தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாது எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உண்மையான ஆவணங்கள் தான் எரிக்கப்பட்டவை என்று கண்டு பிடிக்கப்பட்டால் சம்மந்தப்பட்டவர் சட்ட ரீதியான பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டிவரும் என நகரசபைச் செயலாளர் எஸ்.வசந்தகுமார் தெரிவித்துளளார்.

### கால்பந்து சம்மேளனத்தில் நிதி மோசடி

ஏப்ரல் 29 ஆம் திகதி 2013 அன்று பிற்பகல் 08:37 மணிக்கு இலங்கை கால்பந்து சம்மேளனத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும், 5,.00 இலட்சம் ரூபா நிதி மோசடி தொடர்பில் ஆராய விஷேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சுகததாஸ நிர்வாக அதிகார சபைத் தலைவர் பிரிகேடியர் பிரியந்த சமரதுங்க தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

# கடற்கொள்ளையர்களால்
# 3 இலங்கையர்கள் கடத்த

(கொழும்பு)

இலங்கைப் பிரஜைகள் மூவர் உட்பட ஐவர் நைஜீரிய கடற்பரப்பில் வைத்து கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டுள்ளதாக சர்வதேச கடல்சார் பணியகம் அறிவித்துள்ளது.

சரக்குக் கப்பலில் இருந்தவர்களே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளதாக அந்தப் பணியகம் அறிவித்துள்ளது. ஏப்ரல் 25 ஆம் திகதியே இவர்கள் கடத்தப டுள்ளதாகத் தெரிவித்துள்ள ப யகம் இலங்கையைச் சேர் மூவரைத் தவிர ஏனைய இரு ரும் ரஷ்ய மற்றும் மியன் நாட்டுப் பிரஜைகள் என தெர வந்துள்ளது.

ஆயுதம் தாங்கிய 14 கொண்ட குழுவினர் இந்தக் பலைக் கடத்தியுள்ளதாகப் ப யகம் அறிவித்துள்ளது.

# மரண அறிவித்தல்

## பாலகிருஷ்ணன் புனிதம்மா



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும், நாவற்குழி புதிய குடியேற்றத்திட்டத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பாலகிருஷ்ணன் புனிதம்மா 29.04.2013 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் (சிற்பாச்சாரியார்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - அன்னம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லையா - அன்னபூரணம் அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கேதீஸ்வரன், அருளானந்தம், மற்றும் துரைராசவடிவேல் ஆகியோரின் அன்புச் சகோதரியும், வரதராசா, காலஞ்சென்ற கமலாம்பாள், நாகரத்தினம், ரெங்கநாதன் ஆகியோரின் மைத்துனியும், தணிகாசலம், (நந்தன்) காலம்சென்ற சிவானந்தம் மீனலோசனி, ஜானகி, கமலநாதன், ஜமுனா, உஷா, வத்சலா ஆகியோரின் அன்புத் தாயாரும், சக்திவேல், ராஜ்குமார், தயாநிதி, பரமேஸ்வரன், தங்கராசா, நொயில் பெரேரா, ஆகியோரின் அன்பு மாமியாரும், விஜித்திரன், விஜித்திரா, கார்த்திகா, சுகன்யா, கிருஷ்ணப்பிரியா, பிரதீபா, ஜசிந்தன், சக்தி, சயந்தன், சிந்துஜ பதுசன், பாலகணன், பாலகீதனன், ஷாமினி, பவன், பவானி, யோரின் பேத்தியும், அருணன், ஆருஸ், விஸ்மயா ஹரணி, சாய் கிரீஷ் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 01.05.2013 (புதன்கிழமை) நண்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கைதடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல் ப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி:
புதிய குடியேற்றத்திட்டம்,
ஐயனார் வீதி,
நாவற்குழி, யாழ்ப்பாணம்.

(C/2519)

தகவல்:
குடும்பத்தினர்

# கனரக வாகனங்கள்
# முட்டிமோதின

வவுனியா, பூனாவ பகுதியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் ஐவர் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏ - 9 வீதியில் பயணித்துக் கொண்டிருந்த இராணுவ ட்ரக் வாகனத்துடன் டிப்பர் வாகனம் மோதியதிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக காயம ந்த இராணுவ வீரர்கள் நா பேரும் டிப்பர் வாகனத்தின் தியும் வவுனியா பொதுவை தியசாலையில் அனுமதிக்கப் டுள்ளனர். இதேவேளை சம்ப இடம்பெற்ற இடத்தில் வவுனி பொலிஸார் விசாரணைகள மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கை கடற்படையினருக்கு
# அமெரிக்கா கடல்சார் பயிற்சிகள்

அமெரிக்கா இலங்கை மீதும், படையினர் மீதும், மனித உரிமை மீறல குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருகின்ற போதிலும், இலங்கையின் கடலோரக் காவல்படை மற்றும் கடற்படைக்கு தொடர்ந்து பயிற்சிகளை அளித்து வருகிறது.

இலங்கையின் கடலோரக் காவல்படை மற்றும் கடற்படை அதிகாரிகளின் இரண்டாவது குழுவுக்கு, கடல்சார் சட்ட நடைமுறைப்படுத்தல் வழிகாட்டு பாடநெறியை அமெரிக்க கடலோரக் காவல்படையின் நடமாடும் பயிற்சிக் குழு கற்பித்துள்ளது.

இந்தப் பயிற்சியில் பங்கேற்ற அதிகாரிகளுக்கு சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வு திருகோணமலை கடற்படைத் தளத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே சிசன் இந்த நிகழ்வில் பங்கேற்று சான்றிதழ்களை வழங்கியுள்ளார்.

இதன்போது அமெரிக்க - இலங்கை கடலோரக் காவல்படைகளுக்கு இடையில், பொதுவான கடல்சார் அச்சுறுத்தல்கள், நிபுணத்துவப் பயிற்சியின் முக்கியத்துவம், அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது போன்ற கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்தியுள்ளார்.

இதுபோன்ற பயிற்சிக தொடரும் என்றும் அவர் மே குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கடற்படைக் கப களில் வைத்து, அமெரிக்க லோரக் காவல்படையின் நட டும் பயிற்சிக் குழுக்களினால் இ தப் பயிற்சிகள் அளிக்கப்பட்ட

ஏப்ரல் 15 ஆம் நாள் ஆரம் மான இந்தப் பயிற்சியில் 19 க லோரக் காவல்படையினரும், கடற்படையினரும் பங்கேற்றன

இந்தப் பயிற்சிநெறியை அமெரிக்க இராஜாங்க, உ நாட்டு பாதுகாப்பு, வர்த்தக, சக் மற்றும் பாதுகாப்பு திணைக்கள களின் நிபுணர்கள் இணைந் வடிவமைத்திருந்தனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஏப்ரல் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.